# மறை ஞானப்பேழை



சத்தியம் வந்துவிட்டது !
அசத்தியம் அழிந்து விட்டது !
நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !

**November 2024 நவம்பர் 2024**



மௌலவி, அல்ஹாஃபிழ், Dr. M.ஷைகு அப்துல்லாஹ் (ஜமாலி) ஆலிம் MA,Ph.D அவர்கள்
(தலைவர், ஸைய்யித் ஜமாஅத்துல் பேரியக்கம்- சென்னை, ஆலோசகர் மதரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் திருச்சி தமிழ்நாடு முதல்வர் கைருல் பரிய்யா அரபிக் கல்லூரி சென்னை.)

Retail Selling Price 25
Page 1

Volume - 16, Issue - 8

# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

**அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்**

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)



சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

ஜமாலிய்யா அஸ்ஸையித்

யாஸீன் மௌலானா (ரலி)

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 300/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 3000 /- |

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**

அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**

குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜுத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**

கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**

கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**

J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**

R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**

ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**
13. எம்.ஆர்.ஆர். நகர்
திண்டுக்கல் - 624 002.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com
https:www.emsmedia.net
https:www.awniyyabookstore.com
https:www.yaseenrali.com


# மறை
# ஞானப் பேழை


ரபீவுல் அவ்வல் -ரபீவுல் ஆகிர்

**நவம்பர் 2024**

**Volume - 16 Issue 9**


## பேழைக்குள்......


ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்

திருமறைப் பக்கம்.

அமுத மொழிகள்.

உமர் (ரலி) புராணம் – நயம்.

அஹ்லுபைத்துகளை ஏன் பின்பற்ற வேண்டும்?

அவ்ன் நாயகரின் அருமைகள்.

அறபு இலக்கிய வளர்ச்சி

ராபியா பஸரீ (ரஹ்)

கத்தார் - துபை- சிங்கப்பூர்–ஈரோடு– மீலாது– நூல் வெளியீட்டு விழாக்கள்.

வழிந்தோடும் வாழ்க்கை.

முஹிய்யுத்தீனிய சன்னிதானம்

பல்லக்கு தம்பி வலிய்யுல்லாஹ்.

சற்குரு சரித்திரம்.

மற்றும் தொடர்கள்.

# ஈமானைப் பாதுகாப்பீர்!

இன்று, தமிழகத்தில் தரீக்காக்களின் மறுமலர்ச்சி நிறைந்திருக்கிறது.

அதே போல ஷைகுமார்களும் நிறைய காட்சி தருகின்றார்கள்.

தரீகாக்கள் மக்களிடம் இஷ்கே ரஸூலை வளர்த்திருக்கின்றன.

அதன் காரணமாக மீலாது விழாக்கள், கந்தரிகள், ஊர்கள் தோறும் உயிர்ப்புடன் நடைபெறுகின்றன.

அதேநேரம், தரீக்காக்களின் உயிர் நாடியான ஞானம் உயிர் பெற்று உலா வருகின்றதா என்று பார்த்தால் அது கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது.

ஒரு ஷைகை எப்படி நம்பவேண்டும்? அவரை எந்த இடத்திற்கு உயர்த்திப் பின்தொடர வேண்டுமென்று மார்க்கம் சொன்னதோ– ஸூபியாக்கள் காட்டித் தந்தார்களோ அந்த அளவுக்கு பின்தொடர்வோர் முற்றுமாக குருமார்களுக்கு அடிபணிந்து நடக்கின்றனர்.

ஆனால், ஷைகுமார்கள் எனப்படுவோர், அந்தத் தரத்திற்குத் தகுதியானவர்களாக இருக்கின்றார்களா என்பது அவர்களின் ஞான உயர்வை வைத்தல்லவா முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

சில ஷைகுமார்கள் வஹ்ஹாபியத் தலைவர்களைப் போற்றிப் பேசும்போது நம் தலையே சுற்றுகிறது.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு உரிய மரியாதை தராதவர்களை ஏற்க, இவர்களின் மனம் எப்படித் துணிகிறது? என வியப்பாக இருக்கிறது.

சங்கைக்குரிய குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் உஜுத், ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள், “ ஒரு நல்ல ஷைகை எவ்விதம் கண்டுபிடிப்பது? எனக் கேட்டபோது, யாரிடம் மெய்ஞ்ஞானம் – குறிப்பாக வஹ்தத்துல் உஜூது இருக்கிறதோ அவர்தான் ஷைகாக வழிகாட்டத் தகுதியானவர்”என விளக்கினார்கள்.

இந்த அளவு கோளை வைத்துப் பார்த்தால் எத்தனை பேர் இந்த வட்டத்துக்குள் வருவார்கள் எனப் புரிந்துவிடும்.

வஹ்ஹாபிஸம் தொடர்புள்ள ஷைகைப் பின் தொடர்வதைவிட சாதாரண – பாமர– முஸ்லிமாக இருந்துவிட்டுப்போவது ஈமானுக்குப் பாதுகாப்பு.

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**

**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**

**ஜமாலிய்யா**

**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



## ஷரீஅத்தின் அவசியம் !

இஸ்லாத்தில் கூறப்படும் ஷரீஅத் முறைகளை உங்களால் முடிந்த அளவு பேணிப் பாதுகாக்க வேண்டும். பர்ளான காரியங்களை அவசியம் செய்துவர வேண்டும். பர்ளான காரியங்களுக்கு மாற்றமாகப் போய்விடக் கூடாது. சுன்னத்தான காரியங்களை முடியுமான அளவு செய்துவர வேண்டும். செய்ய முடியாமற் போனால் கூட பரவாயில்லை. இப்படியான நிலைகளில் தான் தவ்ஹீத் நிலையைப் பாதுகாக்க முடியும் ஷரீஅத் வேலி போன்றது. ஒருவரிடம் ஷரீஅத் முறிந்து போனால் தவ்ஹீத் நிலை இல்லாமற் போய்விடும்.

*– மனிதா – நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

# ஜமாலிய்யா தோட்டத்தில்

♦ ஆரம்பம், முடிவு இல்லாதது ஏகாந்தம். ஆரம்பத்திற்கு ஆரம்பமோ முடிவிற்கு முடிவோ இல்லாதது ஏகாந்தம் ளாஹிர் ஆகவும் பாதினாகவும் – உள்ளாகவும் வெளியாகவும் இருப்பது ஏகாந்தம். எங்கும் பரவி விரவி இடைவெளியின்றி வியாபித்திருப்பது ஏகாந்தம்.

♦ உடலில் –உடையில் பட்டிருக்கும் எந்த அசுத்தத்தையும் சவர்க்காரம் (சோப்பு) முதலிய பொருட்களைக் கொண்டு சுத்தப்படுத்திக் கொள்ளலாம். உள்ளத்தில் இருக்கக்கூடிய அசுத்தத்தை நீக்குவதற்கு எவ்வளவுதான் தண்ணீர் குடித்தாலும் அது போகாது. அதற்கு இப்படியான திக்ருகள் அவசியம்

♦ குளிக்கும் போது ஸலவாத்து ஓத வேண்டும். எமது உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்;கஷ்ட நஷ்டங்கள் நீங்க வேண்டும். குறிப்பிட்ட நோய்களிருந்தால் அவற்றைக் குறிப்பிட்டுக் கூறி அந்நோய்கள் நீங்க வேண்டும் எனவும் கூறி வர வேண்டும். எங்கள் குணநலன்களை அழகாக்குவாயாக எங்கள் நற்செயல்களைச் சிறப்பாக்குவாயாக ! என்பன போன்ற துஆக்களையும் ஓதவேண்டும்

♦ இன்ஸானின் உள்ளேதான் இலாஹிய்யத்தான சக்திகள் நிலைமைக்கேற்ப உண்டாகின்றன. ஹக்கின் அஸ்மா – ஸிபாத்துக்கள் அவனில் (இன்ஸானில்) அப்படியே தஜல்லியாகின்றன. அப்போது பூரணமான எனும் நாமம் தன்னிலாக அவன் ஹக்கில் இரண்டறக் கலக்கிறான். அப்போது தான் அவன் அறியாத இன்பங்கள் எல்லாவற்றையும் அடைகிறான். அவன் நாடாத விரும்பாத, பெயர் தெரியா ஆலமெல்லாம் சஞ்சாரம் செய்கிறான் .

♦ கணவன் மனைவி இருபேர்களில் யாரேனும் ஒருவர் புத்திசாலியாக இருக்க வேண்டும். அப்போதுதான் அந்தக் குடும்பம் முன்னேற்றம் அடையும்.

♦ பெண்கள் பல்கலைக் கழகமாக விளங்கும் குடும்பத்தை உருவாக்குகின்றவர்கள். பெருமானாரின் குடும்பவியலைப் படித்துப் புரிந்து கொள்வதே பெண்களுக்குச் சிறந்த கல்வியாகும்.

*– மனிதா – நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

கொய்த மலர்



# தாஜுத் தர்ஜுமா

# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

**(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)**

وَلَتَجِدَنَّهُمْ أَحْرَصَ النَّاسِ عَلَىٰ حَيَوٰةٍ ۚ وَمِنَ الَّذِينَ أَشْرَكُوا ۚ

மேலும், நிச்சயமாக, இணைவைத்தவர்களை விடவும் (யூதர்களெனும்) அவர்களைப், பேராசை கொண்டவர்களாக (நபியே) நீங்கள் காண்பீர்கள்.

[யூதர்கள் நீண்ட நாள் வாழ்வின்மீது பேராசை கொண்டவர்கள்]

يَوَدُّ أَحَدُهُمْ لَوْ يُعَمَّرُ أَلْفَ سَنَةٍ ۚ

அவர்களில் ஒவ்வொருவரும் ஆயிரம் வருடங்கள் (வயது) நீடிக்கப்பட்டு உயிர்வாழ வைக்கப்பட வேண்டும் என்பதை விரும்புகிறார்.

وَمَا هُوَ بِمُزَحْزِحِهِ مِنَ الْعَذَابِ أَنْ يُعَمَّرَ ۗ

(ஆயினும், நீண்டகால) ஆயுள் அளிக்கப்படுகிற(தென்பதனால்) அது, (அவர் செய்த பாபத்திற்காக நரக) வேதனையிலிருந்து அவரைத் தூரப்படுத்தாது.

[அவர் நீண்ட காலம் வாழ்ந்தாலும் செய்த பாபத்திற்கு வேதனை எப்போதாயினும் கொடுக்கப்படும் என்பது கருத்து.]

وَاللَّهُ بَصِيرٌ بِمَا يَعْمَلُونَ ۝ ٩٦ ع 11

இன்னும் அவர்கள் செய்வதை அல்லாஹ் தெளிவாய்ப் பார்க்கிறவன்.

قُلْ مَنْ كَانَ عَدُوًّا لِّجِبْرِيلَ فَإِنَّهُ نَزَّلَهُ عَلَىٰ قَلْبِكَ بِإِذْنِ اللَّهِ

مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَهُدًى وَبُشْرَىٰ لِلْمُؤْمِنِينَ ۝ ٩٧

அவருக்கு முன்னிருந்த வேதங்களை உண்மைப் படுத்துகிற (குர்ஆன் வேதத்)தை அல்லாஹுவின் ஆணை கொண்டு உங்கள் இருதயத்திலே (ஜிபுரீலாகிய) அவரேதான் இறக்கிவைத்தார் என, எவர் ஜிபுரீல் (அலை) அவர்களுக்கு, எதிரியாக உள்ளாரோ அவருக்கு, நபியே, நீங்கள் கூறுங்கள். இன்னும் (அது) நேர்வழியாகவும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தியாகவும் உள்ளது.

مَنْ كَانَ عَدُوًّا لِّلَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ وَرُسُلِهِۦ وَجِبْرِيلَ وَمِيكَىٰلَ

فَإِنَّ ٱللَّهَ عَدُوٌّ لِّلْكَٰفِرِينَ ٩٨

அல்லாஹுவுக்கும் அவனுடைய வானவர்களுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஜிபுரீல் (அலை) அவர்களுக்கும் மீகாஈல் (அலை) அவர்களுக்கும் எவர் பகைஞராகி (அவர்களை மறுப்பவராகி) ய அத்தகைய மறுப்பாளருக்கு, இறைவனும் நிச்சயமாகவே பகைவனாயிருப்பான்.

وَلَقَدْ أَنزَلْنَآ إِلَيْكَ ءَايَٰتٍۭ بَيِّنَٰتٍ ۖ

இன்னும், தெளிவான வேத வாக்கியங்களை உங்கள் மீது நிச்சயமாகவே இறக்கிவைத்தோம்.

وَمَا يَكْفُرُ بِهَآ إِلَّا ٱلْفَٰسِقُونَ ٩٩

அயோக்கியர்களைத் தவிர (வேறெவரும்) அவைகளை மறுக்க மாட்டார்கள்.

---

**(ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழி பெயர்ப்பு)**

---

96.மேலும் (நபியே! அந்த யூதர்கள்) மற்ற மனிதர்களை விடவும் (குறிப்பாக) இணைவப்பவர்களை விடவும் (நீண்ட நாள்) உயிர்வாழ மிகவும் பேராசை உடையவர்களாக இருப்பதை நிச்சயம் காண்பீர்! அவர்களில் ஒவ்வொருவனும் தான் ஆயிரம் ஆண்டுகள் உயிர் வாழ வேண்டுமே? என்று விரும்புவான். (அவ்வாறு நீண்ட நாள்) உயிருடன் இருக்க அவனை அல்லாஹ் விட்டுவைத்தாலும் அது வேதனையிலிருந்து ஒரு சிறிதும் அவனைத் தப்பிக்க வைத்துவிடாது. அல்லாஹ் அவர்கள் செய்வதை உற்று நோக்குபவன் ஆவான்.

97.(உங்களில்) எவர் ஜிப்ரீலுக்கு எதிரி என (நபியே) யூதர்களைக் கேட்பீராக. நிச்சயமாக அவர் இதை அல்லாஹ்வின் கட்டளைப்படியே உமது உள்ளத்தில் இறக்கி வைத்தார். இது தனக்கு முன்னுள்ள (வேதத்) தை உண்மைப்படுத்துவதாகவும், நேரான வழியை அளிக்கக்கூடியதாகவும் நம்பிக்கை உடையவர்களுக்கு நற்செய்தியாகவும் இருக்கிறது.

98.(உங்களில்) எவரேனும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய வானவர்களுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஜிப்ரீலுக்கும் மீக்காயீலுக்கும் எதிரியாகி (அவர்களை நிராகரித்து) விட்டால் (அந்) நிராகரிப்பவர்களுக்கு நிச்சயமாக அல்லாஹ்வும் எதிரி ஆவான்.

99. (நபியே) நிச்சயமாக மிகத் தெளிவான வசனங்களையே உமக்கு இறக்கி இருக்கிறோம். பாவிகளைத்தவிர (மற்றெவரும்) அவற்றை நிராகரிக்க மாட்டார்கள்.

---

## பட்டோலை

குத்புல் மத்ஹரிய் அவர்கள் நம்மைப் பற்றிக் கூறியதாவது: கருத்து. நீங்கள் ஆயிருந்தால் எங்கிலும் நீங்கள் அந்த ஹக்குத்தான். அந்த ஹக்கின் திரு நாமங்களிலுள்ள மறைந்த நிழலும் நீங்கள்தான், சூரியனும் அந்த ஹக்குத்தான். இதில் சூரியனும் அந்த ஹக்குத்தான் என்று கூறியதில் நமது குத்பிய்யத்தை அது விளக்குகிறது.

அளப்பரிய சேவை செய்தீர்கள். யாஸீனுக்கல்ல. யாஸீன் எந்த ஹக்கின் சாயலாகவிருக்கிறதோ அந்த ஹக்கைக் கண்ணியப்படுத்தினீர்கள். கௌரவப்படுத்தினீர்கள். உண்மையான இபாதத்தான தியாகத்தின் பெரும் பகுதியை நிறைவேற்றினீர்கள். ஹக்கில் ஹக்கானீர்கள். மறக்க முடியாத ஞாபகத்தில் உறுதிப் படுத்தினீர்கள்.

*ஸாஹிபுல் வக்த், ஷம்ஸுல் வுஜூத், ஹக்குல் முபீன், குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸைய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யில் ஹாஷிமிய்யி வாப்பா நாயகம் அவர்கள் தங்கள் கலீபா அல்ஹாஜ் அப்துல் கரீம் (ஜமாலி) அவர்களுக்கு எழுதிய பட்டோலையிலிருந்து.*

உலக வாழ்க்கை கனவேயன்றி வேறன்று. உலகமே, உலகமே, வாழ்க்கையே என்று அநேகர் மயங்கி ஹக்கை மறந்துவிட்டனர். ஆனால், உண்மை மகான்கள் உலக வாழ்க்கையை மவுத்தாகவே கருதினார்கள். தங்கள் மெய்ம்மறந்தார்கள். (மெய் என்பது உடலை) இதனாலேயே என் வாப்பா நாயகம் அவர்கள் கீழ்க்கண்டவாறு யவானிஇல் கூறிகிறார்கள்.

அர்வாஹ்டைய ஆலத்தில் நான் எப்படியிருந்தேனோ அப்படியே இருக்கிறேன். அப்படியிருப்பதனால் இங்கே நான் இறந்தவன் போலானேன். ஆனால் இதுவே

ஹக்கான சீவியமாகும். மனிதன் எனும் உடலிலே பலவகையான வகையினர் உள்ளனர்.

இவர்களும் மிக அநேகர் மிருகங்களையே ஒத்தவர்கள். இவர்கள் தம்மை முஸ்லிம் எனக் கூறிக் கொள்வார்கள். ஆனால் இஸ்லாத்தின் முதற்கடமையான கலிமா என்றால் என்ன என்ற அதன் தாற்பரியத்தை அறியாதவர்கள். இவர்கள் எப்படி முஸ்லிம்களாவார்கள். அல்லாஹ் அவர்களை நேர்வழி காட்ட வேண்டும். அவர்கள் நேர்வழி காட்டும் மகான்களைக் கண்டு அவர்களுக்குக் குர்பானீகளாகவேண்டும்.

*ஸாஹிபுல் வக்த், ஷம்ஸுல் உவுஜூத், ஹக்குல் முபீன், குத்புஸ்ஸமமான் ஜமாலிய்யா அஸ்ஸைய்யித் கலீல் அவ்ன் மௌலானா ஹஸனிய்யில் ஹாஷிமிய்யி வாப்பா நாயகம் அவர்கள் தங்கள் கலீபா அல்ஹாஜ் அப்துல் கரீம் ஜமாலி அவர்களுக்கு எழுதிய 2/8/ 1966 பட்டோலையிலிருந்து.*

---

## இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்...

ஆருயிர் செய்கு நாயகம் அவர்களின் முரீதும், மதுக்கூர் இடையக்காடு, பட்டுக்கோட்டையார் வீடு மருந்துக்கடை மர்ஹூம் முகமது யாக்கூப் அவர்களது மகனும், இமாமுதீன், அப்துல் ரஹ்மான், அன்வர்தீன், முகமது இப்னு ஆகியோரின் சகோதரரும், செல்லப்பா என்கிற நைனா முகமது அவர்களின் மச்சானுமாகிய, ரியாஸ் அஹமது, முகமது அமீன் ஆகியோரின் தந்தையுமான, அப்துல் கையும் அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள்...

அன்னாரின் பிழைகள் பொறுத்து ஜன்னத்துல் பிர்தவ்ஸை அல்லாஹ் அருள்வானாக. ஆமீன்.

---

## வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்துவிட்டீர்களா?

## மறைஞானப் பேழை சந்தா அனுப்பவேண்டிய வங்கிக் கணக்கு எண்:

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**

**Indian Overseas Bank, SB A/c No. 209801000025255.**

**IFSC Code.IOBA 0002098**

**Branch- RM COLONY. DINDIGUL**

**பெயர் – முகவரி** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**

## திருக்குறள்

**செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்**
**காக்கின் என் காவாக்கால் என் (301)**

தனக்குச் செல்லக் கூடிய இடத்திலும் சினத்தைக் காப்பவனே காப்பவன். செல்லாத இடத்திலே காத்தால் என்ன? காவாதிருந்தால் என்ன?

---

**செய்யாத செய்தும்நாம் என்றலும் செய்வதனைச்**
**செய்யாது தாழ்த்துக் கொண்டோட்டலும் – மெய்யாக**
**இன்புறூவும் பெற்றி இகழ்ந்தார்க்கும் அந்நிலையே**
**துன்புறூவும் பெற்றி தரும்** *(நாலடியார்)*

செய்ய முடியாததை யாம் செய்வோம் என்று பொய்ப் பெருமை பேசுதலும் செய்யக்கூடியதைச் செய்யாமல் காலந் தாழ்த்தி நீட்டிக் கொண்டு போதலும் (ஆகிய இரண்டும்) உண்மையில் இன்புறும் நுகர்வை வெறுத்த துறவியர்க்குங் கூட அப்பொழுதே துன்புறும் நிலைமையை உண்டாக்கும். (235)

---

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**பிறை**

**3 ரபீவுல் அவ்வல்**

1 புனித மீலாது மாதம் தொடக்கம்
10 நாகூர் பாதுஷா (ரலி) ஜனனம்
12 சங்கைமிகு மீலாதுன்னபீ
12 க்வாஜா குத்புதீன் பக்தியார் காக்கீ (ரலி) மறைவு
16 நிளாமுத்தீன் அவ்லியா (ரலி) கந்தூரி

---

**4 ரபீவுல் ஆகிர்**

11 கௌதுல் அஃளம் முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானீ (ரலி) மறைவு
25 பல்லாக்கு வலி (ரலி) மறைவு
28 முஹிய்யுத்தீன் இப்னு அரபி (ரலி) மறைவு

---

## மறைஞானப் பேழை சந்தா செலுத்திவிட்டீர்களா?

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்

# அமுத மொழிகள்



## இறைவனை அணுகத் தகுதி!

♦ இறைவனின் சங்கையான நிலைக்குள் ஒருவன் புகுத வேண்டுமானால் அவன் சிலவிடயங்களை தன்னிலிருந்து நீக்கிக் கொள்ள வேண்டும். அல்லது ஹராமாக்கிக் கொள்ள வேண்டும். அவை ஆட்சி உலகு, அமர உலகு, சக்தி உலகு ஆதிய மூன்றும். இவற்றை மனிதன் திரும்பியும் பார்க்கக் கூடாது. ஏனெனில் ஆட்சி யென்பது , தலைமைத்துவம் எனும் மமதை. இது, கற்றவனுக்கு அல்லது பொது மனிதனுக்கு செய்த்தானாகும் (பேயாகும்). அமர உலகு என்பது, சித்துக்காக அமர உலகில் வலிமைபெற அதை மட்டுமே நாடி அதில் ஆசைவைப்பது ஆரிபாகிய ஞானிக்கு செய்த்தானாகும். சக்தி உலகென்பது, அதிலே காட்சிகளையும் கண்டு சித்துகளையும் செய்து இறைவனை மறந்து வீணாகவிருப்பது இறைவனை இரண்டறக் கலக்க விரும்புவோனுக்கு செய்த்தானாகும். இவற்றில் எதை எவன் விரும்புவானோ அவன் இறையிடத்திருந்து விரட்டப்பட்டவன். எனவே இறைவனை எவன் விரும்புவானோ அவன் வேறெதிலும் விருப்பங்கொள்வது அறவே நீக்கப்படல் வேண்டும். இறைவனிலேயே தனது முழு எண்ணமும் இருத்தல் வேண்டும். அப்படியாயினே அவன் இறைவனில் இரண்டறச் சேரும் தன்மை யுடையவனாவான்.

♦ முழுமையான அன்புள்ள ஒருவனுக்கே இறைவனை அடையமுடியும். அவன் தன் தாய் தந்தை மனைவி மக்கள் அனைவரையும்விடக் கூடுதலான அன்பை இறையிடத்துச் செலுத்தல் வேண்டும். அவ்வாறிருப்பினே இறைவனின் அன்பும் அவனை அடையும். பயனும் கிடைக்கப் பெறும். இறை அல்லாத மற்ற எல்லாவற்றிலிருந்தும் எவன் ஒழிந்து போவானோ அவனே இறைவனை அணுகத் தகுதி வாய்ந்தவனாவான்.

# அமுத மொழிகள்

♦ அறிவெல்லாவற்றிலும் அறிவென்பது நாம் கற்ற அதனால் எமக்குப் பெருமையைத் தருகிற அறிவெல்லாவற்றையும் மறந்து விடுவது. ஆயின் பரிசுத்த இறையை அறியும் சிறப்புமிக்க அறிவே அறிவெல்லாவற்றிலும் மேலான அறிவாகும் என்பதாம்.

♦ இறைவனை அடையும் நாட்டத்திலே பெருமுயற்சி செய்துவரும் உள்ளத்தின் கொடிய யுத்தத்தின் பக்கம் எவன் சாய்ந்திருப்பானோ அவன் நிச்சயம் இறைவனையடைவான். அவனுக்கே சோபனம்.

♦ எவன் தன்னுடைய உள்ளம் நான் என்னும் மமதையின் பக்கம் சாய்ந்திருக்குமே அவனுக்கே கேடு. ஏனெனில் அவன் இறைவனை அடையாத வழிகெட்டவன்.

♦ மிஉராஜ் என்பது இறைவனல்லாத மற்றெல்லாவற்றையும் விட்டு நீங்கியிருப்பது. இறைவனிலேயே தனது நாட்டத்தைச் செலுத்தி அவனல்லாது வேறில்லையென முழுமையாய் நினைத்து நானும் அதுவுமொன்றே அதற்கும் எனக்கும் எந்தப் பிரிவுமில்லை. நான் பூரணமாய் அதிலானேன் எனக்கருதித் தன்னையும் தன் எண்ணத்தையும் முழுமையாய் இறையில் அருப்பணிப்பதே மிஉராஜ் எனும் உயர்ச்சியாகும். இந்த மிஉராஜின் முழுமை இறைவனை முழுமையாய் பார்வை மழுங்காமற் காண்டலாகும். பார்வை மழுங்கலென்பது இறைவனைப் பிரிவு பிரிவாய் சிறிது சிறிதாய் எண்ணி நானும் நீயும் வேறு எனும் நிலையில் எண்ணத்தைச் சின்னாபின்னப்படுத்தி ஒரு பொருளைக் கூறுபடுத்துவது போல் இறைவனைக் கூறுபடுத்திச் சித்திரவதை செய்யும் நிலையாகும். இந்த உயர்ச்சியின் நிலை மட்டையும் கடக்காது அனைத்தும் நானே எனும் மன்ஸூருல் ஹல்லாஜ் (ரலி) அவர்களின் உன்னத நிலையை அடைவதாகும்.

♦ அனைத்தும் நானே; நானே ஹக்கு. எனும் நிலையே மட்டைக்கடக்காத உண்மை நிலையாகும்.

♦ நானே இறைவன் என்று மமதையுடன் பிர்அவ்ன் கூறிவந்த நிலைமையே மட்டைக் கடந்த நிலையாகும். எனவே இதில் இரண்டு நிலையுண்டு. ஒரு நிலை, ஹக்கையே அறியாது மமதைகொண்டு தானே இறைவன் என்று கூறிக் கொண்டது. இரண்டாவது நிலை. அனைத்தும் நானே என்று இறைவனை அறிந்து பூரணமாய் இரண்டறக் கலந்து மாறா இன்பமடையும் நிலை. அறியாத மூடர்கள்,

# அமுத மொழிகள்

இறைவனைக் கூறுபோட்டு இறை தண்டனையை அடையும் நிலையையும் இறையின்பத்தை அடையும் நிலையையும் இரண்டாகக் கலந்து காண்பதோடு உண்மைக்கு மாறாகவும் பேசித்திரிவது பித்துப் பிடித்த மந்த நிலையாகும்.

♦ அல்லாஹ் மிகத் தூரத்தில் இருக்கிறான் என நினைப்பது அறிவற்றோரின் நினைவு. அறிவற்றவன் தான் அல்லாஹ்விலிருந்து மிகத் தூரத்தே இருப்பதாக நினைக்கிறான். இப்போதுதான் உகப்பென்பது வெளியாகும். அது ஒருவன் மற்றவனை உகப்பது போன்றது. ஹக்காகிய யதார்த்தமென்னும் இறைவேறு; அதிலிருந்து உடம்பாகிய நாம் வேறுபட்டுள்ளோம் என நினைப்பதனாற்றான் உகப்பு எனும் காதல் உண்டாகிறது. இவ்வாறு ஏற்படுவதனால் இறைக்கும் சிருஷ்டிக்கும் இடையில் வேறுபாடுண்டாகின்றது. இதுவே இணையெனும் ஷிர்க்காகும். இதுவே உகக்கிறவனுக்கும் உகக்கப்பட்டவனுக்கும் இடையிலுள்ள திரை. உகப்பு எனும் உணர்வு தன்னைவிட்டு நீங்கும்போது ஹக்குக்கும் கல்குக்கும் இடையில் உள்ள வேறுபாடு நீங்கி ஒற்றுமையென்னும் ஏகத்துவம் என்னும் இரண்டறக் கலக்கும் இறைமை அவனில் உண்டாகும். உகப்பவனும் உகக்கப்பட்டவனும் ஒன்றானால் உகப்பு எங்கே உள்ளது?

(ரிஸாலா கௌதிய்யா வில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள்.)

---

■ விலாயத் – இயற்கையாக ஏற்படுவது தான். இறையோடு இரண்டறக் கலந்த நிலையில் இருப்பவர்கள் தாம் விலாயத்தையுடையவர்கள்

■ வலிமார்களுடைய நிலை எந்த நாளுமே மிஃராஜ், ஹக்கோடு சம்மந்தப்படுவதெல்லாம் வலிமார்களுக்கு மிஃராஜ். முஃமின்களுக்குத் தொழுகைதான் மிஃராஜ்

■ மிஃராஜின் போது இறைவனுக்கும் இரசூல் (ஸல்) அவர்களுக்கும் நிகழ்ந்த உரையாடலாகிய அத்தஹிய்யாத் (தின் பொருளைக் கவனித்தால்) அல்லாஹ் – இரசூல் எதிரேயிருந்து பேச்சுகளைப் பரிமாறிக் கொள்வது போல தெரிகிறது. ஆனால் இரண்டுமே ஒன்றாயிருப்பதுதான்

■ பரிசுத்த ஏகத்தில் கலந்திருக்கிறாரோ, பரிசுத்த ஹக்கில் பிரியாதிருக்கிறாரோ அவரே உண்மையான குத்பாவார். அவர் பல ரூபத்திலும் காட்சி கொடுப்பார்...

*– மனிதா – நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

படித்தேன்
பகர்கிறேன்.

உள்ளம் கவரும்

(கலீபா. ஆலிம் புலவர்)

# உமர் ரலி புராணம்

*(நேரிசை வெண்பா)*

**நாடு நலம்பெருக நல்லோரு மாய்ந்தோர்ந்த**
**ஏடு புகழோரு மீர்மையரும் - கேடிலரும்**
**உண்டேல் நிலம்பொலியும் ஊண்விளையும் சீர்பெறுமே**
**கண்டாலு(ம்) நன்னிலமே காண்பர்.**

**பொருள் :**

நாடு உயர்வு பெருக, நல்லவர்களும் ஆராய்ந்து அறிந்த நூல்கள் புகழும் தன்மை யுடையோரும் இரக்கத் தன்மையுடையோரும் பொல்லாங் கற்றோரும் நாட்டினிலிருப்பரேல் நிலவளம் பொலியும். ஊண் விளையும். நாடு புகழ் பெறும். மற்றவர் காணினும் நன்னிலத்தையே காண்பர். :

**குறிப்பு:**

நலம்: உயர்வு. பெருக: அதிகப்படியாக. ஆய்தல்: ஆராய்தல். ஓர்தல்: அறிதல். ஏடு: நூல். புகழேடு: புகழ் பெற்ற நூல்கள். ஈர்மை: இரக்கம். கேடு:பொல்லாங்கு. உண்டேல்: இருப்பரேல். சீர்: புகழ்.

ஒரு நாட்டின் உயர்வு எவற்றில் உள்ளது? மனிதப் பண்புகளை ஆராய்ந்து இப்படித்தான் மனிதன் வாழ வேண்டுமென நூல்கள் வகுத்துக் கூறும் பண்புகளை உடையவர்கள் அங்கு வாழ்வதாலும், தயவு, இரக்கம் மிகுந்து, பிறர் துன்பம் காணச் சகிக்காமல் வாரி வாரி வழங்கும் வள்ளல் தன்மை உள்ளவர்களாலும், மேலும், தீய–பாவச்செயல்களை விட்டு நீங்கியவர்களும் இருந்தால், அந்நாட்டுக்கு நல்ல பெயர் கிடைக்கும். அறபு நாட்டின் கொடைவள்ளல் ஹாத்திம் தாயையும், தமிழகத்தின் பாரி வள்ளலையும் மக்கள் என்றும் நினைவு கூர்வர். இத்தகைய நற்பண்புள்ளோர் வசிக்கும் நாடு இறைவனின் அருளுக்கும் தகுதியாகி வளம் பெருகும். வான் மழை பொழியும், பூமி நன்கு விளையும், பிற நாட்டுமக்கள் இந்நாட்டை மதிப்பான பார்வையால் பார்ப்பர். மகிழ்வர்.

# அஹ்லுல் பைத்துகளை ஏன் பின்பற்ற வேண்டும்?

முஹம்மது காலித் யாஸீனிய்,

பேராசிரியர் அறபுத்துறை, ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி.

மனிதர்களே அறிந்துக்கொள்ளுங்கள். எம்மிடம் மரணத்தூதுவர் வரும் நேரம் நெருங்கி விட்டது. நான் அவருக்கு விடையளிக்கப் போகிறேன். நான் உங்களிடையே பொறுப்பான இரண்டு விஷயங்களை விட்டுச் செல்கிறேன். அவ்விரண்டில் முதலாவது 1. அல்குர்ஆன். அதில் நேர்வழியும் பேரொளிவும் இருக்கிறது. ஆகவே அதை பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். இரண்டாவது 2. அஹ்லுல் பைத்துகள் என்ற என் குடும்பத்தார்களாகும். அவர்கள் விஷயத்தில் கவனமாக நடந்துக்கொள்ள வேண்டும் என்று அல்லாஹ்வை முன் வைத்து உங்களுக்கு எச்சரிக்கை செய்துகொள்கிறேன் என்று ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூன்று முறை கூறினார்கள். (முஸ்லிம், மிஷ்காத் 567)

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் செய்த தாங்களுடைய ஹஜ்ஜின் போது அரஃபாவின் தினத்தில் தாங்களின் கஸ்வா என்ற ஒட்டகத்தில் அமர்ந்த வண்ணம் ஒரு பிரசங்கம் செய்தார்கள். அந்தப் பிரசங்கத்தில் மனிதர்களே நீங்கள் எவைகளை பின்பற்றி நடந்தால் வழிதவறமாட்டீர்களோ அப்படிப்பட்டவைகளை உங்களுக்கு மத்தியில் விட்டுச் செல்கிறேன். அதாவது அல்லாஹ்வின் வேதமாகிய குர்ஆனையும் என்னுடைய அஹ்லுல்பைத் என்ற என்னுடைய வாரிசுகளை விட்டுச் செல்கிறேன் என்று கூறியதை நான் செவியுற்றேன் என்று ஸைய்யிதுனா ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(திர்மிதி, முஸ்னத் அஹ்மத், மிஷ்காத்)

அபூதர் (ரலி) அவர்கள் கஃபாவின் வாயில் கதவைப் பிடித்தவர்களாகக் கூறினார்கள். "யார் என்னைத் தெரிந்து கொண்டாரோ அவருக்கு என்னைப்பற்றித் தெரியும். என்னைத் தெரியாதவர்கள் நான் அபூதர் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். (என்னவெனில்) அறிந்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு மத்தியில் உள்ள எனது அஹ்லுல் பைத்துகளுக்கு உதாரணமாகிறது .நூஹு நபியின் கப்பலைப் போன்றதாகும். எவர் அதில் ஏறிக்கொண்டாரோ அவர் வெற்றிபெற்றார். யார் அதில் ஏறிக்கொள்ளவில்லையோ அவர் நாசமானார்" என்று நபிகள் நாயகம் அவர்கள் கூற நான் கேட்டேன். (மிஷ்காத் 573, ஹாகிம்: 2-343)

உங்களுக்கு நான் இரண்டு கலீபாக்களை விட்டு செல்கின்றேன். ஒன்று அல்லாஹ்வின் திருவேதம். அது வானத்திற்கும் பூமிக்குமிடையே நன்கு தொடர்புடையதாயிருக்கும். அடுத்து, என்னுடைய வழி தோன்றல்களான அஹ்லுபைத்துக்கள். அந்த இரண்டும் ஹவ்லுல் கவ்ஸரை வந்தடையும் வரை பிரிந்து விடாது. (அஹ்மத் : 5 –182)

என் மறைவுக்குப் பிறகு என் குடும்பத்தார்களுக்கு நல்லவரே உங்களின் நல்லவர் என்று ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பது அஹ்லு பைத்துகள் கியாமத்து நாள் வரை சங்கிலித் தொடராக வந்து கொண்டிருப்பார்கள், நாம் அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்பதற்குப் போதுமான ஆதாரமாகும்.

வள்ளல் நபியின் வழித்தோன்றலாக திகழும் சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயம் அவர்களின் மகத்துவத்தை அறிந்து அவர்கள் மீது நேசம் கொண்டு அவர்களை அடிமாறாமல் பின்பற்றினால் ஈருலகிலும் வெற்றி பெறுவது நிச்சயமே.

சங்கைமிகு யாஸீன் அலி நாயகம் அவர்கள் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நிலைமாறாத, மாற்றடையாத பூரணத் தோன்றலாவார்கள். நமது ஆருயிர் ஷைகு நாயகம் அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா நாயகம் அவர்கள் நமக்கெல்லாம் வரப்பிரசாதமாக அஸ்ஸய்யித் யாஸீன் அலி நாயகம் அவர்களைத் தந்துள்ளார்கள். தவ்ஹீதுடைய கல்வி நுணுக்கமானது, மிக உயர்வுமிக்கது. அத்தகைய மெய்ஞ்ஞானக் கல்வியை அவ்வப்போது நமக்கு மத்தியில் அருளி வருகிறார்கள்.

சில தினங்களுக்கு முன் தர்ஹா சம்பந்தப்பட்ட கூட்டத்தில் சங்கைமிகு நாயகம் அவர்கள் ஞான சம்பந்தப்பட்ட ஏழு பொக்கஷமான விஷயங்களை தெளிவாக எடுத்துரைத்தாரகள், ஞான தாகம் கொண்டு அலைவோரின் தாகத்தைத் தணிக்கும் நீர் அருவியாக அவர்கள் ஆற்றிய அருளுரை அமைந்திருந்தது. அந்த ஒரு விஷயமே அவர்கள் ஞானக்கடலில் கரை கண்டவர்கள் என்பதற்கு அந்த ஒரு அருளுரையை அத்தாட்சியாகும். அவர்களின் வார்த்தைகள் எவ்வளவு வலிமையானது என்பதனை ஒவ்வொரு முரீதும் அறிந்து கொண்டு வருகிறார்கள். நம்மில் சிலருக்கு அவர்கள் கூறிய வார்த்தைகள் அப்படியே நடந்து இருக்கிறது. அது அவர்களின் கராமத்தே அன்றி வேறில்லை. யாஸீன் அலி நாயகம் அவர்களை நம் வாழ்வில் பெற்றுக் கொண்டது அல்லாஹ் நமக்கு வழங்கிய மாபெரும் அருட்கொடை என்று தான் சொல்ல வேண்டும்.

அல்லாஹ் தன்னுடைய இறைநேசர்களுக்கு தன் புறத்திலிருந்து மறைவான விஷயங்களை அறிவித்துக் கொடுப்பான், அவை நபிமார்களுக்கு வஹி என்றும் வலிமார்களுக்கு இல்ஹாம் என்றும் கணக்கிடப்படுகிறது.

நபியவர்கள், நபி இப்ராஹீம் (அலை) அவர்களை முன் நிறுத்தி தன்னுடைய குடும்பத்தார்களுக்காக துஆ செய்தார்கள். அவ்வாறே இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கொடுத்த மறைவான ஞானத்தை போன்றும் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கொடுத்த மறைவான ஞானத்தைப் போன்றும் அல்லாஹ் நபியவர்களின் குடும்பத்தார்களுக்கும் மறைவான ஞானத்தை அறிவித்துக் கொடுக்கிறான்.

இப்ராஹிம் (அலை) அவர்கள் வரலாற்றில் முன்கூட்டியே குழந்தை பிறக்கப் போகும் நற்செய்தி சொல்லப்பட்டுள்ளதை திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது.

அறிவுள்ள **ஒரு மகன் பிறக்கப் போவதாக அவருக்கு நற்செய்தி அறிவித்தார்கள்.** அதனைக் கேட்டு அவருடைய மனைவி கூச்சலிட்டவாறு முன்னே வந்தாள். தன் முகத்தில் அறைந்து கொண்டு கிழவி, மலடி என்று கூறினார்.

அவர்கள் கூறினார்கள் "ஆம்" அவ்வாறுதான் (நடைபெறும்) என்று உன் இறைவன் கூறியுள்ளான். அவன் நுண்ணறிவாளனாகவும், அனைத்தும் அறிந்தவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் : 51:28)

இது போன்று வலிமார்கள் அவ்லியாக்கள் வரலாற்றிலும் சொல்லப்படுகிறது. நாகூர் ஷாஹூல் ஹமீது நாயகம் அவர்கள் பிறப்பதற்கு முன்பு ஒருநாள் இரவில் அவர்கள் தாயார் அன்னை ஃபாத்திமா அம்மையார், தூங்கும் போது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களை கனவில் காண்கிறார்கள். அப்போது நாகூர் நாயகத்தின் தாயாரிடம் சுபச்செய்தியாக உங்களுக்கு **ஒரு மகன் பிறப்பார் என்றும், அவர் தன் வாழ்நாள் முழுவதும் இஸ்லாத்துக்காகவும் அனைத்து மக்களின் ஈமானை பாதுகாக்கவும் வாழ்வார்கள் என அறிவித்தார்கள்.** என்று வரலாற்றுக் குறிப்புகளில் காணப்படுகின்றன.

இது போன்று பல நிகழ்வுகளில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் வாழ்நாளிலும், தன் மறைவிற்குப் பிறகும், ஒரு வயிற்றில் இருக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என்பதை அறிவித்துள்ளார்கள். அதேபோன்று குத்புல் அக்தாப் கவ்துல் அஃழம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி)

அவர்களும், ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா நாயகம் அவர்களும் மறைவான விஷயங்களை முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள் சங்கைக்கும் மேன்மைக்கும் உரிய தங்களின் பாட்டனார்களைப் போலவே இக்காலத்தின் அதிபதியாக இருக்கும் செய்கு நாயகம் அவர்களும் மறைவான விஷயங்களை அறிவித்துள்ளார்கள்.

ஆத்ம சகோதரர் ஒருவர், அஸ்ஸய்யித் யாஸீன் அலி நாயகம் அவர்களிடம் தனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்குத் தாங்களேத் தாங்களே பெயர் சூட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அவரின் கோரிக்கையை ஏற்ற நாயகம் அவர்கள் **ஆண் குழந்தையின் பெயரை எழுதிக் கொடுத்தார்கள்.**

இங்கே நாம் ஒரு விஷயத்தை கவனிக்கக் கடமைப்பட்டுள்ளோம். வயிற்றில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்பதை நாயகம் அவர்கள் முன்கூட்டியே அறிந்து தான் அவ்வாறு எழுதிக் கொடுத்துள்ளார்கள், அவ்வாறே பிற்காலத்தில் அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது.

இதுபோன்று பல கராமத்துக்கள, முரீதுகள் அஹ்பாபுகளின் வாழ்வில் ஒவ்வொரு வடிவிலும் ஒவ்வொரு விதத்திலும் நடந்து கொண்டே தான் இருக்கிறது. ஹக்கின் அருட்கொடையாக நமக்கு மத்தியில் காட்சியளித்துக் கொண்டிருக்கும் நமது ஷெய்கு நாயகம் அவர்களை உள்ளாலும், வெளியாலும் பரிசுத்த உள்ளத்துடனும், உறுதியான மெய்விசுவாசத்துடனும், பற்றிநின்று அன்னவர்களின் பொருட்டால் இம்மையின நற்பாக்கியங்களையும், மகத்தான மறுமைப் பேறுகளையும், பெற்றுக் கொள்வோமாக.

**எவர் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருக்கரத்தைப் பற்றுவதாக நல்லெண்ணம கொண்டு நம் கையைப் பற்றுகிறார்களா? நிச்சயமாக அவர்கள் எனது பாட்டனார் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கரத்தையே பற்றியவர்களாவார்கள்.** என்ற சங்கைமிகு அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா நாயகம் அவர்களின் அமுத மொழிக்கு ஏற்ப, **யாஸீன் நபி** தந்த **யாஸீன் அலி** மௌலானா நாயகம் அவர்களைப் பின்பற்றி அவர்களுக்கு அடிபணிந்து இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவோமாக ஆமீன்.

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்: கோபம் கொள்ளாதீர்கள், பிணங்கிக் கொள்ளாதீர்கள், (நீங்கள் வாழ பிறர் வீழ வேண்டுமெனப்) போட்டியிட்டுக் கொள்ளாதீர்கள். அல்லாஹ்வின் அடியார்களே! சகோதரர்களாய் இருங்கள்.* ***(முஸ்லிம்)***

# அவ்ன் நாயகரின் அருமைகள்!

கலீபா. அட்வகேட். மதுக்கூர் ஏ.என்.எம்.லியாகத் அலி அவர்களின் அனுபவங்களிலிருந்து..... தொகுத்தவர்– மதுக்கூர் சிராஜ்.

**எது மரியாதை?**

நிகழ்வு –1 அதற்கு மேல் ஒன்று உண்டா? எது மரியாதை? எனக்கு அவ்வப்போது என்ன சந்தேகங்கள் ஏற்பட்டாலும், நான் உடனே சங்கைக்குரிய ஷெய்கு நாயகம் அவர்களிடம் கேட்பேன். சங்கைக்குரிய ஷெய்கு நாயகம் அவர்களும் அதற்குத் தக்க விளக்கம் தருவார்கள். இவ்வாறு பல முறை கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து கலீபா கரீம் அண்ணண் அவர்கள், இது போன்று கேள்வி கேட்டுக் கொண்டு இருக்கிறீர்களே, இது மரியாதைக் குறைவு இல்லையா? எனக் கேட்டார்கள். நான் சங்கைமிகு நாயகம் அவர்களிடம், கேள்வி கேட்பதை மரியாதைக் குறைவா? எனக் கேட்ட பொழுது, சங்கைக்குரிய ஷெய்கு நாயகம் அவர்கள் இவ்வாறு பதில் அளித்தார்கள். எவ்வளவு கேள்வி வேண்டுமாலும் கேட்கலாம். அது மரியாதைக் குறைவு அல்ல. ஆனால் நாங்கள் ஒரு விளக்கத்தையோ, பதிலையோ தந்த பிறகு அந்த விளக்கத்திற்கு, அந்த பதிலுக்கு மேல் ஒன்று இருக்குமோ என நினைத்தீர்களானால் அது மரியாதைக் குறைவு என்று கூறினார்கள்.

**தைரியத்தை ஆன்மாவில் விதைத்த ஷெய்கு நாயகம்.**

நிகழ்வு – 2

என்னுடைய நண்பர் ஒருவர் எல்லாவற்றிக்கும் பயப்படிக்கூடியவர். பேய் என்றால் பயம். சிறு சிறு விஷயங்களுக்கு கூட பயப்படக் கூடியவர். ஒரு நாள் நாங்கள் இருவரும் மதுக்கூர் சிவக்கொல்லையில் உள்ள ஒரு டீக்கடைக்குச் சென்றிருந்தோம். அந்த டீக்கடைக்காரர் கூண்டினுள் கிளி ஒன்றை வளர்த்து வந்தார். அந்த கிளியைக் கண்டதும் இவர் பயந்து நடுங்கி கடைக்குள் இருந்து வெளியே ஓடிச் சென்றபொழுது, அவர்களிடம் நண்பரைக் காட்டி இவர் சாதாரண விஷயங்களுக்குக் கூட பயப்படுகிறார் என்று கூறி, வாப்பா நாயகம் அவர்களிடம் கிளி சம்பவத்தைக் கூறினோம். அப்பொழுது நாயகம் அவர்கள் எதற்காக பயப்படுகிறீர்கள்? அதிக பட்சம் உயிர்தானே போகும் என்று சிரித்துக் கொண்டே கூறினார்கள். அன்றிலிருந்து அந்த நண்பருக்கு அச்சம் என்பதே நீங்கிவிட்டது. பின்னால் அவருக்குக் கடுமையான நோய் வந்து அவதியுற்ற பொழுது அவருக்கு

இரண்டு நாட்கள் மருத்துவர்கள் கெடு வைத்து விட்டார்கள். அந்த நிலையில் அவர்கள் குடும்பத்தார் உனக்கு ஏதேனும் ஆசையிருக்கிறதா, எனக் கேட்ட பொழுது எங்கள் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையினரை அழைத்து மௌலித் ஓத வேண்டும் என்று கூறினார். அதன்படியே அவர் வீட்டில் மௌலித் ஓதப்பட்டது. ஓரிரு நாட்களில் அவர்கள் மறைந்து விட்டார். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) சங்கைக்குரிய ஷெய்கு நாயகம் அவர்கள் சொன்ன அந்தச் சொல் அவருக்க மரண பயத்தையே நீக்கிவிட்டது. மரணத்திற்கு அஞ்சாமல் மௌலித் ஓதச் சொன்ன அந்த தைரியம் ஷெய்கு நாயகம் அவர்கள் சொல்லைக் கொண்டு கிடைத்தது.

**பகுதாதில் பாரதத்தில்....** நிகழ்வு –3

ஒரு முறை மதுரைக்குச் சென்று சங்கைக்குரிய ஷெய்கு நாயகம் அவர்களைச் சந்தித்தேன். அப்பொழுது அங்கு ஜின்னா அண்ணண் மற்றும் ஆத்மீக சகோதரர்கள் அமர்ந்து இருந்தார்கள். சங்கைக்குரிய நாயகம் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த பொழுது ஜின்னா அண்ணண் அவர்கள், நான் பகுதாதுக்கு போக வேண்டும் என்று கூறினார்கள். உடனே நாயகம் அவர்கள் என்னைப் பார்த்து, அட்வகேட்! அவர் பகுதாதிற்கு போக வேண்டும் என்று கூறுகிறாரே! என்றார்கள். நான் உடனே பகுதாதில் தானே இருக்கிறோம் என்று நான் கூறினேன். நாயகம் அவர்கள் புன்சிரிப்புடன் ஜின்னா அண்ணணைப் பார்த்தார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

**சர்வமும் ஹக்கே. ஹக்கின்றி வேறில்லை.** நிகழ்வு – 4.

திண்டுக்கல் கலீபா அண்ணன் அவர்கள் மகனார் அஷ்ரப் அலி திருமணத்திற்கு நாங்கள் மதுக்கூரிலிருந்து காரைக்குடி சென்றோம். அப்பொழுது வேல்வார் கோட்டை கலீபா. காதிர் முஹம்மது ஆலிம் ஸாஹிப் அவர்கள், தமக்கு மலேரியாவாக இருப்பதால் தன்னால் திருமணத்திற்கு வர முடியவில்லை என்றார்கள். சங்கைக்குரிய ஷெய்கு நாயகம் அவர்கள் நாங்கள் காரைக்குடி சென்றதும் சிரித்துக் கொண்டே சிறிது நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டு, கலீபா காதிர் முஹம்மது ஆலிம் ஸாஹிப் வந்துள்ளார்களா? எனக் கேட்டார்கள். நான் இல்லை என்று கூறி அவர்களுக்கு மலேரியா ஜுரமா இருப்பதால் வரமுடியவில்லை என்று சொன்னதாகக் கூறினேன். அதற்கு நாயகம் அவர்கள் மருந்து எடுத்துக் கொண்டாரா எனக் கேட்டார்கள். அதற்கு நான் கலீபா அவர்கள் என்னிடம் சொன்ன **ஹக்கு கொடுத்து நோயை ஹக்கே நீக்கும் என்று கூறினார்கள் என்றேன்.** உடனே நாயகம் அவர்கள் சிறிது கோபத்துடன் டாக்டர் ஹக் இல்லையா? மருந்து ஹக் இல்லையா என்று கூறி சர்வமும் ஹக்கின்று வேறில்லை என்ற உண்மையை அருளினார்கள்.

(அல்ஹம்துலில்லாஹ்).

*(சங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (றலி) அவர்களின் வானொலிப் பிரசங்கமான "அறபு இலக்கிய வளர்ச்சி" எனும் நூல் தேடற்கரிய செய்திகளைக் கொண்ட தகவல் களஞ்சியமாக இருப்பதால் அதன் முக்கியப் பகுதிகளைத் தொடராக வெளியிடுதில் மகிழ்ச்சியடைகிறோம். வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.)*

# அறபு இலக்கிய வளர்ச்சி

## 5 ஆம் பிரசங்கம்

### உமவிய்யாக் கால அபிவிருத்திகள்

**இலக்கணம்** (النّحو)

அறபுமொழி இலக்கணமின்றி இருந்தது. ஹிஜ்ரி 60ஆம் வருடம் அபுல் அஸ்துத்தூஸி என்பார் அரபி இலக்கண வழிகளைப் பூர்த்தி செய்தார். அதற்குச் சுமார் 35 வருடங்கள் முன் இமாம் அலீபின் அபீதாலிப் (ரலி) அவர்கள் அங்கு இது பற்றி ஆலோசனை கூறினார்கள்.

முஆவியா அவர்களின் இராக் தேசாதிபதி ஸியாத் அபுல் அஸ்வதிற்கு இது பற்றிக் கட்டளையிட்டார். பின்பு பஸரா, கூபா, இலக்கிய அறிஞர்கள் அதைப் பூரணமாக்கினார்கள். சுர்யானிய இலக்கண முறையே இதற்கு ஆதாரமாய் அமைந்தது. அவர் அதை அறிந்திருந்தார். (பிக்ஹு) மதச் சட்ட அறிவு, குர்ஆனின் வியாக்கியான அறிவு, வைத்தியம், வானவியல், சரித்திரம், ரசாயனம் ஆகியவை உமவிய்யாக் காலத்தில் ஆரம்பமாயின.

### எழுத்து

இஸ்லாம் வந்த காலம் அறபிகளில் 17 பேரே எழுதத் தெரிந்திருந்தனர். மதீனாவிற் சிலரும் யூத வியாபாரிகள் சிலரும் எழுதத்

தெரிந்திருந்தனர். பத்ரு யுத்தத்திலே குறைஷ்கள் மீது வெற்றியை முஸ்லிம்களுக்கு அல்லாஹ் அருளிய போது குரைஷ் எழுத்தாளர்களிற் சிலர் யுத்த கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். ஒரு கைதி பத்து முஸ்லிம் பிள்ளைகளுக்கு எழுதக் கற்றுக் கொடுத்தால் விடுவிக்கிறதாய் நபிகணாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியமையால் அவ்வாறு சிறுவருக்கு எழுதக் கற்றுக் கொடுக்கப்பட்டு மதீனாவில் எழுத்தாளர் அதிகமாயினர். கலீல்பின் அஹ்மத் என்பவரால் இன்றைய எழுத்து வண்ணம் இயற்றப்பட்டது.

## அப்பாஸிய்யாக் காலம்

இக்காலம் இஸ்லாத்தின் பொற்காலமாகும். இஸ்லாமிய ஏகாதிபத்தியமும் அரேபியக் கலை வகைகளும் எங்கும் பரந்து விரிவடைந்தன. பிற அறிவுகள் அறபியில் மொழிபெயர்க்கப்பட்டு அறிவாரய்ச்சிகளுக்கு வழிகளும் திறக்கப்பட்டன. ஆரிய நாகரிகமும் பர்ஸிய்யக் கலைகளும் இதில் கலந்தன. இந்திய சீன எல்லைகளிலிருந்தும் இஸ்பானிய பைரனீஸ் மலைகள் வரை அரசாங்கம் நீண்டது. நிர்வாகச் சொற்கள், அரசியற் சொற்கள், பொருளாதாரச் சொற்கள் ஆகியன இலக்கிய முறையில் அபிவிருத்தியடைந்தன. பிற மக்களும் அரபியை விருப்பத்துடனன் ஏற்று அரபியில் வல்லுனராயினர். சுருங்கக் கூறுமிடத்து அப்பாஸிய குலபாக்களே அரபியில் இஸ்லாமிய அறிவையும் இலக்கியத்தையும் உலகில் வளர வைத்து உயர்வடையச் செய்தனர். இரசாயன, பூத ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு அவற்றில் அரபியக் கலை வளர்ச்சியடையச் செய்தனர்.

## பாத்திமீய கால எகிப்து

அப்பாஸிய ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடைந்த பொழுது அதன் பிரதேசங்களான ஷாம், ஹிஜாஸ், எகிப்து, வட ஆப்பிரிக்கா முதலானவற்றை அலவிய்யூன்களான பாத்திமிய்யூன்கள் கைப்பற்றி ஆண்டார்கள். அவர்களின் முந்திய கலீபா அப்துல்லாஹ் பின் முஹம்மது ஹிஜ்ரி **296** ஆம் வருடம் தூனிஷியாவிலுள்ள கைரவானில் அரசராகவிருந்தார்.

அவர்களில் நான்காம் கலீபா அல்முஇஸ்ஸு லிதீனில்லாஹ் என்பவரும் அவரின் தளபதியும் எழுத்தாளருமான சிசிலிய ஜௌஹர் என்பவரும் பெரும் படையுடன் மிஸ்ருக்கு அனுப்பி அதை வெற்றி கொண்டார். தங்கத்தைச் செலவழித்து ஆட்சியும் புரிந்தார்.

358 ஆம் வருடம் தம் எஜமானுக்கு ஒரு மாளிகைக்கு அஸ்திவாரமும் அஸ்ஹர் சர்வ காலாசாலைக்கு அஸ்திவாரமுமிட்டார். அதன் பக்கத்தில் ஒரு கோட்டையும் கட்டினார். அதுவே இன்றைய கைரோ நகரமாகும். அதை அதே பாத்திமிய்யூன்கள் தங்கள் கிலாபத்தின் தலைநகரமாக்கி ஹிஜ்ரி 357 முதல் 567 வரை ஆண்டார்கள்.

அஸ்ஹர் கலாசாலை கெய்ரோவின் முந்தியதாகவும் உலகிலேயே மிகப் பழமையான கலாசாலையுமாகும். இஸ்லாமியக் கல்வியை வளர்ப்பான் வேண்டி ஜௌஹர் அதைக் கட்டி கலா விற்பன்னர்களை அழைத்து ஆசிரியர்களாக அவர்களை ஏற்படுத்தினார். அதில் ஷீஆ (شيعة) பிக்ஹு இலக்கணம், மொழி முதலானவை கற்கும் மாணவர்கள் தங்கிப் படிக்கும் மிகப்பெரிய கலாசாலையாக அதுவிருந்தது. ஹிஜ்ரி 564 ஆம் வருடம் ஸலாஹுத்தீன் ஐயூபி மிஸ்ரை வெற்றி கொண்டபோது கலாசாலையில் ஷீஆ பிக்ஹை விடுத்து நான்கு மதுஹபுகளையும் இலக்கியம், கணிதம், பூதம், பௌதீகம் முதலான அறிவுகளையும், மத அறிவுகளையும் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்து இஸ்லாமிய உலகம் முழுதும் கல்வி பரவும் வகை செய்தார். ஹிஜ்ரி 1305ஆம் வருடம் எகிப்திய குதைவிய அரசாங்கம் புது உலகக் கல்வியையும் அதிற் புகுத்தியது. அதில் உலகின் பல பாகங்களிலிருந்தும் பத்தாயிரம் மாணவர்கள் வரை கல்வி கற்றனர். வருடாந்தம் பத்தாயிரம் தங்க நாணயங்கள் செலவழிக்கப்பட்டன. கோடிக் கணக்கான பெறுமதியுள்ள சொத்துக்கள் அதற்கு இருக்கின்றன. அரசாங்கமே அதை நிர்வகிக்கிறது.

(இலக்கியம் மலரும்)

**அன்பை, மரியாதையை தயங்காமல்**

**வழங்குபவன் எதையும் சாதிப்பான்**

## மகளிர் முன்மாதிரி

# ராபியா பஸரீ (ரஹ்)

பிறக்கும் பொழுது அவர்கள் பெற்றோர்கள் மிக்க வறுமையில் இருந்தார்கள். ராபியா பஸரியா (ரஹ்) அவர்களுக்கு ஒரு துணி வாங்கக் கூட காசு இல்லை. வீட்டில் விளக்கு எண்ணை வாங்கக் காசு இல்லை ஆண்டவன் இட்ட படி நடக்கட்டும் என்று வெறுந்தரையில் படுத்துக் கொண்டார்கள். அப்படிப் படுக்கும் பொழுது சற்று தூங்கி விட்டார்கள். உமக்கு இறைநேசச் செல்வியர் பிறந்திருக்கிறார். அவரின் பரிவுரை காரணமாக எழுபதாயிரம் பேர் ஈடேற்றம் பெறுவர். பொழுது புலர்ந்ததும் இந்த பஸரா மாநில ஆளுநர் ஈஸா ஸாதானிடம் சென்று, அவர் ஒவ்வொரு நாளும் பகலில் நூறு ஸலவாத்துகளும் இரவில் நானூறு ஸலவாத்துகளும் ஓதும் வழக்கப்படி சென்ற வெள்ளிக்கிழமைப் பகல் நானூறு ஸலவாத்துகள் ஓத மறந்துவிட்டதை நான் நினைவுறுத்தியதாகக் கூறி அதற்குப் பகரமாக நானூறு திர்ஹங்களை அவரிடமிருந்து பெற்று உம் வறுமை போக்குக!

இவ்வாறு அருளே உருவெடுத்தாற் போன்ற ஆன்றோர் ஒருவர் அவரின் முன் புன்முறுவல் பூத்த வண்ணம் புகன்று நின்றார். ஐயன்மீர்! தாங்கள் யார்? என்று வியப்புடன் வினவினார் அந்நல்லார். முஹம்மதுர் ரசூலுல்லாஹ்! என்ற மறுமொழி கேட்டதும் அவரின் உள்ளமும் உடலும் ஒருங்கு சேர்ந்து சிலிர்த்தன. திடுக்கிட்டு விழித்தெழுந்தார் அவர். இவை அனைத்தும் கனவா அல்லது நனவா என்று அவருக்குச் சற்ற நேரம் விளங்கவில்லை. இறுதியாக, கனவு தான் என்று உறுதிப் படுத்திக்கொண்டு அண்ணலெம்பெருமானின் அளப்பரும் கருணையை எண்ணி எண்ணி வியந்த வண்ணம் அங்குமிங்கும் படுத்து உருண்டு கொண்டிருந்தார் அவர். பொழுது புலர்ந்ததும் அவர் தாம் கண்ட கனவை ஒரு தாளில் எழுதித் தம் நண்பர் மூலமாக அம்மாநகர ஆளுநருக்கு அனுப்பி வைத்தார். அதைப் படித்துப் பார்த்ததும் அவ்வாளுநருக்கு ஏற்பட்ட வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் மட்டில்லை. தாம் நாள்தோறும் ஓதிவரும் ஸலவாத்துகளை எம்பெருமானார் ஏற்றுக் கொள்வதையும், தாம் ஓத மறந்து விட்டதைத் தமக்கு நினைவுறுத்தியதையும், எண்ணி, எண்ணி மகிழ்ச்சிக் கண்ணீர் உகுத்தார் அவர். அதற்கு நன்றி செலுத்தும் முகத்தான் பதினாயிரம் திர்ஹங்களை ஏழை, எளியவர்களுக்கு வாரி வழங்கினார். அந் நல்லாருக்கும் நாயகப் பெருமானின் நல்லுரைக்கேற்ப நானூறு பொற்காசு களை அனுப்பி வைத்து, தம் அரண்மனைக்கு எழுந்தருள வேண்டு மென்று அவர்களை வேண்டிக் கொண்டதாகவும் சொல்லி அனுப்பினார்.

அப்பொற்கிழியைப் பெற்றுக்கொண்டு அந்நல்லாரின் நண்பர் அடியெடுத்து வைத்ததுதான் தாமதம். சற்று நில்லுங்கள். அண்ணலெம் பெருமானின் அன்பிற்குரிய அப்பெரியாரை இங்கு வரச் சொல்வது ஏற்றமன்று. நானே அவர்களைக் காண வந்து அவர்கள் வீட்டு வாயிலின் தூசியை என்னுடைய தாடியினால் துப்புரவு செய்கின்றேன். அவர்களுக்கு ஏதேனும் தேவைப்படின் எனக்குத் தெரியப்படுத்தின் இமைக்கும் நேரத்தில் அதனை நிறைவு செய்யத் தயாராயுள்ளேன் என்று அவர்களிடம் எடுத்துரையுங்கள் என்று கூறினார். இதன்பின் என்ன? அந்நல்லாரின் இல்லத்தை இத்துணை காலம் பீடித்திருந்த வறுமை தொலைந்து வளம் கொழிக்கலாயிற்று. நான்காவது பெண்மகவை ஈன்றெடுத்ததன் காரணமாக, அதற்கு நான்காமவள் என்று பொருள்படும் ராபியா என்ற அழகுசால் திருப்பெயரிட்டு அன்புடன் அழைத்து வரலாயினர் பெற்றோர்கள். குழந்தை ராபியாவும் எவ்விதக் குறையுமின்றி நாளொரு மேனியாக வளர்ந்து வந்தார்கள்.

## வாழ்க்கை எதார்த்தம்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் 'அள்பா' என்றழைக்கப்பட்ட ஒட்டகம் ஒன்று இருந்தது. அது பந்தயத்தில் பிற ஒட்டகங்களால் வெல்ல முடியாத அளவு விரைந்து ஓடக்கூடியதாக இருந்தது.

ஆனால், ஒரு பயணத்தின் போது, கிராமவாசி ஒருவர் தம் ஆறு வயதுக்குட்பட்ட, வாட்ட சாட்டமான ஒட்டகத்தின் மீது வந்து, நபிகளாரின் அந்த ஒட்டகத்தை முந்திச் சென்று விட்டார். இது நபித்தோழர்களுக்கு மிகுந்த மன வேதனையைஅளித்தது. நபியவர்களின் 'அள்பா ஒட்டகம் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டதே என்று வருத்தத்துடன்' கூறினர்.

இதை அறிந்த நபியவர்கள்,

'உலகில் உயர்கின்ற எந்த ஒன்றும் நிச்சயம் ஒரு நாள் கீழே தாழும். இது இறை நியதி' என்று கூறினார்கள். அறிவிப்பாளர் : அனஸ் (ரலி)

## உன் வீடு எது?

மரணத்திற்கு முன்னர் மனிதன் கட்டியமைத்த வீட்டில்தான் மரணத்தின் பின்னரும் அவன் சென்று வாழ வேண்டும் புண்ணியத்தால் வீடு கட்டியவன் நிம்மதியாய் குடியேறுவான் அநியாயத்துக்கு வீடு கட்டியவன் ஏமாறி திண்டாடுவான்.

# கத்தார் நாட்டில் கண்ணிய விழா!

கத்தார் ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை சார்பில் கடந்த 25.10.24 மாலை 5மணி முதல் இரவு 7 மணிவரை புனித மீலாது விழா, மற்றும் குத்புநாயகம் (ரலி) அவர்களின் நினைவுதின விழா கொண்டாடப்பட்டது.

சங்கைமிகு மௌலானாமார்கள் முன்னிலையில், சங்கைமிகு செய்யது அப்துல்ஹை மௌலானா அவர்கள் தலைமை வகிக்க, நிகழ்வை செய்யது முபீல் மௌலானா அவர்கள் தொகுத்து வழங்க ஜனாப். முஹம்மது அர்ஷாத் கிராஅத் ஓதித் தொடங்க, ஜனாப். ஹுஸைன்அலி அவர்கள், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸை வாசிக்க, தொடர்ந்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 34 ஆம் தலைமுறைத் திருப்பேரர் குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின் அமுதமொழி வாசிப்பைத் தொடர்ந்து, கத்தார் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை செயலாளர் அப்துல் வஹ்ஹாப் அவர்கள் வரவேற்புரை, இறைபுகழ்,நபி புகழ், குத்பு நாயகம் புகழ்ப்பாடல்களை குழுவினர் வழங்கினர்.

இந்தியாவிலிருந்து ஜூம் செயலி வழியாக சிறப்புச் சொற்பொழிவை மௌலவி, ஹாபிழ், ஏ.கே.ஏ. ஷர்புத்தீன் ஃபைஜீ ஹள்ரத் அவர்கள் செய்தார்கள். அதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் , குத்பு நாயகம் (ரலி) அவர்களின் சிறப்பான ஆளுமைகளை விரிவாகப் பேசி, உண்மை இஸ்லாமை அறிய அஹ்லு பைத்துகளைப் பின்பற்றியே தீரவேண்டுமென ஆணித்தரமாக எடுத்துரைத்தார்கள். பின்னர் சங்கைமிகு செய்யது அப்துல்ஹை மௌலானா அவர்கள், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் , குத்பு நாயகம் (ரலி) அவர்களின் அருமை பெருமைகளை விளக்கினார்கள். தொடர்ந்து கத்தார் சபைத்தலைவர் ஏ.என்.எம். முஹம்மது யூசுப் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் நன்றியுரை, யா நபீ பைத்து, குத்பு நாயகம் புகழ் கஸீதா துஆவுடன் விழா நிறைவுற்றது.

விழாவில் சங்கைமிகு பளுலுல்லாஹ் மௌலானா, செய்யது மிள்ஃபர் அலி மௌலானா, சாதிக் காக்கா, சாம்லி காக்கா, முனீர் காக்கா, மற்றும் ஏகத்துவ மெய்ஞ்ஞானபை உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தார்கள். அனைவருக்கும் தப்ரூக் உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியினை சங்கைமிகு மௌலானாமார் தலைமையில் ஏ.மெ.சபை உறுப்பினர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர். ரபீவுல் அவ்வல் 30 ரபீவுல் ஆகிர் 11, ஆகிய 41 நாட்கள் புனித மௌலிது ஷரீப் ஓதி, கத்தார் நாட்டு அரச குடும்பத்தினருக்கும் நாட்டு மக்களுக்கும் எல்லா நலன்களும் வேண்டி துஆ செய்யப்பட்டது. அல்ஹம்து லில்லாஹ்.

# வழிந்தோடும் வாழ்க்கை !

## [தடைக் கற்கள் அல்ல அவை படிக்கற்கள்]

**ரஹ்மத் ராஜகுமாரன்**

துன்பங்கள் நேர்வது நம்மை அழிப்பதற்காக அல்ல, ஆக்குவதற்காகவே. துன்பங்களினாலும் சோகங்களினாலும் கடவுள் நம்மை வலிமையாக்குகிறார். மெல்லிய உணர்வுகள், மேன்மையான எண்ணங்கள், அற்புதமான செயல்கள் என்று உயரிய குறிக்கோள்களை நோக்கி நம்மை அழைத்துச் செல்கிறார்.

இதை விளக்க அழகானதோர் உண்மை நிகழ்ச்சி உள்ளது. ஒரு மாலை நேரம். அழகான ஒரு பூந்தோட்டம். இளைஞர் ஒருவர் அங்கு அமர்ந்து இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தார். அப்போது பட்டுப்பூச்சிக் கூடு ஒன்று அவர் கண்ணில்பட்டது. அவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அதில் சிறிய துவாரம் ஒன்று ஏற்பட்டது. கூட்டின் உள்ளே இருந்த புழு துளை வழியாக வெளியே வர முயற்சிப்பது தெரிந்தது.

கூட்டை விட்டு வெளியேறி அழகான வண்ணத்துப் பூச்சியாக உருமாறி அது சிறகடித்துப் பறக்கும் காட்சியைக் காண அந்த இளைஞர் ஆவலுடன் காத்திருந்தார். ஆனால், திடீரென அந்தப் புழு முயற்சி செய்வதை நிறுத்திவிட்டது. அதனிடம் எந்தச் சலனமும் இல்லை. அந்தப் புழு களைத்துப் போய் தனது முயற்சியைக் கைவிட்டு விட்டதென்று அதற்கு உதவி செய்ய அவர் முடிவெடுத்தார். மரப்பட்டை ஒன்றினால், பூச்சிக் கூட்டின் துவாரத்தை நன்றாகக் கிழித்து அதைப் பெரிதாக்கினார். பட்டுப்பூச்சி மிக எளிதாக வெளிப்பட்டது.

ஆனால், அது மிகவும் சிறியதாக இருந்தது. அதன் உடல் வாடி இருந்தது இறக்கைகள் மிகவும் சுருங்கிப் போய் இருந்தன. இருந்தாலும், எந்த நேரத்திலும் அதன் சிறகுகள் விரியும், அது இறக்கைகளை அடித்துக் கொண்டு மலர்களை நோக்கிப் பறந்து செல்லும் என்ற நம்பிக்கையில் இளைஞர் காத்திருந்தார். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை.

அந்தப் பட்டாம்பூச்சியினால் பறக்கவே முடியவில்லை. சூம்பிப் போன இறக்கைகளுடன் அதனால் மெதுவாக ஊர்ந்துதான் போக முடிந்தது.

கருணை உள்ளம் கொண்ட அந்த இளைஞரின் மனம் மிகவும் வேதனைப்பட்டது. அந்தப் பட்டாம்பூச்சிக்கு ஏன் இந்த நிலை?

பட்டாம்பூச்சி தனது உடலை வருத்திக்கொண்டுதான் பூச்சிக் கூட்டிலிருந்து வெளியே வரவேண்டும் என்பது இயற்கையின் நியதி. அந்தச் சிறிய ஓட்டையை விடப் பெரியதாக உள்ள தனது உடலை அதனுள் நுழைத்து, பெரும் போராட்டத்துக்குப் பின் அது வெளியே

வரும்போது அதன் உடல் பகுதியில் இருக்கும் திரவங்கள் அதன் இறக்கைகளில் பாய்கின்றன. இதனால் அதன் சிறகுகள் விரிகின்றன, உறுதியடைகின்றன, அதன் உடலைச் சுமந்து கொண்டு பறக்கும் வலிமை பெறுகின்றன.

இவ்வாறு உடல் வேதனைகளை அனுபவித்தால்தான் புழு வடிவத்திலிருக்கும் அந்த ஜீவன், அழகான வண்ணத்துப் பூச்சியாக உருமாற முடியும், கூட்டிலிருந்து விடுபட்டவுடன் சிறகடித்து ஆனந்தமாகப் பறக்க முடியும் என்பது இறைவன் வகுத்த நியதி. இது போன்ற சாதாரணச் சங்கடங்கள் இறைவனின் பெரிய திட்டங்களில் விளக்க இயலாத ஓர் அங்கம் என்பது இளைஞருக்குத் தெரியாததால், பட்டாம்பூச்சியின் துன்பத்தைத் துடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் அவர் அந்த பூச்சியையே முடமாக்கிவிட்டார். நமக்கும் வாழ்க்கையின் பல தருணங்களில் தடைகள் தேவைப்படுகின்றன. சவால்களே இல்லாத வாழ்க்கையை ஒருவேளை கடவுள் நமக்கு அளித்திருந்தால், நாமும் தடுமாறிப் போயிருப்போம். பறக்க முடியாத பட்டாம்பூச்சிகளாகி இருப்போம். கடவுளிடம் பலம் வேண்டும் என்று கேளுங்கள். அவர் துன்பங்களை அளித்தால் மனமுவந்து ஏற்றுக் கொள்ளுங்கள். அவற்றின் மூலம் நீங்கள் பெறுவது அதே பலம்தான் என்பதை உணருங்கள்.

கடவுளிடம் அறிவைக் கேளுங்கள். நீங்கள் தீர்க்க ண்டிய சவால்கள அவர் அளித்தால், ஏற்றுக் கொள்ளுங்கள். அவற்றின் மூலம் நீங்கள் பெறுவது அதே அறிவைத்தான் என்று உணருங்கள்.

கடவுளிடம் செல்வம் கேளுங்கள். நீங்கள் உழைப்பதற்குப் பணிகளை அவர் அளித்தால், ஏற்றுக் கொள்ளுங்கள். அவற்றின் மூலம் நீங்கள் அடைவது அதே செல்வம்தான் என்பதை அறிந்து கெள்ளுங்கள்.

கடவுளிடம் வீரம் கேளுங்ள். நீங்கள் எதிர்கொள்ள வேண்டிய பல தடைகளை, அவர் அளித்தால் ஏற்றுக் கொள்ளுங்கள். அவற்றின் மூலம் உங்களின் வீரம் பெருகி இருப்பதை உணர்வீர்கள்.

கடவுளிடம் அன்பைக் கேளுஙகள். நீங்கள் கவனிததுக் கொள்வதற்குத் துன்பப்படும் மனிதர்களை அவர் அளித்தால் ஏற்றுக் கெள்ளுங்கள். அவர்களுக்கு செய்யும் சேவை மூலம் உங்களிடம் ஊற்றாகப் பெருவது அதே அன்புதான் என்று உணருங்ள்.

கடவுளிடம் ஆதரவைக் கேளுங்கள். நல்ல வாய்ப்புகளை அவர் அளித்தால் ஏற்றுக் கொள்ளுங்கள். அவற்றின் மூலம் நீங்கள் பெறுவது கடவுளின் ஆதரவுதான் என்று உணருங்கள். இன்பமும் துன்பமும் நிறைந்ததுதான் மனித வாழ்க்கை. இது குறித்து திருக்குர்ஆன் இவ்வாறு கருத்து தெரிவிக்கிறது:

'நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கிறது '. (திருக்குர் ஆன் 94 : 5) இதோ, ஓர் அற்புதமான மந்திர வார்த்தை...!

# மாரடைப்பா? கவனம்...கவனம்!

மாரடைப்புக்கு மூன்றுமணி நேரம் முன் தோன்றும் அறிகுறிகள். – பிரபல இதயநோய் நிபுணர பேராசிரியர் சொக்கலிங்கம்

பிரபல இதயநோய் மருத்துவர் பேராசிரியர் சொக்கலிங்கம் அவர்கள் சொன்ன தகவலின்படி அவருக்குமாரடைப்பு இருக்கக்கூடும் என்ற சந்தேகம் ஏற்பட்டால், அவர் நடக்கஅனுமதிக்கக்கக்கூடாது, மாடிப் படிக்கட்டில் ஏறவோ அல்லது இறங்கவோ அனுமதிக்கக்கூடாது. மருத்துவமனைக்கு ஆட்டோவில் கொண்டு செல்லக்கூடாது. இந்தத் தவறில் ஏதேனும் ஒன்றைச் செய்தாலும் அந்த நோயாளி உயிர் பிழைப்பது கடினம்.

மாரடைப்பை மூன்றுமணி நேரம் முன்கூட்டியே உணரக் கூடிய ஓர் உறுப்பு நமது மூளையாகும். மூளை உடனே நமது உடலில், செயலில் சிறு தடுமாற்றம் ஏற்படுத்தி நம்மை முன்னெச்சரிக்கை செய்யும். இந்த முன்னெச்சரிக்கையை சக்கரை நோயாளிகள் உணர்வது கடினம்.

ஒரு திருமண நிகழ்விலோ, பொது இடங்களிலோ அல்லது வீட்டில் இருக்கும் போதோ, ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தடுமாறுவதை, அல்லது கீழே விழுவதைக் கண்டால், உடனே நாம் அவர் மேல் கவனம் செலுத்த வேண்டும்.

ஆனால், அவர் நம்மிடம் தனக்கு ஒன்றும் இல்லை, நான் நன்றாகத்தான் இருக்கிறேன் என்றெல்லாம் சொல்லுவார். நாமும், ஏதாவது பித்த மயக்கமாக இருக்கும் என்று லேசாக விட்டு விடக்கூடாது.

மூளை அறிவிக்கும் முன்னெச்சரிக்கையைப் பார்த்தவுடன் அவர் உடல் நிலையை தெளிவாக அறிந்துகொள்ள நாம் அவரை

**STR** அதாவது,

**SMILE** (சிரிக்க சொல்வது)

**TALK** (பேசச் சொல்வது)

**RAISE BOTH ARMS** (இரண்டு கைகளையும் மேலே தூக்க சொல்வது)

இது போன்ற செயல்களை செய்யச் சொல்லவேண்டும். இம்மூன்றையும் அவர் சரியாகச் செய்ய வேண்டும் இதில் ஏதேனும் ஒன்றை அவர் சரியாகச் செய்யவில்லை என்றாலும் பிரச்னை பெரிதுதான் உடனடியாக, மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதால், உயிரிழப்பைத் தடுக்கலாம்.

இந்த அறிகுறி தெரிந்து, 3 மணி நேரத்திற்குள் மருத்துவ மனைக்கு வந்து விட்டால் பெரும்பாலும் உயிர் இழப்பைத் தடுத்து விடலாம், என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இவை மூன்றும், அவர் நல்லபடியாக சரியாக செய்து விடடார் என்றால், மேலும் உறுதிப்படுத்த ஒரு முக்கியமான செயலைச் செய்ய வேண்டும் என்று சமீபத்திய மருத்துவ ஆய்வு கூறுகிறது.

அவருடைய நாக்கை நீட்டச் சொல்ல வேண்டும், அவர் தனது நாக்கை நேராக நீட்டிவிட்டார் என்றால், அவர் நார்மலாக, நலமாக உள்ளார் என்று தீர்மானிக்கலாம் அவ்வாறு நேராக நீட்டாமல் ஒரு பக்கமாக அதாவது வலது அல்லது இடது பக்கமாக வளைத்து நீட்டினால், அடுத்த 3 மணி நேரத்திற்குள் எப்பொழுது வேண்டுமானாலும், அவருக்கு அட்டாக் வரலாம்.

இதனைப் படிக்கும், அன்பர்கள வீட்டில் உள்ள அனைவரிடமும், உறவினர்களிடமும், நண்பர்களிடமும், ஜாதி, மத பேதமின்றி, மனிதாபிமான அடிப்படையில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமாறு கேட்டுக்கெள்கிறேன்.

மருத்துவர்களின் புள்ளி விவரப்படி, இதனை அனைவரிடமும் எடுத்துச் சொல்வதன் மூலம் 10 சதவீத மரணத்தைத் தவிர்க்கலாம் என்றும் சொல்கிறார்!!

மானுடம் காப்போம் மனிதம் வெல்லும்.

---

வாப்பா நாயகம் அவர்கள் ஆரிப் அவர்களுக்கு ஓதிய துஆ. (விபரம் 32 ஆம் பக்கத்தில்)


أذهب البأس رب الناس واشف يا شافي
أنت الشافي لا شفاء إلا شفاؤك شفاءً
ولا يغادر سقماً
واشفني يا شافي أنت الشافي
لا شفاء إلا شفاؤك شفاء
وعافني من عافيتك يا رب العالمين

# கராமத்தின் வித்தகர்

**ஹாத்தமுன் நபியே ரஸூலே   ஹாலிகுன் நிதியே கலீலே!**

திருச்சி எஸ்.பி. ஆரிப்  அவர்களின் வாழ்வில் நடந்த அற்புதங்களை அவரின் மனைவியாகிய நான் தங்களின் சமூகம் தெரிவிக்கின்றேன்.

இவர் இரண்டு வயது இருக்கும்போது என் மாமா (அவரின் வாப்பாவின் கையிலிருந்து) தன் கையை விடுவித்து, நமது வாப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு, எங்கள் வாப்பாவை ஊருக்குக் கூட்டிட்டுப் போகாதீங்க என்று கூறியதை வாப்பா நாயகம் அவர்கள் எப்போது இவரைப் பார்க்கும் போதும் நினைவு கூர்வார்கள். எப்போது இவரைப் பார்க்கும்போதும் அந்த 2வயது முகம்தான் வருகிறது என்றும் என்னுடைய மகன் என்றும் கூறுவார்கள்.

வருடம் 2008 சமீபத்தில் வாப்பா நாயகம் இந்திய விஜயத்தில் இருந்தார்கள். அப்போது இவரின் உடல்நிலை சரியில்லாமல் டாக்டரிடம் செக்அப் செய்தபோது அவரின் மனைவியிடம் மட்டும்  கூறுவேன் என்று கூறிய டாக்டர், இவர் ஒரு நாள் பிழைப்பதே கடினம் என்றும், வயிற்றில் ஆபத்தான கட்டி உள்ளது என்றும் கிரிட்டிக்கல் என்றும் கூறினார். நான் உடனே வாப்பா நாயகம் அவர்களிடம் வந்து தெரிவித்தபோது வாப்பா நீங்களே அந்தக் கட்டியை நீக்கவேண்டும் என்றும் அவருடைய தலையிலும் உடல் முழுதும் வாப்பா ஓதிப்பார்க்கவேண்டும் என்று கூறினேன். அப்போது வாப்பா நாயகம் அவர்கள் அவரின் தலையில் கை வைத்து **பின்வரும் துஆவை ஓதினார்கள்.** அந்த துஆவை இத்துடன் இணைத்துள்ளேன்.

அதன்பின் ஆபரேசன் 8 மணிநேரம் நடந்தது டாக்டர் வெளியில் வந்து சொன்ன வார்த்தை என்னவென்றால்......?

**என் கையில் எதுவுமில்லை...எப்படி ஆபரேசன் சக்ஸஸாக நடந்துது என்று எனக்குத் தெரியவில்லை.... கடவுள் உன்னுடன் இருக்கின்றார், என்று கூறி ஆச்சரியப்பட்டார்.**ஆபரேசன் முடிந்தபின் வாப்பா நாயகத்திடமிருந்து சிராஜ் மாமாவுக்கு போன் வந்தது.அதில், **அந்தக் கட்டியை நம் எரித்துவிட்டோம்** என்று கூறினார்கள். அதன்பின் அவரின் கடைசிவரை எந்த ஸ்கேனிலும் அந்தக் கட்டி மீண்டும் வரவில்லை.

அதன்பின் 10 வருடம் பூரண சுகத்துடன் நார்மலாக வாழ்ந்தார்கள். சாதாரண உபாதைகள் மட்டும்தான் இருந்து வந்தன. இந்த ஆபரேசன் நடந்த தருணத்தில் ஒரு நாள் நன் கண்ணயர்ந்து தூங்கினேன். வாப்பா நாயகமும் எனது மாமா பதுருதீன் டாக்டரும் கே.எம்.சி. ஹாஸ்பிடல் வந்து மாமா தன் கையை மருந்து இருக்கும் பக்கம் காட்ட வாப்பா நாயகம் அந்த மருந்தை தங்களின் திருக்கரங்களால் தொட்டார்கள். நான் கனவிலிருந்து விழித்தபோது டாக்டர், நர்ஸ் எல்லாம் இதுவரை உங்கள் கணவருக்கு மருந்து ஏறாமல் இருந்தது, நாங்களும் என்ன என்னவோ செய்து பார்த்தோம், அனால் இப்போது எப்படி ஏறியதி என்று தெரியவில்லை என்று கூறி ஆச்சரியப்பட்டனர்.

அதன்பின் வாப்பா நாயகம் போன் செய்து மகன் இந்த மருந்து உங்களுக்கு ஏறிவிடும் எந்த சைடு எஃபக்டும் உங்களுக்கு வராது. நலமுடன் வீடு திரும்புவீர்கள் என்றார்கள். அதுபோலவே இதுவரையும் அவருக்கு எந்த சைடு எஃபெக்டும் வரவில்லை.

பதினாறு வருடம் கழித்து 2023 மவ்லிது பிறையில் வாப்பா நாயகத்தின் திருக்குடும்பத்தாரிடம் போன் பேசும்போது, என் கணவர், **நான் நலமுடன் இருக்கின்றேன்.உடல் நிலை சரியில்லையென்றால் மிகவும் கவலை கொள்வார்கள். ஆயிரம் வருடம் தவம் செய்தாலும் அவர்கள் செய்த பேருதவியைமறக்க முடியாது. இதை மட்டும் தெரியப்படுத்து** என்று கூறினார்கள். வேறு உபாதைக்காக மருத்துவமனை செல்லும்போது வாப்பா நாயகம் அவர்களிடம் போன் பேசியபோது இந்த ஹாஸ்பிடல் வேதனை வேண்டாம் எனவும் தங்களைப் பார்க்க ஆசையாக இருக்கிறது என்றும் கூற வாப்பா நாயகம் அவர்கள்

மகன், இதுவே உங்களுக்குக் கடைசி... இனிமேல் ஹாஸ்பிடல் இல்லை...விரைவில் **உங்களைப் பார்க்க நான் வருவேன்,என்னைப் பார்க்க நீங்கள் வருவீர்கள்** என்று கூறினார்கள் இப்போதுதான் அதற்கான விடை புரிகிறது.

மேலும் இவரின் ரூஹ் பிரியும் நேரத்தில், வாப்பா நாயகம் போன் பேசும்போது துஆ ஓத வேண்டினேன். அவரின் காதில் போனை வைத்தபடி துஆ ஓத அறையே கணீரென்று துஆ எதிரொலித்தது. வாப்பா துஆ ஓதி முடித்த பின்பு 3 சொட்டு கண்ணீர் விட்டபடி ரூஹ் அமைதியான முறையில் வாப்பாவின் சமூகம் சென்றது. வாப்பா நாயகம் சொர்க்கவாதி என்று கூறினார்கள்.

இதற்கிடையில் அவர் மறைவதற்கு 3 மாதத்திற்கு முன் நான் தூங்கிக் கொண்டிருந்தேன். வாப்பா நாயகம் கனவில் வந்து, மகள்! இது என்ன பிறை என்றார்கள். நானோ முஹிய்யுத்தீன் ஆண்டகை பிறை என்றேன். பிறை என்ன என்று வினவ 23 என்று கூறினேன். வாப்பா நாயகம் என்னைப் பார்த்து மகள்! இங்கு பாருங்கள்! என்றார்கள். நான் பார்க்கும்போது அவர் வாப்பா நாயகத்தின் மடியில் படுத்திருப்பதுபோல் கனவு கண்டேன். இதை என் தாயாரிடம் மட்டும் கூறினேன். அதே முஹிய்யுத்தீன் ஆண்டகை பிறை 23 இல் இவரின் உயிர் வாப்பா நாயகம் சமூகம் சேர்ந்தது.

வாப்பா நாயகம் ஃபஜ்ரில் ஒவ்வொருவருக்கும் துஆ செய்வார்களாம், அதில் இவர் பெயர் வரும்வரை துஆ கேட்பதை நிறுத்த மாட்டார்களாம். அதுவரை இவர் பெயர் வந்தபின்தான் துஆவை முடிப்பார்கள். **என் பிள்ளை ஆரிப் ஆகப் பிறந்து ஆரிபாக வாழ்ந்து ஆரிபாகவே ஆனார் என்றும் எந்த சோதனைக்கும் அஞ்சவில்லை** என்று கூறினார்கள்.அவரின் மறைவுக்குப்பின் வாப்பா நாயகம் திருக்குடும்பத்தாரிடம் சொல்லி, மகள் என்றும் கவலைப்பட வேண்டாம். நீங்கள் நல்ல முறையில் பார்த்துவிட்டீர்கள், கவலை கொள்ளவேண்டாம் என்று சொன்னார்கள். அவர்களின் இந்தப் பேரன்பைப் பெறும் பாக்கியத்தை இம்மையிலும் மறுமையிலும் எங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் கிடைக்க வாப்பா நாயத்திடமே கேட்டுக் கொள்கிறேன். எங்களுக்கு உதவி செய்த முரீதுப் பிள்ளைகள், பக்கபலமாக நின்ற யாஸீனிய் பெருமக்கள் அனைவருக்கும் என் அன்பு நலந்த நன்றியை உரித்தாக்குகிறேன். வஸ்ஸலாம்.

# பிரபஞ்சத்தின் அருட்கொடை முத்து நபி அவர்களின் புனிதமிகு மீலாதுவிழா மற்றும் மனிதநேய மதநல்லிணக்க ஒருமைப்பாட்டு விழா, ஈரோடு.

இந்த உலகம் யாருக்காக படைக்கப்பட்டதோ அந்த மகா புனிதநாயகரின் உதயதினவிழா மற்றும் மனித நேய மதநல்லிணக்க ஒருமைப்பாட்டு விழா ஈரோட்டில் திருநகர் காலனி, **K.S.S.** அரங்கில் 6.10.24, ஞாயிறு மாலை 4.45 மணிமுதல் இரவு 9.00 மணிவரை நடைபெற்றது. காலை 11.00 மணிக்கு விழா அரங்கில் மிகச்சிறப்பாக **N.** அப்தல் காதர் நாசர், தலைமையில் ஊர்வலமாக தப்ரூக் தட்டங்கள் அரங்கிற்கு எடுத்துவரப்பட்டு, தேரழுந்தூர் தாஜுத்தீன், ஈரோடு முஸ்தபா மற்றும் யாஸீனிய் பேரவையினர் தலைமையில் சுப்ஹான மௌலிது ஓதப்பட்டது. மதியம் 12 மணிக்கு சிறப்பு உணவு பொட்டலங்கள 500 ஏற்பாடு செய்யப்பட்டு தர்ஹா, அரசு மருத்துவனை, பள்ளிவாசல், கோவில்கள், பேருந்து முதியோர்கள, நோயாளிகளைக் கண்டு இளைஞர் அணி சரீப் அகமது மற்றும் மதீஹ் நேரிடையாகச் சென்றுகொடுத்தனர். இது இரண்டாவது முறை...

நிகழ்ச்சித் தொகுப்பாளராக அ. கலீல் ரஹ்மான் யாஸீனிய் செயலாற்றி னார்கள். சம்சுதீன் ஆலிம், மரப்பாலம் பள்ளி வாசல் இமாம் கிராஅத் ஓதினார்கள். வஹ்தத்துல் வுஜுத் பாடலை யாஸீனிய் பேரவையினர் பாட, அதற்கு தமிழாக்கம் மேட்டூர் சாகுல் அமீது அளித்தார்கள். நபிபுகழ் பாடலை ஈரோடு முஸ்தபா பாடினார்கள். வரவேற்புரையை ஈரோடு ஆரிப் அவர்கள் (செயலாளர் – ஈரோடு ஏ.மெ.சபை) வழங்கினார்கள். அஹ்லுல் பைத் **S.T.H.** சையது முஹம்மது கவுஸ் சாஹிப், நாகூர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். பைசல் முஹம்மது யாஸீனிய் N. புதூர் V. களத்தூர் "முஹப்பத்தேரசூல்" என்ற தலைப்பில் சிற்றுரை வழங்கினார்கள். விழாவின் இடை இடையே முனைவர் தமிழ் மாமணி தேரிழந்தூர் தாஜுதீன் அவர்கள் நபி புகழ் பாமாலைகளை, சிறிய சிறிய சம்பவங்களுடன் மிக அழகாக எடுத்துரைத்து பொதுமக்களை உற்சாகமூட்டினார்கள்.

சென்னை சாக்கீர், ஈரோடு அஷ்ரப், அப்துல் காதிர் நாசர், தாஹா ஆகியோர் 8.9.2024 ஞாயிறு இம்மீலாது விழாவையொட்டி நடைபெற்ற பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டியில் வெற்றிபெற்ற அனைத்துமாணவ, மாணவியருக்கு, பரிசுத்தொகையும், சான்றிதழும் மேலும் கலந்துகொண்ட அனைத்து மாணவ, மாணவியருக்கும் சான்றிதழ் வழங்கி மற்றும் கலந்துகொண்ட அனைத்து

பள்ளிக்கும் கேடயம் அளிக்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்கள். **“சமூகத் தீமைகளை களைந்த சர்தார் நபி (ஸல்)”** என்ற புதிய தலைப்பில் சிறப்புப் பேருரையாக சதக்கத்துல்லா பாகவி, தலைமை இமாம், மஸ்ஜிதே ரஹீமா. கோடம்பாக்கம், சென்னை, அவர்கள் உரையாற்றினார்கள்.

புத்தக வெளியீட்டு விழாவில் செய்யது முஹம்மது கவுஸ் சாஹிப், நாகூர் அவர்கள் அஹ்லுபைத்து குடும்பத்தினர் எழுதிய **‘FAITH’** என்ற நூலை சென்னை சதக்கத்துல்லா பாகவிக்கு அளித்தார்கள். சங்கைக்குரிய நாயகத்தின் ‘சிறார் பாடல்கள்’ என்ற நூலை ஈரோடு 5 பள்ளிவாசல்கள் முத்தவல்லி அல்ஹாஜ் **K.K.S.K.** ஹுசேன் அலி அவர்களுக்கு வழங்கினார்கள். **N.** அப்துல் காதர் நாசர் அவர்கள் நன்றியுரையாற்றினார்கள். சிறப்பு விருந்தினர் சென்னை சதக்கத்துல்லா பாகவி அவர்கள் சிறப்பு துஆ வழங்க, இளைஞர் அணியினர் மற்றும் தமிழ் பக்தர்கள் தப்ரூக் உணவு அனைவருக்கும் வழங்கினார்கள். யாநபி சலாம் பைத்துடன் 13 ஆம் வருட புனித மீலாது விழா இனிதாக நிறைவுற்றது.

*செய்தி: கொச்சி -பஷீர் அகமது ஹக்கிய்யுல் காதிரி*

# உலகை ஆளும் அருள்மறை குர்ஆன்!

அமெரிக்காவிலுள்ள ஹார்வர்டுபல்கலைக்கழகத்தின் தலைமை நுழைவு வாயிலில் திருக்குர்ஆன் ஷரீஃபின் அந்நிஸா ஸூராவின் 135-ம் வசனம் பொறிக்கப்பட்டுள்ளது.

**அதன் பொருள்:** இறைநம்பிக்கை கொண்டோரே! நீங்கள் நீதியைக் கடைப்பிடிப்பவராகவும் அல்லாஹ்வுக்காக சான்று வழங்குபவராகவும் திகழுங்கள்! (நீங்கள் செலுத்தும் நீதியும், வழங்கும் சாட்சியும்) உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் சரியே (நீங்கள் யாருக்காக சாட்சி சொல்கின்றீர்களோ) அவர் செல்வந்தராகவோ ஏழையாகவோ இருந்தாலும் சரியே, அல்லாஹ் அவர்களின் நலனில் உங்களைவிட அதிக அக்கறை உள்ளவனாக இருக்கின்றான். எனவே, மன இச்சையைப் பின்பற்றி நீதி தவறி விடாதீர்கள். நீங்கள் உண்மைக்குப் புறம்பாக சாட்சி சொன்னாலோ, சாட்சியளிக்காமல் விலகிச் சென்றாலோ நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்கின்றவற்றையெல்லாம் நன்கு அறிபவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 4 135)

**நீதியை நிலைநாட்ட இதை விடவும் வேறென்ன வேண்டும்....?**

செய்தி: அட்வகேட் மஹபூப் பாசா, *ஹக்கிய்யுல் காதிரி* ஈரோடு

# 2. நாங்கள் கண்ட முஹிய்யுத்தீனிய சன்னிதானம்

A. முஹம்மது ஜகரிய்யா பி. இ. ஹக்கிய்யுல் காதிரி .திருச்சி.

1920 களில் சங்கைமிகு யாஸீன் நாயகம் (ரலி) அவர்கள் இந்திய விஜயத்தின் போது தமிழ் நாட்டில் பல இடங்களுக்கும் செல்வது உண்டு, சில இடங்களில் அவர்களை இங்குள்ள மார்க்க அறிஞர்கள் உரையாற்றும்படி கேட்டுக்கொள்வதும் வழக்கம். ஒரு முறை திருமுல்லைவாசல் (சீர்காழி தாலுகா) சென்ற நாயகமவர்கள் அன்று இரவு இஷாவுக்குப் பிறகு பள்ளியில் படுத்துகொள்ள விழைந்தார்கள், ஆனால் அந்தப்பள்ளியின் முஅத்தினோ இங்கு யாரும் படுப்பதில்லை எனவும் அங்கு படுத்தால் ஆபத்து எனவும் கூறினார். நாயகமவர்கள் இமாமிடமோ, ஜமாஅத் தலைவரிடமோ சொல்லச் சொன்னார்கள். அந்த ஜமாஅத்தார்கள் இந்த கபுருஸ்தானில் கபீஸ் எனப்படும் பிசாசுகள் இருப்பதாகவும் அவைகள் பெருங்கூச்சலிட்டு மனிதனை மரணிக்கச்செய்துவிடும் என்றும் பல வருடங்களாகவே இஷாவுக்கு முன்பே ஊர் அடங்கிவிடும் என்றும், பள்ளியின் அடுத்துள்ளவர்கள், இஷா தொழுதுவிட்டு பள்ளியை மூடிவிட்டு வேகமாகச் சென்று விடுவார்கள் என்றும் கூறியுள்ளார்கள். நாயகமவர்கள் எமக்கு எந்த பயமும் இல்லை பள்ளியில் தங்குவதற்கு சம்மதியுங்களென்று சொன்னார்கள்.

அதற்கு ஜமாஅத்தார்கள் ஒரு தயக்கத்துடன் அதாவது நாளை இவர்கள் உயிருடன் இருக்கமாட்டார்கள் என்ற சந்தேகத்துடன் சம்மதித்தார்கள். மறுநாள் காலை ஒரு ஜனாஸாவுக்கு வேண்டிய முஸ்தீபுகளுடன் ஜமாஅத்தார்கள் பள்ளிக்குவந்தார்கள். நாயகமவர்கள் கபுருஸ்தானில் நின்று கொண்டிருப்பதைக் கண்டு பேராச்சரியத்துடன் அங்கு என்ன நடந்தது தாங்கள் எங்ஙணம் இருக்கிறீர்கள், எனவினவியபோது நாயகமவர்கள் சில கபுருஸ்தான்களை சுட்டிக்காட்டி இங்கு இன்ன பெயருடையவர் அடக்கப்பட்டுள்ளாரா? அங்கு இன்ன பெயருடையவர் அடக்கப்பட்டுள்ளாரா? என்று கேட்கக் கேட்க, ஆச்சரியத்தில் ஆம், ஆம், என்று பதிலளித்தார்கள். அவர்களின் ரூஹுகளை சாந்தப்படுத்திவிட்டோம். இனி நீங்கள் இரவிலும் உலவலாம் என்று சொன்னார்கள். பிறகு நாயகமவர்களின் மகோன்னதமான நிலையைக்கண்டு அவர்களை சங்கைப்படுத்தவும்,

அவர்கள் அடிக்கடி அந்த ஊரில் பாதம் பதிக்க வேண்டுமென்பதற்காகவும், அந்த ஊர் பாக்கியம் பெற்ற அபூபக்கர்ஸித்தீக் (ரலி) வம்சாவழியைச் சேர்ந்த டவுன் காஜியாக இருந்த கத்தீபு ம.வு.ஷைகு பரீதுதீன் லெப்பை அவர்களின் மகளும் முஹம்மது ஸாலிஹ் லெப்பை அவர்களின் சகோதரியும் ஆன பாத்திமா அம்மையாரை 26.12.1921இல் மணமுடித்துவைத்தார்கள்.

குத்பு நாயகமவர்களின் நிகாஹுக்குப் பிறகு அவர்களின் விஸால்வரை அவர்கள் திருமுல்லை வாசலில் இருக்கும் போதெல்லாம் அவர்களைத் தவிர வேறு யாரும் ஜும்ஆ பயானும், குத்பாவும், ஜும்ஆ தொழுகையும் நடத்தமாட்டார்கள். அப்படி ஒரே பயபத்தியுடன் இருந்தார்கள். 1966 இந்திய விஜயத்தில் அவர்கள் உடல் தங்கடத்துடன் இருந்தபோது கூட அவர்கள் அல்லாமல் வேறு யாரும் ஜும்ஆ நடத்துவது அதபுக் குறைவாயிற்றே என்று ஊர்ப் பெரியோர்கள் கலக்கமடைந்தார்கள். ஆனால் ஹக்குடைய நாட்டம் ஜும்ஆவிற்கு முதல் நாள் வியாழக்கிழமை விஸால் அடைந்து விட்டார்கள்.

அக்காலத்தில் திண்டுக்கல்லில் பலர் தோல் வியாபாரத்திலும் மற்ற வர்த்தகங்களிலும் சிறந்து விளங்கிய சிறு, பெருவியாபாரிகளும், செல்வந்தர்களும் இருந்தார்கள். அவ்வியாபாரிகள் பெரும் மார்க்கப் பணிகளிலும் எழைகளுக்கு தானம் செய்யும் பணிகளிலும் மிகுந்த ஆர்வத்துடன் பங்கெடுப்பார்கள். அவர்களில் ஸாதாத்துமார்கள், வலிமார்களின் மகிமையறிநது அவர்களிடமிருந்து நற்பேறுகளைப் பெறும் பொருட்டு அவர்களை அண்டி நிற்கும் ஆலிம்களும் அறிஞர்களும், பெரியார்களும், பலர்இருந்தனர். ஒவ்வொரு வருடமும் ரபீஉல் அவ்வல் மாதத்தில் மௌலித் ஓதுபவர்களாகவும், மீலாத் கொண்டாடி கந்தூரி கொடுப்பவர்களாகவும் இருந்தனர். அதனால் ஹக்கு திண்டுக்கல்லுக்கு பரக்கத்தைக் கொடுத்திருந்தது. 1930 களில் குத்புல் அக்தாப் யாஸீன் நாயகம் அவர்கள் இலங்கை தலைமன்னார் துறைமுகத்தில் கப்பல் ஏறி தனுஷ்கோடி துறைமுகம் (தனுஷ்கோடி துறைமுகம் 1964இல் அடித்த புயலில் அழிந்துவிட்டது) வந்தடைவார்கள். அங்கிருந்து ரயில் மூலம் தமிழ் நாட்டில் பல இடங்களுக்கும் விஜயம் செய்வார்கள். இரயிலில் முதல் வகுப்பில் தான் பயணம் செய்வார்கள். ஒருமுறை திருநெல்வேலியில் இருந்து சீர்காழிக்கு இரயில் பயணம் செய்து கொண்டிருக்கையில் காய்ச்சலால் சங்கடத்திற்கு உள்ளானார்கள். அவர்களின் தோற்றத்தைப் பார்த்த பரிசோதகர் ( **TTE** ) இவர்கள் ஒரு பெரியார் என்பதை உணர்ந்து, அவர்கள்அருகில் சென்று பெரியாரே! தங்களுக்கு உடல் சங்கடம்

என்பதை உணர்கிறேன், அடுத்து வருவது திண்டுக்கல் என்ற சந்திப்பாகும் **(Railway junction)** தாங்கள் அங்கு இறங்கி ஒரு குதிரைவண்டி பிடித்து பேகம்பூருக்கு சென்றீர்களானால் அங்கு பெரிய பள்ளி உண்டு அங்குத் தங்கி உடல் சங்கடம் சரியான பிறகு பயணத்தை மேற்கொள்ளலாமே என்றார்.

அதன்படி யாஸீன் நாயகமவர்களும் திண்டுக்கல்லில் இறங்கி பேகம்பூர் பள்ளிவந்து ஓரிடத்தில் அவர்கள் இரயில் பயணத்திற்குப் பயன்படுத்தும் **Holidall** எனப்படும் படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டார்கள். சிலமணி நேரம் அவர்களை யாரும் கவனிக்கவில்லை. நாயகமவர்கள் மாபெரும் சட்டமேதையாக, ஸைய்யிதுஸ் ஸாதாத்தாக, கல்விக் கடலாக பல ஊர்களிலும் விஜயம் செய்துமார்க்க பிரச்சாரம் செய்திருந்ததால் வெளியூர் சென்று திரும்பும் ஒரு சிலரால் அடையாளம் காணப்பட்டார்கள். பிறகு ஒரு சிறு கூட்டம் அவர்கள் இருந்த இடத்திலிருந்து சற்றுதூரத்தில் நின்று, நாம் முதலில் சென்று முஸாஹபா செய்வதா அல்லது அவர்கள் வந்து செய்வார்களா என்ற ஆலோசனையில் இருந்தனர். அப்போது பேகம்பூர் மன்பவுல் கைராத் அரபிப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பாபு ஹள்ரத் என்றழைக்கப்பட்ட அப்துல் கரீம் ஆலிம் அவர்கள், அவர்கள் ஸைய்யிதுஸ் ஸாதாத்தாக இருக்கிறார்கள். அதனால் நாம்தான் அங்கு சென்று முஸாஹபா செய்ய வேண்டுமென்றனர். அதை ஆமோதித்து அக்கூட்டம் அவர்களை நோக்கி நகர்ந்தது. இதைத் தமது ஞானதிருஷ்டியால் அறிந்த நாயகமவர்கள் முடியாத நிலையிலும் எழுந்து பாதிதூரம் சென்று முஸாபஹா செய்தார்கள். அதன்பிறகு சங்கை செய்யப்பட்டார்கள். குத்பு நாயகம் உடல் நலமாகி பயணமாகு முன் அவர்களின் தோற்றம், நாவன்மை, வசீகரத்தினால் ஈர்க்கப்பட்ட ஊர்ப் பெரியார்கள் கூடி இனி வரும் காலங்களில் இலங்கையிலிருந்து இந்திய விஜயத்தின் போது திருநெல்வேலியில் இருந்து சீர்காழிக்கு செல்லும் வழியில் திண்டுக்கல்லிலும் தங்க வேண்டுமென வேண்டிக்கொண்டார்கள். நாயகமவர்களும் அவர்களின் வேண்டுதலை ஏற்றுக் கொண்டு திண்டுக்கல்லில் வந்து தங்குவது வழக்கமாகியது. திண்டுக்கல்லுக்கு வரும் முக்கியஸ்தர்கள், பெரியார்களை புலவர் பங்களாவில் தங்க வைப்பது வழக்கம். தோல்வியாபாரத்தில் சிறந்து விளங்கிய மாப்பிள்ளை மீரான் முஹ்யுத்தீன் ராவுத்தர் அவர்கள் நாயகமவ்ர்களை மக்கள் சந்திக்கவும், துஆவும் ஆசியும் பெறவும் வசதியாக புலவர் பங்களாவை ஏற்பாடு செய்திருந்தார்கள். நாயகமவர்கள் அங்குத் தங்கும் நாட்களில் பேகம்பூர் பள்ளியில் பலநேரம் தொழுகைக்கு இமாமத் செய்துள்ளார்கள், பயான் செய்துள்ளார்கள்.

*( சன்னிதானம் காட்சி தரும்)*

# வாழ்க்கையின் மிச்சமென்ன?

மதிப்புள்ள சொத்துகளை வைத்திருந்த ரத்தன் டாடாவின் மரணத்திற்கு முந்தைய கடைசி வார்த்தைகள்...

வணிக உலகில் வெற்றியின் உச்சத்தை அடைந்துள்ளேன். மற்றவர்களின் பார்வையில் என் வாழ்க்கை ஒரு சாதனை. இருப்பினும், வேலையைத் தவிர எனக்கு மகிழ்ச்சி இல்லை. பணம் என்பது நான் பயன்படுத்தும் உண்மை.

இந்த நேரத்தில், மருத்துவமனை படுக்கையில் படுத்து, என் வாழ்நாள் முழுவதையும் நினைவில் வைத்துக் கொள்ளும்போது, நான் பெருமைப்பட்ட அடையாளமும் பணமும் மரணத்திற்கு முன் பொய்யாகவும் மதிப்பற்றதாகவும் மாறிவிட்டன என்பதை உணர்கிறேன்.

உங்கள் காரை ஓட்டுவதற்கு அல்லது பணம் சம்பாதிப்பதற்கு நீங்கள் ஒருவரை வாடகைக்கு எடுக்கலாம். ஆனால், கஷ்டப்பட்டு சாவதற்கு யாரையும் வேலைக்கு அமர்த்த முடியாது.

இழந்த பொருள்கள் கிடைக்கலாம். ஆனல் தொலைந்தால் கண்டுபிடிக்க முடியாத ஒன்று இருக்கிறது – அதுதான் வாழ்க்கை.

வாழ்க்கையின் எந்தக் கட்டத்தில் இருந்தாலும், காலப்போக்கில் இதயம் நின்றுவிடும் நாளை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

உங்கள் குடும்பம், மனைவி மற்றும் நண்பர்களை நேசியுங்கள்.. அவர்களை நன்றாக நடத்துங்கள், அவர்களை ஏமாற்றாதீர்கள், ஒருபோதும் நேர்மையற்றவர்களாகவோ அல்லது துரோகமாகவோ இருக்காதீர்கள்.

நாம் வயதாகி, புத்திசாலியாக மாறும்போது 300 அல்லது 3000 அல்லது 2-4 லட்சம் மதிப்புள்ள கடிகாரத்தை அணிவது – எல்லாம் ஒரே நேரத்தை பிரதிபலிக்கிறது என்பதை படிப்படியாக உணர்கிறோம்.

நம்மிடம் 100 அல்லது 500 ரூபாய் பர்ஸ் இருந்தாலும் – உள்ளே இருக்கும் அனைத்தும் ஒன்றுதான்.

5 லட்சம் மதிப்புள்ள காரை ஓட்டினாலும் சரி 50 லட்சம் மதிப்பிலான காரை ஓட்டினாலும் சரி. பாதையும் தூரமும் ஒன்றுதான், நாம் ஒரே இலக்கை அடைகிறாம்.

நாம் வசிக்கும் வீடு, அது 300 சதுர அடியாக இருந்தாலும் சரி, 3000 சதுர அடியாக இருந்தாலும் சரி – தனிமை எல்லா இடங்களிலும் ஒன்றுதான்.

உங்கள் உண்மையான உள் மகிழ்ச்சி இந்த உலகத்தின் பொருள்களிலிருந்து வரவில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

நீங்கள் முதல் வகுப்பில் பறந்தாலும் சரி, எகானமி வகுப்பில் இருந்தாலும் சரி, விமானம் கீழே விழுந்தால், நீங்களும் கீழே இறங்குவீர்கள்.

எனவே.. உங்களுக்கு நண்பர்கள், சகோதர சகோதரிகள் இருக்கிறார்கள் என்று நம்புகிறேன், நீங்கள் யாருடன் பேசுகிறீர்கள், சிரிக்கிறீர்கள், பாடுகிறீர்கள், மகிழ்ச்சி மற்றும் துக்கத்தைப் பற்றி பேசுகிறீர்கள், அதுதான் உண்மையான மகிழ்ச்சி

மறுக்க முடியாத வாழ்க்கை உண்மை.

பணக்காரர் ஆவதற்காக உங்கள் பிள்ளைகளை படிக்க வைக்காதீர்கள். அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கக் கற்றுக்கொடுங்கள். அவர்கள் வளரும்போது, பொருள்களின் விலையை அல்ல, மதிப்பை அறிவார்கள்.

வாழ்க்கை என்றால் என்ன?

வாழ்க்கையை நன்றாகப் புரிந்து கொள்ள மூன்று இடங்கள் உள்ளன.

மருத்துவமனை – சிறை – சுடுகாடு

ஆரோக்கியத்தை விடச் சிறந்தது எதுவுமில்லை என்பதை மருத்துவமனையில் நீங்கள் புரிந்துகொள்வீர்கள். சுதந்திரம் எவ்வளவு விலைமதிப்புள்ளது என்பதை சிறையில் நீங்கள் காண்பீர்கள்.

சுடுகாட்டில் வாழ்க்கை ஒன்றுமில்லை என்பதை உணர்வீர்கள்.

இன்று நாம் நடக்கும் நிலம் நாளை நமதாக இருக்காது.

இனிமேல் கண்ணியமாக நடந்துகொள்வோம், பெற்ற பெற்றோருக்கு நன்றி செலுத்துவோம்.

இந்தச் செய்தியை வேறொருவருடன் பகிர்ந்து கொள்ள முடியுமா? மேலும், எனது பெற்றோர்கள், சகோதர சகோதரிகள், எனது உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், குடும்பத்தினர், எனது சமூகம், எனது நாடு அனைவரையும் நான் நேசிக்கிறேன்.

அனைவருக்கும் ஆசிகள் கிடைக்கட்டும். அனைவரும் நலமாக இருக்கட்டும்.

# இறை ஞானம் தந்திடுவீர்
# இறை வழியில சேர்த்திடுவீர்!

எஸ். அப்துல் மஜீத் ஹக்கிய்யுல் காதிரிய் திண்டுக்கல்.

மறு மலர்ச்சி மதி இலங்கும் ஒளியாய்
மறுமலர்ச்சி நபியாய் வந்தீர் நாதரே!
காலமுள்ள வரைக்கும் காசிம்நபி வழியைத் தந்தீர் நாதரே!
அருளான அவுனுடைய பாதத்தில் இருக்கணுமே
முத்தான இரத்தினமே அவ்ன் எங்கள் நாயகமே!
நேரில் வந்து ஆதரித்தீர்
பூரணமாய் உலகில் காட்சி தந்து எம்மை சீராய் ஆக்கினீர்
இறையுடைய மொழியும் அவ்னுடைய மொழியும் ஒன்றாய் சங்கமம்!

அவ்னீ எங்கள் நாயகமே! அருள் கொடுத்த மாதவமே!
ஞானக் கரை சேர்க்க வந்த எங்கள் குருவே
வான் தெரியும் வான் பிறையாய்
பாகை கற்கும் மாணிக்கமாய் வங்கக் கடல் சிப்பிமுத்தாய் வந்த ஒளியே!
ஞான கடல் சங்கமமே குருநாதர் எம்பிரானே
எங்கள் உயிர் நாயகமே நபிநாதர் ஒளி விளக்கே!
உம்மைப் போன்ற மனிதரல்ல உம்மைப்போன்ற புனிதரல்ல
தினந்தோறும் உம் நினைவே எனக்கு வேறு கதியுமில்லை!
(மதி இலங்கும்)
வங்கக் கடல் ஆழமென்ன வல்லவர்கள் கண்டதுண்டு
இறையுடைய ஆழம்யாரும் கண்டதில்லையே!
என்னுடைய நாயகமே ஞானம்தரும் சங்கமமே
திருமறையின் விரிவுரையை தந்த நாதரே
அருள் மழை வந்து பொழிகையிலே அதில் நனைய நான் மகிழ்வேன்
திருமறையை ஓதுகையில் குருநாதர் மொழிகேட்பேன்
உள்ளம் உருகிப் பாடுகின்றேன் மெல்ல மெல்ல கேட்குகின்றேன்
இறை ஞானம் தந்திடுவீர் இறை வழியில் சேர்த்திடுவீர்!
(மதி இலங்கும்)

*மெட்டு- நன்றி செல்ல உனக்கு வார்த்தையில்லை எனக்கு)*

# அபுதாபியில்
# நூற்கள் வெளியீட்டு விழா!

அபுதாபியில் தந்தை நாயகம் (ரலி) அவர்களின் யவானிஉ மற்றும் புஹாரி ஷரீப் முதல் பாகம் வெளியீட்டு விழா, ஆருயிர் செய்கு நாயகம் அவர்களின் அருளாசியால், முதுகுளத்தூர் அஹ்மத் இம்தாதுல்லாஹ் அவர்களின் முயற்சியால் கடந்த 21-09-2024, சனிக்கிழமை நடந்தது.

இந்த நிகழ்வில் இந்த வருடம் ஆருயிர் செய்கு நாயகம் அவர்களின் வெலிகமை இல்லத்தில் நடந்த புனித மீலாது விழாவில் கலந்து கொண்ட எகிப்து மற்றும் மொராக்கோ நாட்டின் அக்பரிய்யா தரீக்காவின் தலைவர்கள் டாக்டர் ஷேக் மஷீதி அவர்களும், அமீரகத்தின் பூர்வீக அரபுகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவின் துவக்கமாக புனித புர்தா ஷரீப் மஜ்லிஸ் திருமுல்லைவாசல் ஸெய்யித் அலி மௌலானா அவர்களின் தலைமையில் துவக்கமானது. உடன் அரபு மக்களும் சேர்ந்து ஓதினார்கள்.

மௌலித் மஜ்லிஸ் அமர்வுக்கு பிறகு, நூல்கள் வெளியீட்டு விழா நடந்தது. நிகழ்ச்சி தொகுப்பு மற்றும் வரவேற்புரையை திண்டுக்கல் நூருல் ஹக் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். துவக்கமாக திண்டுக்கல் நூருல் அமீன் அவர்களின் மகனார் அபுபக்கர் ஸித்திக் திருமறை வசனங்களை ஓதினார். வஹ்ததுல் வுஜூதை மதுக்கூர் அப்துல் ஹாதி ஓ.பி.எம். பஷீர் மற்றும் குழுவினர்கள் பாடினார்கள். தரீக்காவின் அறிமுகம், நூற்களின் ஆசிரியரின் அறிமுகம், நூற்களின் அறிமுகம் முதலானவைகளை அதிரை ஷர்புதீன் அவர்கள் வழங்கினார்கள்.

பின்பு யவானிஉ நூலுக்கு தப்ஸீர் வழங்கிய டாக்டர் ஷேக் மஷீதி அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். பின்பு அமீரகத்தை சேர்ந்த ஸாலிஹ் ஹக்தானி ஹஸனி, தம்மா ஹக்தானி ஹஸனி, அஹ்மத் ஹக்தானி ஹஸனி ஆகியோர் சிறப்புரை தந்தார்கள். முடிவாக நன்றியுரையை திருமுல்லைவாசல் ஸெய்யித் அலி மௌலானா அவர்கள வழங்கினார்கள். பின்பு விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் விழாவினை நடாத்திய அரபுகளின் இல்லத்திலேயே விருந்து நடைபெற்றது. இந்த விழாவில், அபுதாபி, துபை சபையைச் சார்ந்த 30 க்கும் மேற்பட்ட ஆத்ம சகோதரர்கள் கலந்து கொண்டார்கள். விழாவிற்கான ஏற்பாடுகளை அபுதாபி சபையின் செயலாளர் ஜஉபர் ஸாதிக் ஒருங்கிணைப்போடு அபுதாபி சபையினர் செய்திருந்தனர்.

# துபையில் முப்பெரும் விழா

அகிலத்திற்கோர் அருட்கொடை, கற்றிலாக் கலைக்கடல் கண்மணி நாயகம், முஹம்மது நபிகள் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் பிறந்த நாளான மீலாதுன்னபி விழாவும் ஞானியரின் கோமான், குத்புல் திலகம், மெய்நிலை கண்ட ஞானி முஹ்யத்தீன் அப்துல் காதிர் ஜீலானி கத்தஸல்லாஹூ ஸிர்ரஹில் அஜீஸ் அவர்களின் நினைவு விழா மற்றும் இஸ்லாமிய நெஞ்சங்களில் ஈமான் எனும் உரமேற்றும் ஆங்கிலப் புத்தகம் மற்றும் சிறார் பாடல்கள் என்ற புத்தகம் வெளியீட்டு விழாவும் முப்பெரும் விழா துபையில் கலீபா முனைவர் ஷஹாப்தீன் அவர்களின் இல்லத்தில் சீரும், சிறப்புமாக நடைபெற்றது. கண்ணியத்திற்குரிய ஸெய்யது அலி மௌலானா அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள். கிராஅத் ஆழியூர் பெரிய பள்ளிவாசல் இமாம் அமானுல்லாஹ் மிஸ்பாஹி அவர்கள் ஓதினார்கள். வஹ்ததுல் வுஜூத் மதுக்கூர் ஜஉபர் ஸாதிக் வழங்க, அதன் தமிழாக்கம் ஆழியூர் அபுல் பஷர் செய்தார்கள். புகழ்ப்பாடல், ஞானப் பாடல்களை திண்டுக்கல் அஜ்மான் இப்ராஹீம் மற்றும் மதுக்கூர் அலி அக்பர் பாடினார்கள்.

வரவேற்புரை கலீபா முனைவர் ஷஹாப்தீன் அவர்கள் நிகழ்த்த, தலைமையுரை கண்ணியத்திற்குரிய ஸெய்யிது அலி மௌலானா நிகழ்த்தினார்கள். தொடர்ந்து ஆழியூர் பெரிய பள்ளிவாசல் இமாம் அமானுல்லாஹ் மிஸ்பாஹி அவர்கள் சொற்பொழிவு செய்தார்கள்.கீழைக்கரை முஹிப்புல் உலமா மஹ்ரூப் காக்கா அவர்களின் சொற்பொழிவும், சிறப்புரையை அபுதாபி மௌலவி ஹுஸைன் மக்கி ஆலிம் அவர்கள் அவைக்கு வழங்கினார்கள். அல் அய்ன் ஜமால் முஹம்மது ஆருயிர் செய்கு நாயகம் அவர்களின் பெயரில் மனமுருக பாடலை பாடினார்கள். இறுதியாக துபை சபையின் துணைத் தலைவர் அப்பாஸ் ஷாஜஹான் அவர்கள் புத்தக வெளியீட்டு நிகழ்வை தொகுத்தளித்தார்கள்.

தொடர்ந்து 41 நாட்களுக்கும் தன்னுடைய ஷார்ஜா இல்லத்தைத் தந்து அதனை அலங்கரித்து சங்கைப்படுத்திய இல்ல உரிமையளர் மதுக்கூர் முஹம்மது ஸாதிக் அவர்களுக்கும், 41 நாட்களுக்கும் மௌலிதை முன்னின்று நடத்திய மதுக்கூர் அப்துல் ஹாதி அவர்களுக்கும், தினசரி தப்ரூக் உணவை வழங்குபவர்களை ஒருங்கிணைப்புச் செய்த மதுக்கூர் பஷீர் அஹ்மத் அவர்களுக்கும், தினமும் புகழ்பாடல்கள பாடிய மதுக்கூர் அலி அக்பர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கபட்டது. மேலும் கண்ணியமிகும் மௌலானாமார்களுக்கும், சிறப்பு அழைப்பாளர்களுக்கும் பொன்னாடை போர்த்தி கவுரவிக்கப்பட்டது. நன்றியுரை மதுக்கூர் முஹம்மது ஸாதிக் அவர்கள் வழங்கினார்கள் இறுதியாக ஸலாம், ஸலவாத்து பைத்துடன் நிகழ்வு நிறைவு பெற்றது. அனைவருக்கும் விருந்து உணவு வழங்கப்பட்டது. நிகழ்வில் அமீரகத்தின் பல பகுதிகளைச் சார்ந்த ஆத்ம சகோதரர்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்வினை கலீபா முனைவர் ஷஹாப்தீன் அவர்களின் இல்லத்தார்கள் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

*(செய்தி: மதுக்கூர் ஜஉபர் ஸாதிக், அபுதாபி.)*

# பல்லக்கு தம்பி வலீ(ரஹ்)

(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.ஸி. ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)

அடுத்து, தொண்டியில் ஒரு சம்பவம் நடந்தது. வலீயுல்லாஹ் அருந்துவதற்கு அவர்கள் முன் தேனீர் கொண்டுவந்து வைக்கப்பட்டது. அப்போது அக்கூட்டத்தில் அமர்ந்திருந்த ஊர்த் தலைவர்களில் ஒருவர் தம் மனதில் “இவர்கள் உண்மையான வலீயாக இருப்பின் இவர்களாக தம்மை அழைத்து தேனீர் குடிக்கச் சொல்ல வேண்டும்” என்று எண்ணிக் கொண்டார். இதை உள்உணர்வால் அறிந்து கொண்ட வலீயுல்லாஹ் அவர்கள் கூட்டத்தின் மத்தியில் அமர்ந்திருந்த அந்த நபரின் பெயரைச் சொல்லி அழைத்து, தங்கள் முன் இருந்த தேனீரை ஒரு கோப்பையில் ஊற்றி அவரிடம் கொடுத்து குடிக்கச் சொன்னார்கள். அந்த நபர் அதிர்ந்து போனார். ஒருபுறம் மகிழ்ச்சியாக இருந்த போதும் மறுபுறம் வேதனையாகவும் அவருக்கு இருந்தது. காரணம் அவர்களது ‘விலாயத்’தைப்பற்றி ஐயுற்றதற்காக வருந்தினார்.

வலீயுல்லாஹ் தமக்கு வரும் காணிக்கைகளை வாங்கித் தம் விரிப்பின்கீழ் வைப்பது வழக்கம். அதனை அவர்களது உறவினர்கள் எடுத்துக் கொள்வார்கள். வலியுல்லாஹ் அவர்களிடம் சொல்வதும் இல்லை. கேட்பதுமில்லை. அதைப்பற்றி அவர்கள் பொருட்படுத்துவதில்லை. “தேவைப்பட்டவர்கள் எடுத்துக் கொண்டார்கள்! தேவைப்பட்டவர்கள் எடுத்துக் கொண்டார்கள்!” என்று மட்டும் இரண்டு முறை சொல்லி விட்டு போசாமலிருந்து விடுவார்கள்.

தொண்டி மக்கள் வலீயுல்லாஹ் அவர்கள் மீது கொண்டிருந்த பந்தம் வலீயுல்லாஹ் அவ்வூர் மக்கள் மீது கொண்டிருந்து அன்பும் பாசமும் அளப்பரியதாக இருந்தது. வலீயுல்லாஹ் அவர்கள் ஆணைப்படி தொண்டி மக்கள் அங்குள்ள கற்குளம் மைதானத்தில் பெரிய பந்தல் போட்டு அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீலாதுப் பெருவிழாவை புனித மௌலிது ஷரீப் ஓதி வெகு விமர்சையாக இன்றளவும் கொண்டாடி வருகின்றனர். இப் பெருவிழாவிற்கு வலீயுல்லாஹ் அவர்களிடம் மிக கண்ணித்துடன் அழைப்பார்கள். அதேபோல் வடக்குத் தெருவில் உள்ள மக்கள் ஒன்று கூடி இதே போல் மலங்கு சாஹிபு தைக்காவில் வேறெரு தேதியில் வலீயுல்லாஹ் அவர்களை அழைத்து வந்து மீலாதுப் பெருவிழாவை புனித மௌலிது ஷரீபை ஓதி கொண்டாடி வருகிறார்கள்.

நமது அருமை ஷெய்கு நாயகம் அவர்கள் புனித மௌலிது ஷரீபை ரபீஉல் அவ்வல் மாதம் முழுவதிலும் ஒவ்வோர் வீட்டிலும் ஓதச் சொன்னார்கள். பிறை 12 இல் மீலாதுப் பெருவிழாவையும் கொண்டாடச் சொல்லியுள்ளர்கள். அது மட்டுமல்லாது இலங்கை, வெலிகமத்தில் உள்ள அவர்களின் முபாரக்கான இல்லத்திலும் மீலாதுப் பெருவிழாவை மிகச்சிறப்பாக கொண்டாடுவர்கள். அதற்கு பல நாடுகளிலிருந்து அவர்களின் முரீதுகள் வந்து குவிந்து விடுவார்கள். ஊரே திருவிழாக்கோலம் பூண்டது போல் இருக்கும். இன்னும் முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்களின் மௌலிதையும் பிறை 1 முதல் 11 வரை ஓதும்படியும் சொல்லி யுள்ளார்கள். அதன்படி முரீதுகளின் வீட்டில் போட்டி போட்டுக் கொண்டு வெகுசிறப்பாக விருந்துடன் கொண்டாடி ஓதி வருகிறார்கள். அனைத்து முரீதுப் பிள்ளைகளும் ஒருவருக்கொருவர் சந்தித்து அளவளாவி மகிழ்வது என்பது ஒரு மறக்க முடியாத மறுக்க முடியாத உண்மையாகும்.

ஒருசமயம் வலீயுல்லாஹ் அவர்கள் தொண்டி வந்திருந்த போது மார்க்கச் சொற்பொழிவு ஒன்றை மக்கள் முன் ஆற்றினார்கள். அதுசமயம், "மக்களே அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையைப் பின்பற்றி நீங்ள் தாடி வளர்த்து மீசையை நறுக்கிக் கொள்ளுங்கள்" என்று கூறினார்கள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் மனதில் இதைப்பற்றி இழிவாக எண்ணிவிட்டார். அவர் குளிக்க குளத்திற்குச் சென்று குளத்தில் மூழ்கி எழுந்து முகத்தைத் தடவினார். அவரது மீசை முழுவதும் சிறைத்தது போல் அவர் கையோடு வந்து விட்டது. அவர் பதறிப்போனார். "தாம் வலியுல்லாஹ் அவர்கள் சொன்ன சுன்னத்தான காரியத்தைப்பற்றி இழிவாக எண்ணியதன் விளைவுதான் இது" என்று உணர்ந்து வலியுல்லாஹ் அவர்களிடம் ஓடி வந்தார். தம் தவற்றைக் கூறி மன்னிப்புக் கேட்டார். அவரை அவர்கள் மன்னித்து அனுப்பிவைத்தார்கள்.

தொண்டிக்கு அருகில் உள்ள ஊர் "நம்புதாளை"அவ்வூர் மக்கள் ஒன்றுகூடி தொண்டிக்கு வந்து நம் வலீயுல்லாஹ் அவர்களை நம்புதாளைக்கு வரும்படி மிகவும் மன்றாடி வேண்டியுள்ளார்கள். அவர்கள்அதற்கு சம்மதம் தெரிவித்ததும் உடனே அவர்கள் பல்லக்கு ஒன்றை தயார் செய்து அவர்களை அதில் அமரவைத்து தாங்கிக் கொண்டே நம்புதாழைக்குச் சென்று விட்டார்கள்.

அங்கு ஒரு பள்ளியில் ஆண்கள் அமர்ந்து அவ்வூர் மக்களுக்காக அரபியில் கவி மழைபொழிந்தார்கள்.

"லக்கும் சோபனம் வ அஹ்லா லக்கும் சோபனம் வ அஹ்லா

லக்கும் சோபனம் வ அஹ்லா யா சுக்கான பலதி நம்புதாளை"

என்ற பல்லவியை மக்களுக்குச் சொல்ல சொல்லி விட்டு அவர்கள் அனுபல்லவியாக 'ஆசு கவி' பொழியவும் இடையிலே மக்கள் பல்லவியை இணைந்து ஓதவும் செய்தது கண்கொள்ளா காட்சி மட்டுமல்ல காதுகளுக்கு அமுத விருந்தாகவும் அமைந்தது.

அதுசமயம் அவ்வூரில் பொல்லாத காலரா நோய் பரவி மக்கள் கொத்துக் கொத்தாக கொன்று குவித்தது. இதைக் கண்டு பயந்த ஊர் மக்கள் வலியுல்லாஹ் அவர்களிடம் இந்தக் கொடிய நோயை ஊரை விட்டே விரட்ட வேண்டும் என்று மன்றாடி வேண்ட, அவர்களும் இருகரம் ஏந்தி, "ஏ பொல்லா நோயே இவ்வூரையும் அதன் சுற்றுப்புறத்தையும் விட்டு அகன்று போய் விடு" என்று ஆவேசமாகக் கூறினார்கள் அன்று முதல் அந்நோய் அங்கு இல்லாது ஒழிந்தே போனது.

*(பவனி வருவார்கள்)*

# குருவே சரணம்!

எங்கள் குருவே! ஏகமே! சக்தியே! ஜெயமே! ஞானமே! பெருஞ்சுடரே!

அல்லாஹ்வை அறியச் செய்தீரே ஆணவமாய் இருப்பதை ஒழிக்கச் செய்தீரே
இறையருள் பேணி நடக்கச் செய்தீரே ஈகையோடு நடக்கச் சொன்னீரே!
(எங்கள் குருவே)

எழில்மிகு ஏகனை வணங்கச் சொன்னீரே ஏற்றத்தோடு வாழச் சொன்னீரே
ஐயமின்றி வாழ வழி வகுத்தீரே ஒற்றுமையோடு வாழச் சொன்னீரே!
(எங்கள் குருவே)
ஓர்மையோடு வாழ வழி வகுத்தீரே ஔடதம் போற்றி வாழ்வோமே
எங்கள் குருநாதரே சரணம்!

எங்கள் வாப்பா நாயகமவர்கள் திருப்பெயர் போற்றித் தொடங்கிய எந்தக் காரியமும் தோற்றுப் போனதில்லை!
அவர்களின் வாக்கு வன்மையே ஜெயம்! ஜெயம் ! ஜெயம்!
வாழ்வில் பல கராமத்துகளைஅனுபவித்த வாப்பாவின் உண்மைப்பிள்ளை

*ஃபாத்திமதுஸ்ஸஹ்ரா ஹக்கிய்யுல் காதிரிய்*

# சற்குரு சரித்திரம்

7

*(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.சி. ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)*

நமது அருமை ஷெய்கு நாயகம் அவர்களின் தாயார் உம்முல் முஃமினீன் அவர்களுடன் பேசும் பாக்கியம் பெற்றதுடன், உம்முல் முஃமினீன் அவர்கள் என்னை இரண்டுமுறை கனவில் கண்டதாக நம் அருமை வாப்பா நாயகம் அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள்.

சிராஜுதீன் “என் உம்மா உங்களை இரண்டு முறை கனவில் கண்டிருக்கிறார்கள். ஒரு முறை நீங்கள் கிணற்றடியில் உள்ள ஷவரில் குளித்துக் கொண்டிருப்பது போலவும், மற்றொரு முறை நீங்கள் உங்கள் குடும்பத்தாருடன் காரில் இங்குவந்து இறங்குவது போலவும் கண்டிருக்கிறார்கள்” என்றார்கள்.

இதுவும் எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியங்களில் ஒன்று

உம்முல் முஃமினீன் அவர்கள் கைசமையல் அவ்வளவு ருசியாக இருக்குமாம். ஒரு துவையல் அரைத்தாலே அப்படி சுவையாக இருக்குமாம். நம் அருமை குதுபுல் அக்தாப் யாஸீன் நாயகம் அவர்கள் உம்முல் முஃமினீன் அவர்கள் கையால் சமைத்த உணவை மிகவும் ருசித்து சாப்பிடுவார்களாம். அதோடு உம்முல் முஃமினீன் அவர்கள் நல்ல தைரியசாலியாகவும் இருந்திருக்கிறார்கள். அது அவர்களின் குடும்ப தைரியம். கண்மணி நாயகத் திருப்பேரர் ஹுசைனாரின் வழித் தோன்றல் அல்லவா? தைரியத்திற்கு என்ன குறைச்சல்? சமயத்தில் அவர்கள் இடுப்பில் கத்தியையும் சொருகி வைத்திருப்பதுண்டாம். இது அவர்கள் ஆரம்பத்தில் வெலிப்பட்டி என்னும் குக்கிராமத்தில் இருந்த சமயத்திலாகும்.

நம் அருமை ஷெய்குநாயகம் அவர்களுக்குத் திருமணம் ஆனபிறகு வெலிகாமத்திற்கு வந்து விட்டார்கள். அருமை குதுபுல் அக்தாப் யாஸீன் நாயகம் அவர்களுடன்.

காலங்கள் சென்றன. குதுபுல் அக்தாப் யாஸீன் நாயகம்அவர்கள் இருக்கும் வரை இலங்கை சென்று வரும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. நான் சிறுவன் என்ற காரணத்தினாலே என்னவோ குதுபுல் அக்தாப் யாஸீன் நாயகம் அவர்களின் மறைவிற்குப் பிறகுதான் இலங்கை வெலிகமா செல்லும் பாக்கியம் பெற்றேன். அதுவும் எனதருமை மூத்த தோழருக்கு இணையான வலீய்யுல் ரஹீம் கோவிலூர் நாட்டாண்மைக்காரர் அவர்களின் போதனையால் தான் இலங்கை செல்லும் ஆவல்

உண்டானது. ஆம். அவர்கள் தான் அடிக்கடி சொல்லிக்காண்பிப்பார், சிங்கத்தை அதன் இருப்பிடத்தில் போய் பார்க்க வேண்டும். அப்பொழுது தான் அதன் இயல்பான தோற்றம் புலப்படும் என்று. அதனால் ஏற்பட்ட ஆவலில் நான் கலீபா அப்துல் கறீம் அண்ணண் அவர்களுடன் முதன் முதலில் அருமை வாப்பா நாயம் வீட்டிற்குச் சென்றேன். அதில் இரண்டு மூன்று முறை கலீபா அப்துல் கறீம் அண்ணன் அவர்களுடனும் பலமுறை என் மனைவியுடனும் சென்று வந்து கொண்டிருக்கிறேன். நான் சிலோன் சென்று வந்ததில் ஐந்து பாஸ்போர்ட்டே முடிந்து போனது.

அதுபோல் ஒருசமயம் நமது ஷெய்குநாயகம் அவர்களின் மூத்த சகோதரர் அவர்களின் மூத்த மகளாரின் திருமணத்திற்குச் சென்றிருந்தோம். அப்போது திண்டுக்கல் அருமை ஆத்ம சகோதரர் காஜா நஜ்முத்தீன் அவர்களும் பலரும் வந்திருந்தார். அதுசமயம் சங்கைக்குரிய பெரிய வாப்பா ஜெய்னுல்ஆபிதீன் மௌலானா அவர்கள் வீட்டின் வாசலில் நானும் காஜாவும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது சங்கைக்குரிய சின்ன மௌலானா வாப்பா அவர்களிடம் உம்முல் முஃமினீன் வாப்பம்மா அவர்கள் வெற்றிலைபாக்கு போடும் போது எனக்குக் கொஞ்சம் வாங்கித் தாருங்கள் என்றேன்.

உம்முல் முஃமீன் தாயார் அவர்கள் வெற்றிலை பாக்கு போடுவது பழக்கம். அதுவும் பச்சைப் பாக்குடன் வெற்றிலைய இடித்துப் போடுவார்கள். எனக்கு அது ரொம்பவும் பிடிக்கும். அன்றும் அதுபோல் அதைக்கேட்டேன். உடன் இருந்த காஜா, "என்ன பாவா, எனக்கும் கொஞ்சம் வேண்டும்" என்றார். நானும் எனக்கு வந்ததில் கொஞ்சம் அவருக்குக் கொடுத்தேன். அவர் வாயில் போட்டு மென்று சாற்றை விழுங்கினார். அவ்வளவுதான். அப்படியே மயங்கிச் சாய்ந்து விட்டார். எல்லோரும் பதறிப்போய் விட்டோம். உடனே வாயில் இருந்த வெற்றிலைபாக்கைத் துப்பச் சொல்லி தண்ணீர் கொடுத்தோம். சரியாகி விட்டார். காரணம் என்ன வென்றால் சிலருக்கு பச்சைப் பாக்கு சாப்பிட்டால் இப்படி மயக்கம் வருமாம். நல்லவேளை எனக்கு ஒன்றும் செய்யவில்லை.

இதுபோல் உம்முல் முஃமினீன் தாயார் அவர்கள் போடும் வெற்றிலை பாக்கில் பங்குவாங்கி சாப்பிடும் பாக்கியமும் பெற்றிருக்கிறேன். உம்முல் முஃமினீன் தாயார் அவர்கள் என்னிடம் "எங்கள் எல்லோரையும் அங்கு எடுக்கப் பாருங்கள்" என்று சொன்னார்களே அதையே வேத வாக்காகக் கொண்டு நானும் கலீபா அப்துல் கறீம் அண்ணன் அவர்களின் மைத்துனர் செய்யிது மைதீன் அண்ணன் அவர்களுடன் சேர்ந்து குதுபுல் அக்தாப் யாஸின் நாயக ம் மொத்தக் குடும்பத்தார்களுக்கும் இந்திய பாஸ்போர்ட் எடுக்கும் முயற்சியில் இறங்கி விட்டோம்.

அப்போது எனது மைத்துனர் டாக்டர் பதுருதீன் அவர்கள்தான் அடிக்கடி கூறுவார்கள், “என்னப்பா அவ்வளவு கண்ணியமிக்க பெரும் குடும்பத்தாரை இங்கு அழைத்து வர முயற்சி எடுக்கிறீர்கள்.அவர்களுக்கு அடிப்படை வசதி எதுவும் ஏற்பாடு செய்யாமல் அவர்களை இங்கு அழைத்து வருவது எனக்குச் சரியாகப் படவில்லை. பார்த்துக் கொள்ளுங்கள்” என்று கூறுவார்கள். உண்மை தான். அன்று இன்று இருப்பது போல் பக்தர்கள் இல்லை. காணிக்கையும் மிக குறைவுதான். வசதியான முரீதுபிள்ளைகள்அதிகம் இல்லை. ஆயினும் நாங்கள் இதை யெல்லாம் சிந்திக்கவில்லை. அவர்களை இங்கு கொண்டுவருவதிலேயே குறியாக இருந்தோம். திடீரெனநம் அருமை ஷெய்கு நாயகம் அவர்கள் சிராஜுதீன், “தங்கள் அனைவரையும் அங்கு எடுக்கும் முயற்சியை உடனே நிறுத்தி விடுங்கள் பிந்தி பார்த்துக் கொள்வோம்” என்று கூறிவிட்டார்கள்.

அது அப்படியே கைவிடப்பட்டது. ஒருக்கால் அப்படி அவர்கள் எல்லோரும் இங்கு வந்திருந்தால் அவர்களை கண்ணியத்துடன் பராமரிப்பது என்பது முடியாத காரியமாய்ப் போயிருக்கும். அப்போது நான் நமது சற்குரு ஷெய்கு நாயம் அவர்களிடம் என் மைத்துனர் டாக்டர் பதுருத்தீன் அவர்கள் இப்படி அடிக்கடி கூறுவார்கள் என்று அவர்கள் சொன்னதைச் சொல்லிக் காட்டினேன்.

“சரியான புத்திசாலி. அவர் சொன்னதுதான் சரி” என்று ஷெய்குநாயகம் பதில் கூறினார்கள். *(அருள்வருகை தருவார்கள்)*

## எளிதாக சுவனம் செல்லும் வழி.

என்னைச் சொர்க்கத்தில் சேர்க்கும் நற்காரியத்தைக் கற்றுக் கொடுங்கள் என்று ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டதற்கு, பசித்தவருக்கு உணவு கொடு. நன்மையை ஏவி தீமையைத் தடு. இவற்றைச் செய்ய முடியாவிட்டால் நல்லவற்றைப் பேசுவது தவிர (மற்றவற்றிலிருந்து) உனது நாவைப் பேணிக்கொள். என்று அருளினார்கள்.

(அபூ ஹுரைரா (ரலி), நூல்– அஹ்மத் 17902)

யார் அல்லாஹ்விற்காக நேசிக்கின்றாரோ அல்லாஹ்விற்காக வெறுக்கின் றாரோ அல்லாஹ்வுக்காக கொடுக்கின்றாரோ அல்லாஹ்வுக்காகத் கொடுக்காமல் இருக்கின்றாரோ அவர் தனது ஈமானை முழுமையாக்கிக் கொண்டார்.

(அபூ உமாமா (ரலி) அபூ தாவூத் – 4061)

திருச்சி மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன்
அரபிக் கல்லூரி நடத்திய,

## நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 34 ஆம் தலைமுறைத் திருப்பேரர்

குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித்
**கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல்**
ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின்

## 40 ஆம் நாள் ஃபாத்திஹா – நினைவேந்தல்

## 12ஆவது யாஸீனிய் ஆலிம் பட்டமளிப்பு விழா!

## முதலாவது ஹாஃபிழ் பட்டமளிப்பு விழா! 6

நிகழ்ச்சித் தொகுப்பாளர் மௌலவி **V.M. முஹம்மது ஹஸன் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள்:

சுன்னத் வல் ஜமாஅத் பேரியக்கத்தின் மாநிலத் தலைவர், மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரியின் ஆலோசகர் கண்ணியத்திற்குரிய **அல்ஹாஃபிழ் அல்ஹாஜ். அபுத்தலாயில், அபுல் பயான் அஸதுல்லாஹ் டாக்டர். எம். ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி எம்.ஏ. பி.எச்.டி. ஹள்ரத்** அவர்களுக்கு நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

அடுத்து சிறப்புரையாற்ற இருக்கும் ஹள்ரத் பெருந்தகை அவர்கள், இவர்களின் பேச்சு முரசு போல ஒலிக்கும். எனவேதான் இவர்களை நாம் சொல்முரசு என்று அன்போடு அழைக்கின்றோம். இவர்களது கருத்துகளோ கரும்பாக இனிக்கும். அஹ்லுல்பைத்தினரை நேசிக்கும் நேசர் இவர்கள். பொதுவாக இடி முழக்கத்தைக் கேட்கவோ, மின்னலைப் பார்க்கவோ இயலாது. எனினும், இந்த மஜ்லிஸில் இவர்களது பேச்சின் மூலம் நாம் அவற்றை உணரப் போகின்றோம். அத்தகைய சிம்மக் குரலுக்குச் சொந்தக்காரரான **ஹள்ரத் மௌலவி. அல்ஹாஜ். அல்லாமா. சொல்முரசு அபூதாஹிர் ஆலிம் பாகவி ஆலிம் பெருந்தகை** அவர்களைச் சிறப்புரையாற்ற அன்புடன் அழைக்கின்றோம்.

**ஹள்ரத் மௌலவி. அல்ஹாஜ். அல்லாமா. சொல்முரசு அபூதாஹிர் ஆலிம் பாகவி ஆலிம் அவர்கள்:**

புகழனைத்தும் அல்லாஹுதஆலாவிற்கே உரித்தாகுக. கண்மணி ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களைப் பின்பற்றி உத்தம சத்திய ஸஹாபாக்கள், தாபிஈன்கள், தபஅ தாபிஈன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள், நாதாக்கள், நல்லவர்கள், குறிப்பாக இந்த மஜ்லிஸில் நிறைந்திருக்கும் நம் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானதும் என்றென்றும் நின்று நிலவட்டுமாக!

சிறப்பான இந்த முப்பெரும் விழாவினுடைய தகுதி மிக்க தலைவர் கண்ணியமிகுந்த மரியாதைக்கும் உரித்தான அல்ஹஸனிய் வல் ஹுஸைனிய் வல் ஹாஷிமிய் மௌலானா அவர்களுக்கும், அவர்களோடு உடன் வந்திருக்கின்ற அஹ்லுல்பைத்தினருக்கும் கண்ணியத்திற்குரிய கலீபாப் பெருமக்களுக்கும் முஹிப்பீன்கள், ஆஷிகீன்களுக்கும் எனக்கு முன்னால் அழகான உரை நிகழ்த்திச் சென்றிருக்கின்ற கண்ணியத்திற்குரிய அபுத்தலாயில் டாக்டர் ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி ஹள்ரத் அவர்களுக்கும் நாங்கள் பேச அழைத்தபோதெல்லாம் வர இயலாமல் இருந்து, இன்றைக்கு வருகை புரிந்த – இன்றைக்குத்தான் அவர்களது பேச்சைக் கேட்டேன்... அய்யம்பேட்டையைச் சேர்ந்த கண்ணியத்திற்குரிய பி.எம். ஜியாவுத்தீன் பாகவி ஹள்ரத் அவர்களுக்கும் பட்டம் பெற இருக்கின்ற ஹாஃபிழ்கள், மௌலவிமார்களுக்கும் வருகை தந்திருக்கின்ற ஆன்றோர்கள், சான்றோர்கள் தாய்மார்கள், இளைஞர்கள் அனைவருக்கும் இஸ்லாத்தின் காணிக்கையான ஸலாத்தைப் பதிலை எதிர்பார்த்துச் சொன்னவனாக, எனது வார்த்தைகளைத் தொடங்குகின்றேன். அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி தஆலா வ பரக்காத்துஹு.

முப்பெரும் விழா நடைபெறும் இம்மதுரஸாவிலே மூன்று கல்வி இங்கே கொடுக்கப்படுகின்றது. ஒருபக்கம் உலகக் கல்வி, மறுபக்கம் மார்க்கக்கல்வி, மூன்றாவதாக தரீகத்தின் ஞானம். மூன்றுமே சேர்த்துக் கொடுக்கப்படுகின்ற இக்கல்லூரியிலிருந்து ஹாஃபிழ்கள், மௌலவிமார்கள் வெளிப்படுகின்றார்கள். இவர்கள் உருவாக வேண்டுமானால் நான்கு சக்திகள் தேவை. அப்பொழுதுதான் இவர்களால் உருவாக முடியும். ஒன்று, இவர்களைப் பெற்ற பெற்றோர்கள். இவர்களை வார்த்தெடுத்து உருவாக்கும் ஆசிரியர்கள், இவர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கின்ற உபகாரிகள், உருவாக வேண்டும் என்று உள்ளார்வத்தோடு பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற இந்த மாணவர்கள். இந்த 4 வகையானோருக்கும் சில செய்திகளைச் சொல்லியாக வேண்டும். உண்மையில், எனது பேச்சை எங்கிருந்து தொடங்க வேண்டும் என்ற குழப்பம் இருந்தது. கண்ணியத்திற்குரிய

அபுத்தலாயில் ஜமாலி ஹள்ரத் அவர்கள் அவர்களுடைய பேச்சில் நிறைய உதாரணங்களைக் காட்டினார்கள். அதையெல்லாம் கேட்டபொழுது, ஆசிரியரிலிருந்து தொடங்குவதே சிறந்தது என்ற காரணத்தினால், ஆசிரியர்களைப் பற்றி முதலில் சொல்கின்றேன்.

ஆசிரியர்கள் யார்? ஆசிரியர்கள் எப்படி உருவாகிறார்கள்? உலகத்தில் இருக்கின்ற ஏனைய ஆசிரியர்கள் வேறு. இங்குள்ள ஆசிரியர்கள் அவர்களிலிருந்து வேறுபட்டுள்ளார்கள். அத்தகைய ஆசிரியர்கள் பற்றிய தகவல்களைச் சொல்லப்பட வேண்டும். காரணம், கலீபா ஆலிம் புலவர் இங்கே நம்மோடு இருக்கிறார். என்னே அழகான பாடல் வரிகளை நமக்குத் தந்து வருகிறார். தமிழகத்தில் நிறைய ஆலிம் பெருமக்கள் எழுதுகிறார்கள். ஆனால், இவருக்கு நிகராக எழுதுகிற ஆற்றல் உள்ளோரைத் தேட வேண்டும். ஆலிம் புலவர் அவர்களுக்கு உள்ள ஆற்றல், அலாதியான ஆற்றல். அல்லாஹுதஆலா கபூல் செய்தருள்வானாக.

ஆசிரியர் யார் தெரியுமா? வகுப்பறையில் இருந்து உலகத்தின் – சமூகத்தின் – மார்க்கத்தின் வரைபடத்தை இங்கிருந்து வரைந்தளிக்கிறார். ஓர் ஆசிரியர் தான் உலகம் எப்படி இயங்க வேண்டும் என்பதை வகுப்பறையிலிருந்து தீர்மானிக்கிறார். வகுப்பறை தான் அத்தனைக்குமான தீர்மானம். ஆக, இங்கு என்ன தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது? முழு இஸ்லாமியச் சமுதாயத்தையும் சொர்க்கத்துக்குக் கொண்டு செல்கின்ற வழி என்ன என்பதைத் தீர்மானிக்கின்ற இடத்தில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்றால், அந்த ஆசிரியரின் கனம் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாழிர் ஹள்ரத் அவர்கள் இங்கு பேசும்போதே, பைளாவியிலிருந்து அற்புதமான ஞானக் கருத்துகளை எடுத்துச் சொன்னார். ஆசிரியர்கள் யார் தெரியுமா? ஆடை அணியாத இராணுவ வீரர்கள். ஒரு பக்கம் சீருடையை அணிந்து கொண்டு நாட்டைப் பாதுகாக்கின்ற இராணுவ வீரர்கள். மறுபக்கம் அந்தச் சீருடை அணியாமல் நம்மைப் போன்று சாதாரண உடைகள் அணிந்து கொண்டு மார்க்கத்தைப் பாதுகாக்கின்ற இராணுவ வீரர்களை உருவாக்கித் தருபவர்கள் தாம் ஆசிரியர்கள். இவர்களெல்லாம் மார்க்கத்தைக் காக்கின்ற ஹிஸ்புல்லாஹ். அல்லாஹ்வின் ஆர்மிகள். கற்று வெளியே சென்று மார்க்கத்தைப் பாதுகாக்கின்ற இராணுவ வீரர்கள் என்று சொன்னால் மிகையில்லை. ஒரு மஹல்லாவிற்குப் பணிக்குச் செல்கின்ற போது, அங்கிருக்கின்ற மக்கள் எப்படி நடக்க வேண்டும்? எப்படி இருக்க வேண்டும் என்று கற்றுக் கொடுக்கின்ற ஆர்மிகள். இவ்வாறான மாணவர்களை உருவாக்குகின்ற ஆசிரியர்கள் யார் தெரியுமா? தாய் அன்பைக் காட்டுவாள்,

தகப்பன் கண்டிப்பைக் காட்டுவான். அறிவைக் கொடுப்பான். ஆனால், ஆசிரியர்கள் மட்டும் தான் தாயும் தகப்பனுமாக மாறி அன்பையும் அறிவையும் கொடுப்பவர்கள். இங்கு பாட அறையிலே அமர்கின்ற போது, அன்பு, அறிவு கண்டிப்பு எல்லாம் சேர்ந்து கிடைக்கின்ற ஒரே இடம், மதுரஸா.

ஜிப்ராஈல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், ரசூலுல்லாஹு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன் மண்டியிட்டு அமர்ந்ததைப் போல், மண்டியிட்டு அமர்ந்து, மார்க்கம் கற்கின்ற நிலை. உலகத்தில் வேறு எங்காவது இதுபோன்று நடக்குமா?

பள்ளிக்கூடங்களில் நான் படித்த காலம். நான் தஞ்சை மாவட்டம் ஆக்கூரில் படித்தேன். எங்கள வாத்தியார் பெயர் அய்யாசாமி சார். மிக நல்ல வாத்தியார். நல்ல குணத்திற்குச் சொந்தக்காரர். ஆனால், அப்போது அவர் பெயரிலேயும் குறள் எழுதினான், ஒருவன். அகர முதல எழுத்தெல்லாம் அய்யா சாமி தலையெழுத்து... என்று ஹாஸ்யமாகச் சொல்வான். வாத்தியார் பெயரிலேயே குறள் எழுதிய காலம். ஆனால், இங்கு மதுரஸாவில் அது நடக்காது. அறபுக் கல்லூரிகளில் அமைதியாக நடந்து ஆசிரியர்கள் முன் மண்டியிட்டு, தாயும் தகப்பனுமாய் அந்த ஆசிரியர்களை மதிக்கின்ற அற்புத நிகழ்வு நடக்கின்ற இடம் மதுரஸா.

ஆசிரியர்கள் யார் தெரியுமா? ஒரு நோயாளி கண்ணை மூடிக்கொண்டு மருத்துவரிடம் போவார். நோய்க்குரிய ஆபரேஷன் செய்தால் பிழைப்போமா? இல்லையா? என்ற சிந்தனையோ, அறிவோ இன்றி கண்ணை மூடிக்கொண்டு மருத்துவரிடம் போவார். ஆனால், ஒரு குடும்பமோ, ஓர் உலகே, ஒரு நாடே, ஏன்ஓர் உலகமே விழித்துக் கொண்டே நம்பக்கூடியவர்கள் ஆசிரியர்கள் மட்டும்தான். ஒரு மாணவர் மதுரஸாவிற்குள் நுழைகின்றான் என்றால், அவனது குடும்பமே அங்குச் சென்றால் நமது பிள்ளை சிறப்பாக வருவான் என்று அத்தனை பேரும் யாரை நம்பி அனுப்பி வைக்கிறார்கள்? மருத்துவரிடம் கண்மூடி நம்பப்படுகிறது. ஆனால், கண்ணைத் திறந்து, இங்குச் சென்றால் வழிகாட்டுதல் இருக்கும்; நேர்வழி இருக்கும்; புனிதனாக மாறுவான் என்ற நம்பிக்கையோடு உலகத்தில் நம்பி ஏற்கப்படக்கூடியவர்கள் ஆசிரியர்கள் என்றால் மிகையே இல்லை.

ஆசிரியர்கள் யார் தெரியுமா? முகக் குறி பார்த்து தேர்வு செய்யக்கூடியவர்கள். உள்ளத்தில் என்ன இருக்கிறது என்பதைக் குறிப்பால் உணர்வார்கள். இந்தத் தன்மை உலகத்தில் ஆசிரியர்களுக்கு மட்டும் சொந்தம். 40 மாணவர்கள் அமர்ந்திருக்கும் வகுப்பறையின் மாணவன் ஒருவன் தோள்மீது மட்டும் கையை

வைத்து, என்ன தம்பி, கவலையாகத் தெரிகிறாயே, என்ன விஷயமப்பா? என்ன பிரச்சனை? என்று பரிவோடு விசாரித்துத் தீர்ப்பார்கள். நான் படிக்கின்ற காலத்தில் நடந்த நிகழ்வைக் கூறுகின்றேன். இவ்வாறே என்னோடு படித்த மாணவன் ஒருவனை எங்கள் உஸ்தாது என்ன விஷயம் என்று வினவியபோது, அந்த மாணவன் சொன்னான் : எனது அம்மாவும் அத்தாவும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். எனது அத்தா கடுமையான குடிகாரர். இந் நிலையில் எனது அம்மா என்னிடம் கூறினார், தம்பி நீ மதுரஸாவிற்கு ஓதுவதற்குச் செல்கிறாய், நீ வரும்போது நான் இருப்பேனோ, இருக்க மாட்டேனோ தெரியாது. அதனால், நல்லபடியா சென்று கற்று வா என்று சொன்னார்கள். நான் அந்தக் கவலையில் இருக்கின்றேன் என்று வருந்தினான். அப்போது அந்த உஸ்தாது பாடத்தை நிறுத்திவிட்டு, மாணவனை அழைத்துக் கொண்டு அவனது இல்லம் சென்றார். அந்தத் தாய்க்கு ஆறுதல் சொன்னார். இதுதான் ஆசிரியர். ஊழியம் அறிந்து செயல்படக்கூடியவர்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருமைத் தோழர் அபூ குஸாபா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மகளார் சான்று. அபூகுஸாபா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் தந்தை இல்லை. அவர்களை வளர்த்தது தாயாரும் சின்னத்தாயாரும் தான் வளர்த்தார்கள். ஒருமுறை அபூ குஸாபா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு 8 அல்லது 9 வயதிருக்கும். ஆடுகளை மேய்ப்பதற்காகச் சென்றபோது, அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உபதேசம் செய்து கொண்டிருந்தார்கள். அதைச் செவியுற்று, அறவுரைகளால் ஈர்க்கப்பெற்ற அபூ குஸாபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆட்டை மறந்தார். அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு இணைந்தார். இலயித்துப் போனார். மாலைப் பொழுதும் வந்துவிட்டது. மேயக் கொண்டு வந்த ஆட்டை வீட்டுக்கு ஓட்டிச் சென்றார். மேயாத ஆடு வயிறு ஒட்டிப் போய், மேயவிடவில்லை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. வீட்டில் அந்த ஆடு நிற்கும் விதத்தைப் பார்த்தே அந்த மேயவிடப்படவில்லை என்று அவரது தாயாருக்குத் தெரிகிறது. என்ன தம்பி, என்ன செய்தாய்? ஆடு ஏன் இவ்வாறு இருக்கிறது என்று கேட்கிறார். அதற்கு அபூ குஸாபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், இல்லையம்மா ஒன்றும் செய்யவில்லை என்கிறார். நாளைக்கு ஒழுங்காக ஆடு மேய்க்கவில்லை என்றால், அடிவிழும் என்று அதட்டி வைக்கிறார். மறுநாளும் ஆடு மேய்க்கச் சென்றார். அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டார். ஆட்டை மறந்தார். இந்த மஜ்லிஸில்

நிறைந்திருக்கின்ற முரீதீன்கள் ஷைகிலே தம்மை மறந்தவர்கள், ஃபனாவானவர்கள் என்பது கண்கூடாகத் தெரிகின்றது. மூன்றாவது நாளும் அவ்வாறு ஆடு ஒழுங்காக மேயவிடப்படாததால், அவரது அம்மா அவரை அடித்தும் விட்டார்கள். செமத்தியான அடிபட்டு, உடம்பெல்லாம் தடித்துப் போனபின்னும், நான்காம் நாள் ஆடு மேய்க்கச் சென்றபோது, அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் காண்கிறார்கள். ஆடும் மறந்து போனது, அம்மாவின் அடியும் மறந்து போனது. ஒருபக்கம் தாய் சொன்ன கண்டிப்பு நினைவில் இருக்கிறது. மறு பக்கம் தாஹா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளுரை இருக்கிறது. அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு இணைவதா? அம்மா சொல்வதை நினைத்து நடப்பதா? தாயின் பாசம் ஒரு பக்கம், பெருமானாரின் நேசம் மறுபக்கம். பாசக்கரமா? நேசக்கரமா? என்று கேட்டால், இங்கிருக்கின்ற எல்லோருமே சொல்வீர்கள், நேசக்கரமே என்று. அதைத்தான் அபூ குஸாபா ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் செய்தார். நேசக்கரம் நீட்டினார். ஆட்டை மறந்தார். அண்ணல் நபி ஸல்லல்லாஹ அ லைஹி வஸல்லம் அவர்களோடு இணைந்தார். ஆனால், அன்று நடந்தது வேறு. அந்த மஜ்லிஸில் இருந்த அபூகுஸாபாஅவர்களிடம், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அபூ குஸாபா! என்ன கவலையோடு இருக்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். இதெல்லாம் ஆசிரியருக்கு மட்டுமே தெரியும். இஃது அல்லாஹுதஆலா அவர்களுக்குக் கொடுத்திருக்கிற ஹிக்மத். அப்போது, அபூகுஸாபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களது ஆடையை விலக்கிக் காட்டி, விஷயத்தைக் கூறினார்கள். உடம்பெல்லாம் தழும்புகள். இன்று மாலைப் பொழுதில் வீட்டுக்குச் செல்லும்போது, உமது ஆட்டை எம்மிடம் காட்டுங்கள் என்பதாக, பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மொழிந்தார்கள். அவர் வீடு செல்லும் நேரம் வந்தது. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது முபாரக்கான திருக்கரங்களை ஆட்டின் மீது வைத்தார்கள். ஆடு அடியெடுத்து வைக்கின்ற ஒவ்வொரு எட்டிற்கும் ஆட்டின் எடை கூடியது. 8 கிலோ ஆடு, வீட்டுக்குள் நுழையும்போது 28 கிலோவாக நுழைகிறது. அதைப் பார்த்ததும் அந்த அம்மா அதிசயத்துப் போய், என்ன நடந்தது என்று கேட்டார்கள். அதற்கு அபூகுஸாபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்: அம்மா! நான் ஆடு மேய்க்கப் போகும்போது அதிசய மனிதர் ஒருவரைக் காண்பேன் அம்மா. இன்று நான் அடிவாங்கியதைச் சொன்னேன். அவர்கள் நம் ஆட்டின் மீது கைவைத்தார்கள். வீட்டுக்கு வரவர ஆட்டின் எடை கூடியதம்மா என்று கூறினார்கள். ஆசிரியர்களின் கைவைப்பில் அவ்வளவு பரக்கத் இருக்கிறது.

ஆசிரியர்கள் என்ன சாதாரணமானவர்களா? நமக்குக் கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்கள் இருக்கின்றார்களே, அவர்கள் சிற்பிகள். ஏழு வருடங்கள் செதுக்கிச் செதுக்கி இத்தகைய மாணவர்களை உருவாக்குகின்றார்கள். சாதாரண கல்லை சிற்பி செதுக்கின்றான், உயரத்திற்குச் சென்று விடுகிறது. செதுக்கப்படாத கல் மிதிக்கப்படுகிறது. உங்களுக்கு இவ்வளவு உயர்வு எதனால் வருகிறது? நீங்கள் செதுக்கப்பட்டதால்தான் வருகிறது. ஆசிரியர்களைக் கொண்டு நீங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றீர்கள்.

தமிழன் அழகாக ஓர் ஒப்பீடு சொல்வான். எண்ணையும் தண்ணீரும் சண்டை போட்டுக் கொண்டதாம். எண்ணைக்கு மேல் தண்ணீர் ஊற்றினாலும், தண்ணீருக்கு மேல் எண்ணை ஊற்றினாலும் மேலே மிதப்பது எண்ணைதான். அதற்கு தண்ணீர் கேட்டதாம், என்ன எப்போது பார்த்தாலும் நீயே மேலே நிற்கிறாய்? உன்மீது என்னை ஊற்றினாலும் என்மீது உன்னை ஊற்றினாலும் நீயே மேலே நிற்கிறாய். நான் மேலே நிற்கிறதை மட்டும் தான் உனக்குத் தெரியும். நான் தென்னை மரத்தின் உச்சியில் இருந்தேன். இந்த மனிதன் என்னைப் பறித்து, வெயிலில் காய வைத்துப் பாடாய்ப்படுத்தி என்னை கொப்பரையாக மாற்றினான். அதன்பின் செக்கிலிட்டு ஆட்டி பிழிந்து எடுத்தான். அதனால் இப்போது நான் உனக்கு மேலே நிற்கின்றேன் என்றது எண்ணை. இந்த மஜ்லிஸில் வந்திருக்கின்ற அனைவரும் இவ்வளவு நேரமாகியும் பசிக்காமல் உட்கார்ந்து பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கிறோமே, எதனால் தெரியுமா? ஏழு வருடங்கள் செதுக்கப்பட்ட இவர்கள், இங்கே பட்டம் பெற இருக்கின்றார்கள். அதற்காகத் தான் நாம் பசியை மறந்தும் கூடக் காத்திருக்கின்றோம். செதுக்கப்பட்டதால் இவர்களுக்கு உயர்வு. இவர்களைச் செதுக்கிய ஆசிரியர்கள் மதிக்கத்தக்கவர்கள்.

ஆசிரியர் யார் தெரியுமா? மருத்துவர். மற்ற மருத்துவர்கள் எல்லாம் உடல் நோயைக் குணப்படுத்துகிறார்கள். ஆனால், இங்கே ஆசிரியர்கள் மடமையைப் போக்கும் ஆற்றல் படைத்தவர்கள். அய்யுஹல் வலது என்ற நூல்; இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் எழுதிய நூல் அது. மிக அழகான நூல். அதில் சம்பவம் ஒன்று வரும்.

ஒருமுறை ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஓடிக் கொண்டிருந்தார்கள். சாதாரணமாக, நாம் ஓடினால் என்ன ஏதென்று பார்ப்பார்கள். வியப்பார்கள். ஒரு நபி ஓடினால்? ஒருவர் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பின்தொடர்ந்து ஓடி, என்ன விஷயம்? ஏன் ஓடுகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், நான் முட்டாளைப் பார்த்து ஓடிக் கொண்டிருக்கின்றேன் என்றார்களாம். அதற்கு அவர்கள், நபியே நீங்கள்

இறந்தவரையும் ஹயாத்தாக்கியவர்கள். பிறவிக் குருடைக் குணப்படுத்தியவர்கள். அத்தகைய நீங்கள் முட்டாளைப் பார்த்து ஓடுகிறீர்களே...? என்று கேட்டுள்ளார். அதற்கு ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், இறந்தவரை உயிர்ப்பித்து விடலாம், பிறவிக்குருடைக் குணப்படுத்தி விடலாம். எல்லாம் செய்துவிடலாம். ஆனால், முட்டாளைத் திருத்தவே முடியாது. அதனால் ஓடிக் கொண்டிருக்கின்றேன் என்றார்களாம். மடைமையில் இருப்பவர்களுக்கு கல்வி ஒளியைக் கொடுத்தவர்கள் ஆசிரியர்கள். அவர்கள் மடமையைப் போக்கும் மருத்துவர்கள்.

ஆசிரியர்கள் யார் தெரியுமா? தங்கள் வாணாள் முழுக்க தங்கள் தோள்களில் இருந்து இறக்காதவர்கள். சுமந்து கொண்டே இருப்பவர்கள். ஆசிரியர் பின்னாளில் அந்த மாணவரைப் பார்க்கும்போது, இது என் பிள்ளை, என்னிடம் ஓதியவர் என்று புளகாங்கிதம் அடைந்து கொண்டே இருப்பார். ஆசிரியர் என்பது பணியல்ல, உறவு!

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள். மாதா நம்மைப் பெற்று வளர்ப்பது பணியா? அது உறவு. மாதாவுக்குச் சம்பளம் தருகிறோமா? என்னை வளர்த்ததற்குச் சம்பளம் என்று கொடுக்க முடியுமா? ஏனென்றால், அது உறவு. இறக்கப்படாத உறவு.

சமீபத்தில் நீங்கள் ஒரு நிகழ்ச்சி பார்த்திருப்பீர்கள் அல்லது செய்தியாகப் படித்திருப்பீர்கள். இன்போசிஸ் நிறுவனத்தின் அதிபர் நாராயணமூர்த்தி அவர்களின் மனைவி சுதா மூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு கல்லூரி ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சிக்காகக் கல்லூரிக்கு வந்தவர், தமது ஆசிரியரை அந்தக் கல்லூரியில் பார்த்துவிட்டார். உடனே அவரிடம் சென்று பேசி முகமன் விசாரித்து, நீங்களும் வாருங்கள் இரண்டு பேரும் சேர்ந்து விளக்கேற்றி கல்லூரியைத் திறந்து வைப்போம் என்று அழைத்தார்கள். என் வாழ்வில் விளக்கேற்றியது நீங்கள். எனவே இருவரும் சேர்ந்து இந்தக் கல்லூரிக்கு ஒளியேற்றலாம் என்று அழைத்தார்கள். அந்த ஆசிரியருக்கு முதலில் இவரை அடையாளம் தெரியவில்லை. அவர் இவரைப் போன்று பல்லாயிரம் பேருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தவர். இவர் இன்போசிஸ் அதிபரின் மனைவி என்பதால், அந்த ஆசிரியர் மரியாதை நிமித்தமாக இருகை கூப்பி வணங்கினார். உடனே பதறிய சுதா மூர்த்தி அவர்கள், அந்த ஆசிரியரின் கையை விலக்கிவிட்டு, அந்த மேடையிலேயே அவர் காலில் விழுந்துவிட்டார். ஆசிரியருக்கு நிகராக உலகத்தில் யாரும் வரமுடியாது. அந்த விழாவில் அந்த அம்மையார், பெறுபவர்களும் தருபவர்களும் சமமாக முடியாது. பெறுபவர் வேறு, தருபவர் வேறு, ஒருகாலத்திலும் ஒன்றாக முடியாது. ஆசிரியர் தருபவர். அவருக்கு நிகராக யாரும் வரமுடியாது என்று தம் பேச்சில் குறிப்பிட்டார்.

எனவே, ஆசிரியர் யார்? என்று யோசிக்க வேண்டும். நம்மை ஆக உயரத்திற்கு உயர்த்திய லிஃப்ட் அவர்தானே?! ஏணி என்று கூடச் சொல்ல முடியாது. அவர் லிஃப்ட். 6 ஆவது மாடியில் இருப்பவரை 160ஆவது மாடியில் கொண்டுபோய் ஆசிரியர்கள் விட்டுவிடுகிறார்கள்.

ஆசிரியர், பழம் தரும் மரம். பறவைகள் தேடி வருகின்ற பழம் தரும் மரம். இந்த மதுரஸாவில் பழம் தரும் மரங்கள் இருக்கின்றன என்று கடிதமும் எழுதவில்லை. தூதும் அனுப்பவில்லை. எதுவுமே இல்லை. பழங்களை நாடி பறவைகள் வந்து சேருகின்றன. நல்ல பழங்கள் இருக்கின்றன என்பதற்காக, நல்ல பழமுதிர்ச்சோலை என்பதற்காக, பறந்து வந்த பறவைகள் இவர்கள், விரைந்து வந்த பறவைகள் இவர்கள். அல்லாஹு அக்பர்.

இந்த ஆசிரியர்கள், இங்கே என்ன கற்றுத் தருகிறார்கள், தெரியுமா? குர்ஆன், ஹதீஸ், ஃபிக்ஹ், இஜ்மாஉ.... இதைத்தாண்டி மஉரிபா எனப்படுகின்ற இறைஞானம். இங்கே கற்றுக் கொடுக்கப்படுகின்ற குர்ஆன், சாதாரணமானதல்ல. குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், மழைநீருக்கு ஒப்பாகச் சொல்லலாம். அதனால், மாணவர்களுக்கு நான் சொல்வேன், நீங்கள் தண்ணீரைப் போல் வாழ வேண்டும் என்று. குர்ஆன், ஹதீஸ் போன்றவை, மழைக்கு ஒப்பானது. மழையைப்பற்றிச் சொல்லும்போதும் அல்லாஹ் அதனை முபாரக் என்கிறான். குர்ஆனைப் பற்றிச் சொல்கின்றபோதும் முபாரக் என்கின்றான். தண்ணீர் எப்படி பரக்கத்தோ, அதைப் போன்றே குர்ஆனும் பரக்கத் என்பதாகக் கூறுகின்றான். பரக்கத்திற்கு நேரடியான தமிழ் அர்த்தம், அதிகமாகுதல் என்று பொருள் கொண்டால் தவறு, கூடுதல் என்று சொன்னால் தவறு, பெருகுதல் என்றாலும் தவறு. அபிவிருத்தி என்று சொன்னாலும் தவறு. ஆக, பரக்கத் என்றால் என்னவென்று விளங்க வேண்டும்.

நான் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னால், பரக்கத் என்றால் என்னவென்று விளங்கினேன். நண்பர் ஒருவர் கடை திறக்கிறார். என்னிடம் வந்து, ஹள்ரத் நீங்கள் தான் பரக்கத்திற்கு துஆ ஓதி திறந்து வைக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டார். அந்தக் கடை என்னவென்றால், பரக்கத் லாட்டரி சென்டர், அந்தக் கடைக்குப் பக்கத்து கடை பிஸ்மில்லா லாட்டரி சென்டர். அது அரகத்தா பரக்கத்தா என்று தெரியாமல் போய்விட்டது.

பரக்கத் என்றால், ஒன்று ஒன்றாக இருக்கும். ஒரு இலட்சத்தின் வேலையைச் செய்யும். ஒன்று ஒன்றாகத் தான் இருக்கும். குர்ஆன் அப்படித்தான். அன்றைக்கு எப்படி இருந்ததோ, அப்படியே இன்றைக்கும் புள்ளி கூட மாறாமல் இருக்கிறது.

ஆனால், அதற்கு முடிவுரை இருக்கின்றதா? ஆனால், அந்தக் கருத்துகள் முடிவு பெறுமா? அந்தக் குர்ஆன் எத்தனை கோடி ஆலிம்களையும் அறிஞர்களையும் உருவாக்கி இருக்கிறது. அதே போன்று தான் மழைநீர் மண்ணில் விழுகிறதன் மூலம், எத்தனை கோடி மரங்களையும் செடிகளையும் உருவாக்குகின்றது?! அதுதான் பரக்கத். இந்த பரக்கத்தைத் தான் தங்களது மாணவர்கள் மூலம் ஆசிரியர்கள் சமூகத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். குர்ஆனையும் குர்ஆனின் விளக்கத்தையும் கற்றுக் கொடுத்தவர்கள்.

தண்ணீரின்றி மனிதன் உலகில் வாழ முடியாது. நீரின்றி அமையாது உலகு. தண்ணீர் நஃப்ஸுக்கு ஷிஃபா. தண்ணீர் உடலுக்கு ஷிஃபா. ஆனால், குர்ஆன் உள்ளத்திற்கு மருந்து.

குர்ஆன் எப்படிப்பட்டது தெரியுமா? தண்ணீரை – மழைநீரை யாரேனும் தங்களது சக்தியால் தடுத்து நிறுத்திட முடியுமா? தட்டை வைத்தோ, ஆஸ்பெட்டாஸ் சீட்டை வைத்து மழைநீரைத் தடுத்து நிறுத்திவிட முடியுமா? குர்ஆனின் வருகையையும் யாராலும் உலகில் தடுத்து நிறுத்திட முடியாது. குர்ஆனும் தண்ணீரும் மிக அற்புதமானவை. மழைநீரின் சொட்டுகளை யாராவது எண்ணிவிட முடியுமா? அதேபோன்று குர்ஆன் வழங்கும் கல்வி ஞானத்தையும் யாராலும் எண்ணமுடியாது. மழைத்துளிகளையும் எண்ணிலடங்காக் கருத்துகளை உள்ளடக்கியது குர்ஆன். அந்தக் குர்ஆன் தான் இந்த மதுரஸாவிலிருந்து கற்றுக் கொடுக்கப்படுகிறது. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸுகள் உரைக்கும் கருத்துகளை யாராவது அளந்து காட்ட முடியுமா? அவை பூரணமாக இந்த மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒருவேளை மழை ஒட்டுமொத்தமாக இறங்கியது என்றால், அழிவு தான் ஏற்படும். அதனால் தான் அல்லாஹ் குர்ஆனை ஒட்டுமொத்தமாக இறக்கவில்லை. மழை தேவைக்கேற்றவாறு இறங்க வேண்டும். அப்போதுதான் செழிப்பைத் தரும். அதேபோன்று குர்ஆனும் தேவைக்கேற்றவாறு 23 ஆண்டுகளாக இறங்கியது. அதனால், குர்ஆனும் செழிப்பைத் தருகிறது. அந்தத் தண்ணீர் பல நிறங்களைக் கொண்ட, பல சுவைகளைக் கொண்ட மரங்களை உருவாக்கியது. மழைநீர் ஒன்றாகத் தான் பொழிகிறது. ஆப்பிளும், ஆரஞ்சும் இன்னும் பிற பழங்களும் தனித்தனிச் சுவையோடு விளைகின்றன. ஒரே மதுரஸாவில் தான் ஓதுகிறோம். ஆனால், பல்வேறு கருத்துகளைக் கொண்டவர்கள் வெளியாகிறார்கள். ஒருவர் டாக்டர் ஆகிறார், ஒருவர் இன்ஜினீயர் ஆகிறார், ஒருவர் ஆலிம்ஷாவாகிறார், ஒருவர்

முதர்ரிஸாகப் போகிறார். பல்வேறு வகையான பழங்கள். பல்வேறு வகையான வளங்கள். எல்லாம் குர்ஆன் கொடுக்கின்ற செழிப்பு.

இன்னொன்றும் இருக்கின்றது. நீச்சல் தெரியாதவன் தண்ணீரிலே குதித்து முத்தெடுத்துச் செல்லலாம் என்றால், அது முடியாது. நீச்சல் தெரிந்தால் தான் அது சாத்தியம். அதேபோன்று, குர்ஆனில் மூழ்கி முத்தெடுக்க, நீச்சல் கற்றுக் கொடுப்பவர்கள் ஆசிரியர்கள். மூழ்கத் தெரியாதவனெல்லாம் குர்ஆனிற்குள்ளே மூழ்கச் சென்றால், மூர்ச்சையாகிவிடுவான்.

தண்ணீரை ஒருவன் தேவைக்கு அதிகமாகக் குடித்தால் ஆபத்துதான். அதே போன்று தான் குர்ஆனும். குர்ஆனில் உள்ள எல்லாமே எனக்குத் தெரியும் என்று கூறியவன் ஒருவனுமில்லை. அப்படிச் சொன்னால் அவன் மூடனே. ஆகவே, குர்ஆனை எப்படிக் கையாள வேண்டும் என்று கற்றுக் கொடுத்தவர்கள், ஆசிரியர்கள். மழைநீர் தண்ணீர்ப் பஞ்சத்தை நீக்கும். குர்ஆன் மார்க்கப் பஞ்சத்தை நீக்கும்.

குர்ஆனை மட்டும் ஒருவர் கற்றுக் கொண்டார் என்றால், அல்லாஹ்விடமிருந்து 5 பொருட்கள் இலவசமாகக் கிடைக்கும். அதை அல்லாஹ்வால் மட்டுமே கொடுக்க முடியும். குர்ஆனைக் கற்றுக் கொண்டால், அந்த ஐந்தையும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். பட்டம் பெறும் மாணவர்களே உங்களுக்கு ஐந்து இலவசமாகக் கிடைக்கும். அதில் ஒன்று, ரிஜ்க், இரண்டாவது ஆராக்கியம். இதனை அல்லாஹ் தான் கொடுக்க வேண்டும். மூன்றாவது நிம்மதி. இதனையும் அல்லாஹ் தான் கொடுக்க வேண்டும். நான்காவது இஸ்ஸத் (கண்ணியம்). இதனை அல்லாஹ் தான் கொடுக்க முடியும். ஐந்தாவது இல்ம். இதனையும் அல்லாஹ்வே அருள முடியும்.

உலகத்தில் ரிஜ்க்கை யாராவது கொடுக்க முடியுமா? நாளைக்கு என்ன உணவு சாப்பிடுவோம் என்று யாராவது உறுதி கூற முடியுமா? அல்லாஹ் தான் கொடுக்க வேண்டும். உலகத்திலேயே சிறந்த ரிஜ்க் ஆலிம்களுக்குத் தான் அல்லாஹ் கொடுக்கின்றான். வாரத்தில் 5 நாட்கள் கூட பிரியாணி சாப்பிடக்கூடும். இவ்வாறு மற்ற யாரும் சாப்பிட்டால், அவர்களது உயிருக்கும் உடலுக்கும் தீங்கு ஏற்படும். ஆனால், அதிலும் அல்லாஹ் ஆரோக்கியத்தை வழங்குகின்றான். ஆலிம் காலம் முழுக்க பிரியாணி சாப்பிட்டுக் கொண்டிருப்பார். வாரத்திற்கு ஒன்று, மாதத்திற்கு ஒன்று என பிரியாணி சாப்பிட்டவர்கள் நெஞ்சுவலி என்று மருத்துவமனையில் படுத்துக் கொள்கிறார்கள். ஆனால், ஆலிம்கள் ஆரோக்கியத்தோடு இருப்பார்கள். இவர்கள் குர்ஆன் ஓதிக் கொண்டே இருப்பதால், எல்லா வலிகளுக்குமான நிவாரணம் அதில் இருக்கிறது. எல்லாம் சரியாகிவிடும். உலகில் பலருக்கு ஏ.சி.

அறையில் படுத்துக் கொண்டு உறக்கம் வரவில்லை. டவுன் பஸ்சில், வெயில் காலத்திலும் குறட்டை விட்டு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டே செல்பவர்கள் ஆலிம்கள் மட்டும்தான். எங்கே எப்படி இடம் கிடைத்தாலும் படுத்ததும் நிம்மதியாக ஜம்மென்று தூங்குபவர்கள் ஆலிம்கள் தாம். அந்த நிம்மதியை ரப்பு கொடுக்கின்றான். அடுத்தது, இஸ்ஸத். பள்ளிவாசலில் எவ்வளவு பெரிய பெரிய ஆட்கள் யார் இருந்தாலும் தொழ வைப்பதற்கு யார் வந்தாக வேண்டும்? கடிகாரத்தையும் வாசலையும் மாறி மாறிப் பார்த்து, ஆலிம்ஷாவுக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள். திருமணம் நடத்தி வைக்க வேண்டும் என்றாலும் ஆலிம்ஷாவைத் தான் முன்னிலைப்படுத்துவார்கள். அவர்தாம் திருமணத்தை நடத்தி வைப்பார். இந்த இஸ்ஸத் அல்லாஹ் கொடுக்கின்றான்.

கல்வியில் மற்றவையெல்லாம் கரை. அல்லாஹ்வைப் பற்றிச் சொல்லிக் கொடுப்பதுதான் கல்வி. புத்தகத்தை யார் வேண்டுமானாலும் வாங்கிக் கொடுத்துவிடலாம். ஆனால், புத்தியை வாங்கிக் கொடுப்பவர்கள் யாரேனும் இருக்கின்றார்களா? சூப்பர் மார்க்கெட்டில் எனக்கு 4 கிலோ புத்தி வேண்டும் என்று வாங்கி விடமுடியுமா? எங்கேயாவது கிடைக்குமா? அதனை அந்த இல்மை ரப்பு தான் கொடுக்கின்றான். இவை அத்தனையும் உங்களுக்கு இலவசம். ஆசிரியர்கள் மூலமாக அல்லாஹ் கொடுக்கின்றான். தண்ணீர் உணவுப் பஞ்சத்தை நீக்கும். குர்ஆன், மார்க்கப் பஞ்சத்தை நீக்கும். அன்பிற்குரியவர்களே, தண்ணீர் நெருப்பை அணைக்கும். உங்களிடத்தில் இருக்கின்ற குர்ஆன், நரக நெருப்பை அணைக்கும். பத்து நரகவாசிகளுக்குச் சொர்க்கத்தை வழங்கும் சுபச் செய்தி சொல்லக்கூடிய ஆற்றல், உங்களுக்கு உண்டு என்றால், இத்தனையையும் உங்களுக்கு வழங்கிய ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள். என் பேச்சை இன்னும் ரொம்ப நேரம் எடுத்துக் கொண்டு போக முடியாது. ஏனென்றால், பசியை உணர்கிறேன். ஓர் ஆசிரியர் என்ற காரணத்தினால், பசியை உணர்கிறேன். ஒரு செய்தியை மட்டும் சொல்லி நிறைவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

உங்களுக்கு ஆசிரியர்கள் இவ்வளவு கொடுத்தார்களல்லவா? நீங்கள் இனி தீன்குலத் தெருக்களுக்குச் செல்லும்போது, தண்ணீரைப் போல் செல்ல வேண்டும். தண்ணீருக்கு என்ன ஆற்றல் தெரியுமா? நிற்காமல் ஓடிக் கொண்டே இருக்கும். அதே போல் கற்ற கல்வியோடு நின்று விடாமல் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி ஓடிக் கொண்டே இருப்பதால், சொரசொரப்பான பாறைகளைக் கூட வழுவழுப்பாக மாற்றும். நீங்கள் ஓடிப் பாய்ந்து கொண்டே இருந்தால், சொரசொராப்பான பாறைகளைக் கூட வழுவழுப்பாக மாற்ற முடியும். தண்ணீருக்கு ஒரு பண்பிருக்கின்றது. பள்ளங்களை நிரப்பிச் செல்லும். மேட்டை நிரப்பாது. நீங்களும் சமூகத்தின் பள்ளங்களை நிரப்பிச் சமமாக்க வேண்டும். நிறைய பேர்

கஷ்டத்திலும் துன்பத்திலும் இருப்பார்கள். நாம் அந்த மஹல்லாவில் சென்று அந்தப் பள்ளங்களை நிரப்பிச் செல்ல வேண்டும்.

தண்ணீருக்குப் பல பெயர்கள் இருக்கின்றன. அதுபோல் நீங்கள் வாழ வேண்டும். மேலிருந்து கீழே கொட்டினால் அதற்குப் பெயர், அருவி. ஓடினால், ஓடை. பாய்ந்தால் ஆறு. கீழிருந்து மேலெழுந்து பொங்கினால், ஊற்று. கலந்தால் கடல். சில நேரத்தில் நீங்கள் அருவியாய்க் கொட்ட வேண்டும். சில நேரத்தில் ஓடை போல் ஓடிக் கொண்டிருக்க வேண்டும். சில நேரத்தில் பாயவும் நேரிடும். சில நேரத்தில் ஊற்றாய்ப் பொங்க வேண்டும். கடைசியில் ஷைகில் கலக்க வேண்டும். இதுதான் நீங்கள் வாழும்முறை.

அன்பிற்குரியவர்களே, தண்ணீராய் இருங்கள். ஆசிரியரை மதியுங்கள். ஷைகிடத்தில் ஃபனாவாகிக் கலந்திடுங்கள். வாழ்வில் உயர்வைப் பெறுங்கள் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி விடைபெறுகின்றேன்.

... என்பதாக, ஹள்ரத் மௌலவி. அல்ஹாஜ். அல்லாமா. சொல்முரசு அபூதாஹிர் ஆலிம் பாகவி ஆலிம் அவர்கள் தங்களது சொற்பொழிவை நிறைவு செய்து கொண்டார்கள். (தொடர்ந்து பேசுவார்கள்)

**நெகிழ்ச்சித் தொகுப்பு : இளங்கவி.அ. நைனார் முஹம்மது அன்சாரி, M.A., MLIS., ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி**

---

# யாஸீன் அலி மௌலானா!



காண்பவை யாவும் யாஸீன் அலி
கண்களின் நீரில் யாஸீன் அலி
சுவாசங்களாய் யாஸீன் அலி
உருகிடும் என் உயிரில் யாஸீன் அலி
பகல் இரவுகளில் வரும் நினைவுகளில் ..
ஒளியாய் மிளிரும் எம் யாஸீன் அலி

இயற்கையின் அழகில் யாஸீன் அலி
இருதயத் துடிப்பிலும் யாஸீன் அலி
மேகங்களாய் சோகங்களைக்
கலைத்திட கரம் தேடும் யாஸீன் அலி

ஞானத்தின் ஜோதி யாஸீன் அலி
ஞாலத்தின் தேவையும் யாஸீன் அலி
முஹிய்யுத்தீன்.. காதிர் எனத் தோன்றிய
என் உயிரே யாஸீன் அலி...

ஹெச். ரெஜியாம்மாள் –
ஹக்கிய்யுல் காதிரிய்,
திருப்பூந்துருத்தி

மெட்டு– காலங்கள் யாவும்

திரை –சீதா ராமன்



# மதுரஸா நன்கொடை



**திண்டுக்கல்**

புதுக்கோட்டை - நஜிமுன்நிஷா குழந்தைக்கு பிறந்தநாளை முன்னிட்டும் – நிய்யத் நிறைவேரியதை முன்னிட்டும் - சிறப்பான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 2000/

திண்டுக்கல் **M.** நதீர் **S/o J.**முஹம்மது சதக்கத்துல்லா நிய்யத்படி மாத்ாந்திர நன்கொடை ரூ. 1600/–ம்,

மதுரை **K.** புதூர் **S.** சாகுல் ஹமீது துஆ செய்ய மாதாந்திர சதக்கா ரூ. 1000/–ம்,

வழுத்தூர் **G.** அப்துல் ரஹீம் குடும்பத்தினர் நல்வாழ்விற்கு துஆ செய்ய மற்றும் மவ்லிது ஷரீப் ஓதி துஆ செய்ய ரூ. 800/–ம்

கிளியனூர் - முஹம்மது ஃபஹிம் ஹாஜத்துக்கள் நிறைவேறியதற்கும் உடல் ஆரோக்கியமான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 5000/–ம்,

காரைக்குடி **S.** ஜெஸ்மின் பானு சஹாப்தீன் வியாபாரம் அபீவிருத் திக்கும் சந்தோஷமான நல்வாழ்விற்க்கு நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 2000/–ம்,

சென்னை **S.** சர்மிளா உசேன் துஆ செய்ய உணவுக்காக சதக்கா ரூ. 1500/–ம்,

காரைக்கால் **R.A.** அப்துல் பாருக் பாத்திமா கடன்கள் அழிந்து குடும்பத்தினர் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய மாதந்திர நன்கொடை ரூ. 500/–ம்,

கிளியனூர் முஹம்மது ஃபஹிம் ஆரோக்கியமான நல்வாழ்விற்கும் லைசன்ஸ் விரைவில் கிடைக்க வேண்டி துஆ செய்ய ரூ. 500/–ம்,

ஈரோடு **M.** அப்துல் கரீம் ஹாஜத்துக்கள் நிறைவேறவும் நோயற்ற வாழ்விற்கு துஆ செய்யவும் ரூ. 500/,

நமது சபையின் மூத்த ஆத்மசகோதரர் ஷைகு நாயகம் அவர்களின் நெருங்கிய பிள்ளை மர்ஹூம் **Prot.** முஹம்மது கனி அவர்களின் மகன் **Dr.** முஹம்மது யாஸின் அவர்களின் பேத்தியும் - கோவை நஜிஹா - முஹம்மது சமீர் இவர்களின் மகள் சஹானா பெயரில் அகீகா ஆடு 1க்கு ரூ. 12000/–ம்,

பாக்கம் கோட்டூர் மர்ஹூம் S. பஜ்ருல் ஹக் அவர்களின் வருட பாத்திஹாவை முன்னிட்டு மறுமை நல்வாழ்விற்கு துஆ செய்ய உணவுக்கு ரூ. 5000/-ம்,

வழுத்தூர் மர்ஹூமா நூர்ஜஹான் அவர்களுக்க துஆ செய்ய ரூ. 1000/-ம்,

கிளியனூர் A. அப்துல் பத்தாஹ் முஹிய்யுத்தீன் ஆண்டவர் மௌலிது ஓதி துஆ செய்ய ரூ. 1100/-ம்,

மடத்துக் குளம் S.P. சேக் அப்துல்லா சாலிஹா பீவீ துஆ செய்ய மாதந்திர நன்கொடை ரூ. 1000/-ம்,

கும்பகோணம் - மேலக்காவேரி ரஹிமா பீவீ நீண்ட நாள் கைவலி சரியாகி பரிபூரண சுகத்துடன் வாழ நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 1000/-ம்,

ஈரோடு - ஹாஜி K.M. மொய்தீன் அப்தல் கதர் - ஹாஜிய M.E. மஹபுன்னிஸா குடும்பத்தினரின் நோயற்ற நீண்ட நல்வழ்விற்கும் அனைத்து நாட்டங்களும் நிறைவேறவும் காலியாக உள்ள 2 கடை வாடகைக்கு விடவும் நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 1000/-ம்,

கிளியனூர் A. அப்துல் பத்தாஹ் ஸ்கின் பிரச்சனை சரியாகி - உடல் நலம் பரிபூரண சுகத்துடன் மகிழ்ச்சியான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 5000/

பாக்கம் கோட்டூர் S. மர்ஹூம் பஜ்ருல் ஹக் அவர்களின் மஃபிரத்திற்காக துஆ செய்ய ரூ. 1000/

பாக்கம் கோட்டூர் தவ்லத்துல் ஃபஹ்மிதாவிற்க்கு சாலிஹான மணமகன் அமைந்து நல்லபடியானக சிறப்பாக திருமணம் நடைபெற துஆ செய்ய ரூ. 500/-ம்

**CAMP :** ஜெர்மனி - ஹாஜிரா பானு அவர்கள் பிள்ளைகள் அப்துல் ரஹ்மான் - அப்துல் ஹலீம் - ஷிபா பாத்திமா இவர்கள் நன்றாகப் படித்து வாழ்க்கையில் உயர் பதவிகள் வகித்து சிறப்புடன் வாழ துஆ செய்ய தலா ரூபாய் 1000வீதம் மொத்தம் ரூ. 3000/

அய்யம்பேட்டை மதர்லேண்ட் J. சமிமா பர்வீன் மாமியார் ஜுபைதாபேகம் மறைவை முன்னிட்டு மஃபிரத்திற்காக துஆ செய்ய ரூ. 500/ம்,

எமனேஸ்வரம் K.S. சம்சுதீன் மரியம் ஜெமீலா குடும்பத்தினர் மற்றும் சேக் பரீத் பாத்திமா நஜிஹா குடும்பத்தினர் சிறப்பான நல்வாழ்விற் கு துஆ செய்ய ரூ. 5000/-ம்,

**மதுக்கூர்**

கே.சையது அகமது, எஸ். பெனாசிர் இவர்களின் மகளார் எஸ்.முஃப்லிலா செரீன் பிறந்த நாளை முன்னிட்டு (13.10.24) நீண்ட ஆயுளுக்கும் நல்வாழ்வுக்கும் துஆ செய்ய ரூ. 2000/-ம்,

கே.சையது அகமது, எஸ். பெனாசிர் நிய்யத்து நிறைவேறியதற்காக துஆ செய்ய ரூ. 1000/-ம்,

ஏ.எஸ். ரஹ்மத்துன்னிஸா அவர்களின் உடல்நலம் பூரண குணமடைய துஆ செய்ய ரூ. 1000/-ம்,

பி. ஆசியம்மாள் **W/o.** பீர் முஹம்மது நாட்டங்கள் நிறைவேறியதை முன்னிட்டும் நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய ரூ. 5000/-ம்,

ஏ.எம்.ஜாஹிர் உசேன் மகனார் முகமது இஸ்ஹாக் பிறந்த நாளை முன்னிட்டு வாப்பா நாயகம் அவர்களின் பாதுகாப்பு வேண்டி துஆ செய்ய ரூ. 1000/-ம்,

ஏ.ஜாஹிர் உசேன், ஏ.அப்துல் ஜப்பார், ஏ. அமீர் மைதீன், ஏ. முஜீபுர் ரஹ்மான் அவர்களின் தாயார் ஷம்சுல் பீபி அவர்களின் 7ஆம் நாள் ஸியாரத்தை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 5000/-ம்,

கே.ஓ.பி.எம். முஹம்மது பாரூக் உண்டியல் சேமிப்பு செய்து துஆ செய்ய ரூ. 5000/-ம்,

ஏ.அப்துல் நாசர் நியூ லண்டன் ஸ்டீல் உண்டியல் துஆ செய்ய ரூ. 2581/-ம்,

ஐ. அப்துல் கரீம் தனது நேர்ச்சை நிறைவேறியதை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000/-ம்,

ஏ. சேக்முஹம்மது -எஸ்.சுலைஹா மர்யம் தம்பதியருக்கு (25.9.24)குழந்தை பிறந்ததை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 2000/-ம்,

ஏ.அஹமது கலீல்- ரிஹான் ஜன்னத் தம்பதியருக்கு குழந்தை பிறந்ததை (1.10.24) முன்னிட்டு துஆ செய்ய ரூ. 2000/-ம்,

ஏ. பல்கீஸ் பீவி தனது நாட்ட தேட்டங்கள் நிறைவேற துஆ செய்ய ரூ. 1500/-ம்,

எம். அப்துல் அஹது தனது நாட்டதேட்டங்கள் நிறைவேற துஆ செய்ய ரூ. 2000/-ம்,

**வழங்கினர். வழங்கிய வள்ளல்களுக்கு அல்லாஹ் அவர்களின் நாட்டங்களை வாப்பா நாயகம் அவர்கள் பொருட்டால் நிறைவேற்றியருள்வானாக! ஆமீன் !**

---

**காதலுறும் தெய்வக்**

**காதலரை யென்றும் - சேர்ந்திடுவோம்**

**(நிதம்) சேர்ந்திடுவோம்**

*சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் -*

# அபுதாபியில்
# நூற்கள் வெளியீட்டு விழா காட்சிகள்!





**மேன்மை தங்கிய மெய்ஞ்ஞான சொரூபி, குத்புஸ்ஸமான், வஃபரீதுல் அவான், ஆரிபு பில்லாஹ், ஸெய்யிதுனா, ஹள்ரத்**

# மஹானந்த பாபா முஹம்மது அப்துல் காதிர் ஒலியுல்லாஹ் நாயகம் (ரலி)

அவர்களின்

# 67 ஆவது வருட கந்தூரி விழா

பிறப்பு: ஹிஜ்ரி 1309 மறைவு: 1379

பிறப்பு: ஈசவி 1891 மறைவு; 1959

நிகழும் ஹிஜ்ரி 1445 ஜமாதுல் அவ்வல் பிறை 15 க்கு **17.11.2024 ஞாயிற்றுக்கிழமை** பின்னேரம் திங்கள் கிழமை இரவு ஹள்ரத் மஹானந்த பாபா முஹம்மது அப்துல் காதிர் ஒலியுல்லாஹ் நாயகம் (ரலி) அவர்களின் தர்ஹாவில் மௌலிது ஷரீபு தொடங்கி **27.11..2024 புதன் கிழமை** அன்று காலை 7.30 மணியளவில் திருக்குர்ஆன் ஷரீபு ஓதி தமாம் செய்யப்பட்டு அன்று பின்னேரம் **வியாழக் கிழமை இரவு மேற்படி பிறை 25 க்கு கந்தூரி விஷேச விழா** சிறப்பாகக் கொண்டாட இருப்பதால் தாங்களும் தங்களின் பந்துக்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்து வைத்து ஹள்ரத் மஹானந்த பாபா முஹம்மது அப்துல் காதிர் ஒலியுல்லாஹ் நாயகம் (ரலி) அவர்களின் துஆபரக்கத்தைப் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

மேற்படி கந்தூரி நற்பணிகளுக்கு அனுப்பும் தங்கள் பொருள் உதவிகளை (காணிக்கைகள்) அடியிற்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

**ஹாஜி. A.S.A. ஜமால் யூசுப்**

**மர்ஹூம். A.J.தீன் காக்கா அவர்களின் மகன், அல்ஹாஜ்.மர்ஹூம் A.S.அம்ஜத் இப்றாஹீம் அவர்களின் மருமகன்,**

செயலாளர், பொறுப்பாளர், & தர்ஹா டிரஸ்டி,

ஹள்ரத் மஹானந்த பாபா ஒலியுல்லாஹ் நாயகம் தர்ஹா,

கண்ணாடி ஒலியுல்லாஹ் சாலை, மேற்கு மேலத்தெரு,

**கீழக்கரை – 623 517, இராமநாதபுரம் மாவட்டம்.**

**போன்: 04567– 241716.**

**செல்: 99445 25340, 98424 81340**

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2024 - 2026
Date of Publication on 7th, Posted on 10th,
of Every Month at H.P.O. Dindigul



மௌலவி, அல்லாமா, B.M. ஜியாவுத்தீன் (பாகவி) ஆலிம் அவர்கள்
(துணைத் தலைவர் தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமா சபை)



Dr.ஷெய்ஹ் அஹ்மத் ஃபரீத் அல்மனீரி (அல்அஸ்ஹரி) Ph.D. அவர்கள்.
எகிப்து மற்றும் மொரோக்கோ நாட்டிற்கான அக்பரிய்யாத் தரீக்காவின் ஆன்மிகத் தலைவர்,
பன்னூலாசிரியர், நிறுவனர், முதல்வர், மாறும் ஹகீக்கா ஆய்வு மையம் எகிப்து.)



இஸ்லாமியகீத பாடகர்
S.M அபுல் பரகாத் ஹக்கிய்யுல் காதிரீ அவர்கள்



கலீபா, ஆலிம் புலவர். S. ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ
ஆசிரியர், மறைஞானப் பேழை மாத இதழ், தலைவர் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை, இந்தியா.



கஸீதா பாடகர்
அல்ஹாஃபிழ், B.S. அஹ்மத் ஸாலிஹ் ஃபஹ்மி B.E. அவர்கள்



மௌலவி, அல்ஹாஃபிழ், Dr.V.S. அன்வர் பாதுஷா (உலவி)ஆலிம் MA,M.phil.Ph.D அவர்கள்
(பொதுச் செயலாளர், தமிழ்நாடு மாநில ஜமாஅத்துல் உலமா சபை)

Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee